

நம்பியாண்டார் நம்பி



ப. இராமலிங்கம்

நம்பியாண்டார் நம்பி

திரு. ப. இராமலிங்கம், பி.எஸ்சி., ஏ.அய்.சி.,
(முன்னாள் தனி அலுவலர்
வளர் தமிழ் மன்றம்
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை - 600 025.)

வலம்புரி பதிப்பகம்
13/7, குப்பையர் தெரு,
கொண்டித்தோப்பு,
சென்னை - 600 079.

நூல் விவரம்

நூலின் பெயர்	:	நம்பியாண்டார் நம்பி
பொருள்	:	ஆன்மிகக் கட்டுரைகள்
ஆசிரியர்	:	ப. இராமலிங்கம்
பதிப்பாண்டு	:	முதல் பதிப்பு 2004
பதிப்பாளர்	:	வலம்புரி பதிப்பகம், சென்னை
உரிமை	:	ஆசிரியர்
மொழி	:	தமிழ்
நூலின் அளவு	:	கிரவுன்
தாள்	:	11.6 கி.கிராம்
கட்டமைப்பு	:	அட்டைக்கட்டு
அச்சு எழுத்து	:	12 புள்ளி
மொத்த பக்கம்	:	128
விலை	:	ரூ.40/-
கணிஅச்சு	:	'சிவம்'ஸ், பேசி: 9444232005
அச்சிட்டோர்	:	ஜெ.ஜெ. அச்சகம், சென்னை-81

பொருளடக்கம்

	மதிப்புரை	4
	அணிந்துரை	7
	என்னுரை	9
1.	அவ்வைக்கு அருளிய ஆனைமுகத்தான்	13
2.	நம்பியாண்டார் நம்பிக்கு அருளிய தும்பிக்கையான்	31
3.	குமரகுருபரர் காட்டும் அன்னை சிவகாமவல்லி	48
4.	குமரகுருபரர் கூறும் அங்கயற்கண்ணியின் அரசாட்சி	59
5.	விடையேறி நடத்திய வேடுபறி நாடகம்	77
6.	தாடங்கம் வீசித் தண்ணளிபொழிந்த அபிராமி	86
7.	புலிசை முனிவர் ஞானியார் அடிகள்	112
8.	திலகவதியம்மை துதி	121
9.	கருணாமூர்த்தி காஞ்சி மாமுனிவர்	124

தலையே நீ வணங்காய்

பழைமை போற்றும் பண்பு இந்தப் பரபரப்பான சூழலில் மாறிவிட்டது. சமயம், தத்துவம் என்பவை தள்ளாத வயதுடையோருக்கு என இளைய உலகம் எண்ணுகிறது. 'தள்ளாத' என்பதற்குத் 'தவறாத', 'தவறு செய்யாத' என்பது பொருள். அப்படிப் பார்த்தால் சமய, தத்துவ நூல்கள் இளைய வயதினர்க்கே மிகவும் ஏற்றவை.

அண்மையில் மாதா அமிர்தானந்த மயீ அவர்களின் உரையில் படித்தேன். 'புல்வெளியில் நடப்பது எளிது; விரைவில் அங்கே ஒற்றையடிப் பாதை தோன்றிவிடும். மலை மேல் ஏறுவது கடினம்; பாதையும் விரைவில் அமையாது'. புல்வெளி என்பது இளைய உலகம். அவர்களுக்குச் சமய உண்மைகளைத் தொடக்கத்திலேயே கூறினால் துவண்டு போக மாட்டார்கள்.

இந்நூலாசிரியர் தொண்டாற்றித் தூய்மைப்பட்டவர். எழுத்து, நடிப்பு என்ற எல்லாப் பக்கமும் இவருக்குத் தெரியும். அக் காலத்தில் சிறந்த மேடைப் பேச்சின் சிகரஞானி. 'ஞானியாரடிகளிடம்' பாடம் கேட்டவர் என்பது இவரது பக்குவத்திற்கு ஒரு பறைசாற்றல். ஔவையார், நம்பியாண்டார் நம்பிகள், சுந்தரமூர்த்தி நாயனார், குமரகுருபரர், இவர்களோடு ஞானியார் அடிகளாரையும் இணைத்து நூலாக்கியுள்ளது இவரது குரு பக்தியைக் கூறுகிறது.

'வீடுதோறும் மாடம் வைப்பது பிள்ளையாருக்காகவே'
'பிள்ளையார் சுழி பிரணவ வடிவம்'

'விநாயகர் அகவல் ஔவை கயிலை செல்ல நினைத்துப் பாடியது'

என்று ஔவை பிராட்டி பற்றி அருமையாகக் கூறுகிறார். தொடர்ந்து நம்பியாண்டார் நம்பிகள் வரலாற்றில் நாரையூர்ப்

 2-3

பொல்லாப் பிள்ளையாரைக் குறித்து விளக்குவதால் சைவத் திருமுறைகள் வெளிவந்தது பிள்ளையார் திருவருள் என்ற குறிப்பும் புலப்படுகின்றது.

தமிழ்ப் பண்ணிற்கு இணையான இக்கால இராகங்களைத் தொகுத்திருப்பது பண்பாதுகாப்பு முயற்சி. நம் தேவாரங்களே தமிழ் இசையின் தலைமைப் பீடம் என்ற உண்மையைக் கூறாமல் கூறுவது. யாழ் முரிப் பண் எது எனத் தெரியவில்லை யாயினும் அடாணாவில் பாடுதல் மரபு எனக் காட்டுவது இக்காலத் திருமுறையாளர்களின் சிந்தனையைக் காட்டுவது.

குமரகுருபரர்க்கு மீனாட்சியம்மை முத்துமாலையணிவித்த சிறப்பு முத்தப் பருவப் பாடலின் போது என்ற என் தந்தையார் கருத்தை எழுதியுள்ளார். சில புதிய கருத்துக்களை என்னிடம் என் தந்தையார் கூறுவதுண்டு. ஆயினும் இக் கருத்தை நான் இப்போதே அறிகிறேன். முத்தம் என்ற சொல் முத்தினைக் குறிக்கும். சொற்களை எல்லாம் முத்து என உவமிப்பதும் உண்டு. எனவே 'முத்தம் தருகவே' என்ற சொற்றொடர்ப் பொருத்தம் கண்டு இப்பருவத்துப் பாடலின் போது மீனாட்சியம்மை முத்துமாலை யணிவித்திருக்க லாம் எனத் தந்தையார் எண்ணினார் போலும்! மேலும் குமரகுருபரர் பாடலில் (முத்தப் பருவம் - 2 ஆம் பாடல்) 'சிறியேம் பெற்ற பெரும்பேறே' எனத் தொடர்ந்து வருவதால் முத்தப் பருவ முதற் பாடல் முடிவில் இவ் அற்புதம் நிகழ்ந்தது எனக் கொள்வது ஏற்புடைத்து எனவும் எண்ணியிருக்கலாம்! பெரிய புராணத்தில் சேக்கிழார் பாண்டியன் கூன் நிமிர்ந்தது, திருஞான சம்பந்தரின் 'வேந்தனும் ஓங்குக' என்ற பாடலடியால் எனக் கூறுவது சொற்பொருத்தத்தால் அற்புதம் நிகழ்வதுண்டு எனக் காட்டவே யாகும். அதுபோல் 'முத்தம் தருகவே' என்ற தொடரால் அற்புதம் நிகழ்ந்தது எனக் கொள்வது அமைவுடையது.

பிராட்டியார் செய்த போரில் பேய்களுக்குத் தேவர்களின் மூளையும் குடரும் 'புதிய உணவாயிற்று' என்ற குமர குருபரர் கற்பனைக்கு ஆசிரியர் நல்ல விளக்கம் தந்திருக்கிறார். தேவர்களின் உணவு அமுதமாதலின் உள்ளுறுப்புக்கள் மாறாதிருத்தலின் 'புதிய உணவு' எனக் குமரகுருபரர் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

கூத்தபிரானின் அம்பல ஆடல் உமையம்மை நோக்கியே இருந்தது.

'திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன்'

என்ற குமரகுருபரர் பாடலுக்கு நூலாசிரியர் சேக்கிழார் பாடல் துணையுடன் நுணுகிய விளக்கம் தருகிறார்.

சக்தியானவள் பூத்தவள், கறைக் கண்டனுக்கு மூத்தவள் என்ற அபிராமி பட்டர் பாடலுக்குச் சிவஞான சித்தியாரின் விளக்கத்தோடு சான்று காட்டி விரித்துரைப்பது இவருடைய சித்தாந்த வித்தகத்தைக் காட்டுகிறது. அம்மையின் அநேக நாமங்களுக்கு அரும்பொருள் கூறியிருப்பது ஆழ்ந்த செய்தியாகும்.

சிறந்த புலவர்களாய் அண்மையில் வாழ்ந்தவர்களைப் பற்றிக் கூட அரிய செய்திகள் மறைந்து போகும் சூழ்நிலையை மாற்றும் முயற்சியாக ஞானியார் அடிகள் பற்றிய கட்டுரை அமைந்துள்ளது. அவர் இயற் பெயருக்கு ஏற்ப அவர் சாயுச்சிய முத்தி அடைந்த இடம் 'பழனி' என்பதும் அவர் ஆற்றிய நிறைவுரை 'சிவராச யோகம்' என்பதும் தகுந்த பதிவுகள். பிற்சேர்க்கையில் ஞானியாரடிகள் இயற்றிய 'திலகவதியம்மை துதி' உள்ளது. திருத்தொண்டத் தொகையில் திலகவதியார் இடம் பெறவில்லையே என்பது ஞானியாரடிகளின் குறையாக இருந்திருக்கலாமோ? என எண்ணத் தோன்றுகிறது. சமயப் பணியோடு சமூகப் பணியும் செய்த ஞானியார் சால்புடன் இந்நூல் நிறைகிறது.

எண்பது தொடங்கும் வயதாகியும் இளைஞராகவே தன்னை எண்ணித் தமிழ்ச் சமயத்திற்கும் தமிழுக்கும் நூலெழுதி நோன்பு நோற்கும் இப்பெரியாரின் பணிக்குக் கைம்மாறு ஏதும் இல்லை. சைவப் பாதுகாப்புச் செய்யும் இத் தண்டமிழ்க் கொண்டலுக்குத் 'தலையே நீ வணங்காய்.'

அன்புடன்,

அருணை பாலறாவாயன்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
இலயோலோ கல்லூரி, சென்னை-34.

அணிந்துரை

நெய்தற்கிழான் என்ற புனை பெயரில் கவிதைகளையும், விருப்பாட்சியான் என்ற புனைபெயரில் ஆன்மிகக் கட்டுரைகளையும் எழுதிவரும் திரு. ப. இராமலிங்கம் தமிழில் பிழையின்றி எழுதுவதில் வல்லவர்.

ஜீன் என்ற புனை பெயரில் அறிவியல் கட்டுரைகளைக் கலைக்கதிர், அறிவியல் மாத இதழில் எழுதியதோடு அதன் ஆசிரியர் குழுவிலும் இடம்பெற்ற பண்பாளர்.

தேவாரம், திருவாசகம் இவைகளை முறையாகக் கற்றுச் சைவ சித்தாந்தக் கருத்துகளை மேடையில் பாங்குடன் சொற்பொழிவாகச் செய்து வருகிறார்.

வணிகக் குடும்பத்தில் பிறந்து, ஆசிரியர் தொழிலில் கொஞ்ச காலம் இருந்து பல பேருக்கு உதவிய உத்தமர். இதழியல் துறையிலும்; முத்திரை பதித்த இவர், அண்ணா பல்கலைக் கழக வளர் தமிழ் மன்றத்தில் தனி அலுவலராக இருந்து பல்கலைக் கழக அறிவியல் ஏட்டினை (களஞ்சியம்) காலாண்டுதோறும் கொண்டு வந்த பெருந்தகையாளர்.

நம்பியாண்டார் நம்பி என்னும் தலைப்பில் இந்நூலினைத் தன்னுடைய எண்பதாவது வயது சதாபிஷேக விழாவினை யொட்டி வெளிக் கொண்டு வருகிறார்.

கணபதி வணக்கத்துடன்தான் எதையும் ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஔவைக்கருளிய

ஆனைமுகத்தான் என்ற கட்டுரையோடு இந்த நூல் ஆரம்பமாகிறது. குமரகுருபரர் கூறும் அங்கயற்கண்ணியின் அரசாட்சி பற்றியும் நூலில் விரிவான கட்டுரை உள்ளது.

எளிய தமிழில் உயர்ந்த சிந்தனையில் தயாரான இந்த நூலில் ஆங்காங்கே அறிவியல் சிந்தனைகளும் பரவிக் கிடக்கின்றன. இது இந்த நூலுக்குப் பலம். இதுதான் ப. இராமலிங்கத்தின் தனி முத்திரை. உலகியல் நடைமுறையைத் தாய்ப்பாசத்தின் மூலம் சிவகாமியம்மை மேற்கொள்வதைக் குமரகுருபரர் விளக்கவது எடுத்துரைத்திருப்பது பாராட்டத் தக்கது. ஜீவன் முக்தர்களான ஞானியார் அடிகளார் மற்றும் காஞ்சி மாமுனிவர்பற்றியும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ள இந்த நூலில் திலகவதியம்மை துதியும் இடம்பெற்றுள்ளது.

முனிவர்கள் ஏழைகள்பால் அன்பு காட்ட வேண்டு மென்பதையும் உதாரணத்துடன் விளக்கியுள்ளார் ப. இராமலிங்கம். அகன்ற பார்வையோடு தமிழ் மொழியின் சிறப்பினையும் இந்நூல் மூலம் விளக்கியுள்ள திரு. இராமலிங்கம் இன்னும் பல நூல்களைச் சைவம் தழைக்கத் தரத்தோடு எந்நாளும் தருவார் என்று நம்புவோம். அவரின் சதாபிஷேகத் திருநாளில் அவர் தாள் வணங்கி நிற்கிறேன். எம்பெருமான் ஸ்ரீசைலநாதர் அவருக்கு எல்லா வளமும் தந்து அருளட்டும்.

அன்பன்

[signature]

25.12.04

(ஆசிரியர், கலைமகள்)



என்னுரை

புதுவை மாநகரில் பிறந்தேன். பிறந்த பத்து நாள்களுக்குள் கடலூரிலிருந்து மேற்கே 21 கி.மீ. தொலைவிலுள்ள நடு வீரப்பட்டு என்னும் கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டேன். அது முதல் பன்னிரண்டு வயது வரை அங்கேயே வளர்ந்தேன்.

என்னைப் பாசத்தோடு வளர்த்தவர்கள் இருவர். ஒருத்தர் என் தந்தை வழிபாட்டியான மீனாட்சியம்மையார் ஆவார். மற்றொருத்தர் குல உறவு முறைத் தாத்தாவான சடையப்பபராவர்; திருமணம் செய்து கொள்ளாமலேயே தன் வாழ்நாள் முழுவதும் தன்னைக் கயிலாய நாதர் கோயில் திருப்பணியிலே ஈடுபடுத்திக் கொண்டவர்.

படிப்பறிவில்லாத இவ்விருவரும், எனக்கு உலக விவரம் தொடங்கிய நாள் முதல் பன்னிரண்டு வயது வரையில் தினமும் கோயிலுக்குச் செல்வது, தேவாரம், திருவாசகம், திருப்புகழ் பாடுவது போன்ற தெய்வப் பணியில் என்னை ஈடுபடச் செய்து ஆளாக்கினார்கள்.

இன்று நான் இந்த 'நம்பியாண்டார் நம்பி' என்னும் ஆன்மிக நூல் இயற்றும் அளவுக்கும், ஆன்மிகச் சொற்பொழிவுகள் ஆற்றும் அளவுக்கும் என்னுள் இறையருள் கிட்டியதென்றால் அது மேற்கூறிய இருவரையுமே சாரும். எனவே, இந்நூலை அமரர்களான அவர்கள் திருவடிகளுக்குக் காணிக்கையாக்கு கிறேன் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் படைப்பதற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தவர்என் அன்பிற்குரிய மனையாட்டி திருமதி மனோகரி அம்மையார் ஆவார். இந்த நூலில் இடம் பெற்றுள்ள

கட்டுரைகள் அனைத்தும், என் ஆன்மிகச் சொற்பொழிவுகளின் மறுவடிவமே யாகும். ஆன்மிகச் சொற்பொழிவுகள் செய்வதற்குப் பல நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்து வைத்துக் கொள்வது என் வழக்கம். என் ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழும் போதெல்லாம் உடன் வருவது, என் மனையாட்டியின் ஒரு பண்பாடாகும்.

என் சொற்பொழிவுகளும் அதற்கான குறிப்புகளும் என் மனையாட்டியின் உள்ளத்தில் ஓர் எண்ணத்தைத் தோற்றுவித்தது. ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் உள்ள குறிப்புகளைக் கொண்டு ஓர் ஆன்மிக நூல் உருவாக்கலாமே என்று எண்ணத் தூண்டியதோடு, என் நூல்களை வெளியிடும் முயற்சியில் என்றும் தளராத வலம்புரி பதிப்பகத்தின் உரிமையாளரிடம் தெரிவித்து விட்டார். பின் என்ன? இறையருளும் கூட்டுவிக்க இந்நூல் வடிவெடுத்தது. எனவே, திருமதி மனோகரி அம்மையாருக்கும், வலம்புரி பதிப்பக உரிமையாளர் திரு. சி. சத்தியமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் எட்டுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

யோக சாத்திர நூலான விநாயகர் அகவல் பிறந்த கதையைத் தெரிவிக்கிறது முதல் கட்டுரை.

இரண்டாவது கட்டுரை, தேவாரப் பதிகங்கள் பண்ணோடு கிடைத்த வரலாற்றைக் குறிக்கிறது.

மூன்றாவது கட்டுரை, தில்லைச் சிவகாம வல்லியின் உலக உயிர்கள் பால் காட்டும் ஈடு இணையற்ற தாய்ப் பாசத்தை விளக்குகிறது.

நான்காவது கட்டுரை, மதுரை மீனாட்சி அம்மை எனப்படும் அங்கயற்கண்ணியின், பூவுலகு முதல் தேவர் உலகம் ஈறாகப் படையெடுத்துச் சென்று வென்று வெற்றிக் கொடி நாட்டிய

செயலையும், இறுதியில் கயிலைக்கே சென்று எம்பெருமானை வெற்றி கொண்ட செயலையும் நவில்கின்றது.

சுந்தரரின் சுந்தரத் தமிழுக்கு ஆசைப்படும் இறைவன் அதைப் பெற ஒவ்வொரு முறையும், ஒரு நாடகம் நடத்துவார். அவற்றுள் 'வேடுபறி நாடகம்' ஒரு தனி சிறப்பு வாய்ந்தது. இதை ஐந்தாவது கட்டுரை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஆறாவது கட்டுரை, அன்னை அபிராமியின் அருவ உருவ நிலையினை அகத்தே ஒளிவடிவாகவும், புறத்தே பல திருமேனி வடிவங்களாகவும் கொண்டு அருள் புரியும் செயலை விரிவாக எடுத்து இயம்புகிறது.

புலிசை ஞானியார் அடிகளின் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும் சிறந்தோங்கி இருந்ததை ஏழாவது கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

எட்டாவது கட்டுரையோ, ஆதி சங்கரரின் மறு அவதாரமாகப் போற்றி வணங்கப்படும், காஞ்சி மாமுனிவரின் சமயக் காழ்ப்பில்லாத சமயத் தொண்டையும், சாதிமத பேதமற்ற சமுதாயத் தொண்டையும் சிறப்பித்துக் கூறுகிறது.

இந்தக் கட்டுரைகளின் கையேட்டு சுவடிகளை, என்பால் எப்போதும் நீங்கா அன்பும் என் எழுத்துப் பணிகளுக்கும் ஊக்கம் அளித்து வரும் என் கெழுதகை நண்பர், அச்சேற்று வதற்கு முன்படித்துச் செப்பனிட்டுக் கொடுத்த, புதுவைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் முனைவர் அ. பாண்டுரங்கனார், அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன். கட்டுரைகள் எழுதுவ தற்கு நான்பயன் கொண்ட நூல்களையும், ஒவ்வொரு கட்டுரையின் கீழும் துணை நின்ற நூல்கள் என்று குறிப்பிடுதல் நலம் என்று அன்னார் தாம் தம் கருத்தைத் தெரிவித்தார். அதன்படியே, ஒவ்வொரு கட்டுரையின் கீழ் அவை குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள நண்பர், கலைமகள் ஆசிரியர் திரு. கீழாம்பூர் அவர்களே இறைவன்

திருவருளால் நூலுக்கு 'நம்பியாண்டார் நம்பி' என்னும் தலைப்பையும் சூட்டியுள்ளதை எண்ணி என் மனம் பூரிப்படைகிறது. அன்னாருக்கு என்றென்றும் நன்றியுடைய வனாவேன்.


அடுத்ததாகத் தருமபுர ஆதீன முன்னாள் ஆஸ்தான புலவர், சித்தாந்தக் கலைமணி திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்களின் திருக்குமாரரும், இலயோலா கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியருமாகிய முனைவர் அருணை பாலறாவாயன் அவர்கள் என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி, என் வேண்டுகோளுக்கிணங்கி இந்த நூலுக்கு ஒரு மணியான அணிந்துரையைப் புதுமையான தலைப்பில் வாழ்த்துதலோடு வழங்கியுள்ளமை என்னை மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைக்கிறது. அன்னாருக்கு என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

அடுத்து, இந்நூலின் அச்சுப் படிகளைப் பதிப்பகத்தாரிட மிருந்து பெற்று வந்தும், திருத்தம் முடிந்தபின் அவற்றைக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்தும் செயல் புரிந்த என் திருமகள் மாலினிக்கும் என் நன்றி உரித்தாகுக!

இந்நூல் எழுதத் தொடங்கியது முதல் என் எழுத்துப் பணிக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படா வண்ணம் காத்து ஒத்துழைத்த என் குடும்பத்தார் எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூல் உருவாவதற்குக் காரணமாயிருந்த என்துணைவியாருக்கும், வலம்புரி பதிப்பகத்தாருக்கும், மற்றும் 'சிவம்'ஸ் கணினி அச்சகத் தாருக்கும், அச்சிட்ட ஜே.ஜே. அச்சகத்தாருக்கும் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்



(ப. இராமலிங்கம்)

அவ்வைக்கு அருளிய ஆனை முகத்தான்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

– திருமந்திரம்: காப்பு

தமிழ்நாடு தெய்வ நம்பிக்கையில் தலைசிறந்து விளங்குகிறது. இது பண்டைக் காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து வருகிறது.

தெய்வ நம்பிக்கையில் சிறந்து விளங்கும் அனைவரும் வழிபடும் ஒரே கடவுள் விநாயகர்தான். இதில் எந்தவிதமான அய்யமும் இல்லை.

பார்வதி பரமேச்வரர்களின் மூத்த பிள்ளைதான் விநாயகர். இவரைப் பிள்ளையார் என்றே எல்லாரும் அழைப்பார்கள். இனி, இக்கட்டுரை முழுதும் பிள்ளையார் என்னும் பெயரிலேயே காண்போம். இந்தப் பிள்ளையாருக்கு ஆனைமுகம் இருப்பதால், ஆனை முகத்தான் என்னும் பெயரும் அமைந்து விட்டது.

பார்வதி பரமேச்வரர்களின் மூத்தபிள்ளையான இவரே எல்லாவற்றிற்கும் ஆதியில் இருந்தவர். பிரணவம் தான்

எல்லாவற்றுக்கும் முதல். பிரணவத்திலிருந்து தான், அனைத்து அண்டங்களும், உயிரினங்களும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் வடிவமே பிள்ளையார். அவருடைய ஆனைமுகம், வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால், ''ஓம்'' எனப்படும் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

பிள்ளையாரை வழிபடப் பேரருள் கிட்டும் அவரை வழிபட எளிய முறையே போதும்; பெருந்தவம் செய்ய வேண்டியதில்லை. துன்பத்தைப் போக்கி, இன்பத்தை ஈந்தருளும் தெய்வம். குற்றத்தை மறந்து, மன்னித்தருளும் மாபெரும் மூர்த்தி. தன்னை விரும்பிப் பணிவோரின் செயல்களுக்கு வெற்றியைத் தரும் பேரருளாளர்.

இத்தகு குணங்களுடைய இப் பிள்ளையாரைச் சிறுவர் முதல் முதியவர் வரை, கற்றவர் முதல் கல்லாதவர் வரை அனைத்துத் தர மக்களும் வழிபடுவதில் வியப்பு யாதென்றும் இல்லை அல்லவா? இக்காரணத்தாலேயே எல்லா இடங்களிலும் இவர் எழுந்தருளியுள்ளார். சைவ வைணவ ஆகிய எல்லாக் கோயில்களிலும் இவருக்கு இடம் உண்டு. வீடுதோறும் பிள்ளையாருக்கென மாடமும் உண்டு. வீதிதோறும் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கும். அவர் ஆற்றங் கரையிலும் அமர்ந்திருப்பார்; அரச மரத்தடியிலும் வீற்றிருப்பார்; குளக்கரையிலும் கோயில் கொண்டிருப்பார். அங்கெல்லாம் அவருக்குக் ''கோயில்'' என்னும் பெயரில் விமானமும் கூரையும் அமைத்துக் கட்டடம் எழுப்பத் தேவையில்லை. கொட்டும்

மழையிலும் காயும் வெயிலிலும் வானம் பார்த்து வாகாக உட்கார்ந்திருப்பார் அவர்.

பிரணவ வடிவான பிள்ளையாரை வழிபட்டே எந்தச் செயலும் தொடங்கப் பெறும். எந்தச் செயலைத் தொடங்குவதற்கு முன்பும் "பிள்ளையார் சுழி" போட்டே தொடங்குவதும் நம் மரபாகி வந்துள்ளதும் இதனாலேயே ஆகும்.

பிள்ளையாரை முறையாக வழிபட்டு அவ்விறைவனின் அருள் பெற்றோர் பலர். அவருள் தேவரும் மனிதரும் அடங்குவர். மனிதருள் அவ்வையார் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளார்.

இனி, அவ்வானை முகத்தான் அவ்வைக்கு அருளிய வரலாற்றைப் பார்ப்போம்.

தமிழகத்தில் அவ்வையார் என்ற பெயரில் பலர் சங்க காலத்தும் அதற்குப் பிறகும் வாழ்ந்தனர் என்பர் ஆராய்ச்சியாளர்கள், அவர்களுள் "விநாயகர் அகவலை"ப் பாடிய அவ்வையார், சோழர்கள் ஆட்சிக் காலமான கி.பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் எனச் சான்றோர்கள் கூறுவர். அந்தக் காலக் கட்டத்தில் வாழ்ந்தவர்கள் தாம், தேவாரம் பாடிய மூவர்களுள் ஒருத்தரான சுந்தரரும், சேர அரசரான சேரமான் பெருமான் நாயனாரும் ஆவர்.

மேற்கொண்டு நாம் சிந்திக்க இருப்பது, "விநாயகர் அகவலை"ப் பாடிய அவ்வையாரையே ஆகும்.

அவ்வையாரைப் பற்றி அறியாதவர்களே தமிழ் நாட்டில் இல்லை எனலாம். அவ்வை என்னும் சொல்லுக்குத் தாய், கிழவி, முதியவர் என்னும் பல பொருள்கள் உண்டு. அவ்வை பாணர் இனத்தைச் சேர்ந்தவர் என்று கூறுப்படுகிறது. பாணர்கள் இசை, நடனம், பாடல் இயற்றல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினர் என்று இலக்கிய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வைக்கு இளமையிலேயே இறைவன் பால் ஈடுபாடு அதிகமாய் இருந்தது. எனவே, அற்ப சுகங்களால் அலைக்கழிக்கப்பட்டுத் தம் ஆயுளைக் கழிக்க அவர் விரும்பவில்லை. அவருக்குத் திருமண வயது நெருங்கியது; பெற்றோர்கள் பொருத்தமான மணமகனைத் தேடினார்கள். அவ்வையின் மனமோ இல்லற வாழ்வில் நாட்டங் கொள்ளவில்லை. மாறாக இறையருள் உந்த, தாம் ஒரு குடும்பத்தை மட்டும் நடத்தப் பிறந்தவர் அல்லள் என்பதுணர்ந்தார். ஆகவே, ஊர்தோறும் உள்ள இல்லங்களுக்கும் கோயில்களுக்கும் சென்று ஒழுக்கம், நல்ல நடத்தை, நற்பண்பு, பக்தி, மனிதநேயம் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி மக்களை நெறிப்படுத்தும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என முடிவு செய்து கொண்டார்.

இறைவன் பால் நீங்காத அன்பு பூண்டவர் அல்லவா? அதிலும், பிள்ளையாரைத் தான் தம்முடைய வழிபடு தெய்வமாகக் கருதினார். தினமும் அவரைப் பூசிக்காமல் அவ்வையார் இருந்ததில்லை. ஆனைமுகத்தான் பால்

தமது ஆராத பக்தியைச் செலுத்தியதால், அவ்வையாருக்கு ஆனைமுகத்தானின் அருள் எளிதில் கிட்டியது. அதன்பயனாகவே, தமது நோக்கமான இல்லற வாழ்க்கையிலிருந்து விடுபட வேண்டிப் பிள்ளையாரைத் துதித்துத் தமக்கு முதுமைத் தோற்றத்தைத் தந்தருளுமாறு வேண்டினார். பிள்ளையாரும் அவ்வாறே அருளினார். அவ்வையும் கிழவியானார். திருமணமும் நின்று விட்டது. அது முதல், அவ்வையும் தமக்கே உரிய பாடல் இயற்றும் திறமையால் இளஞ்சிறார் முதல் முதியோர் வரையிலான அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற வகையில் எளிய நடையில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற அரிய நீதி நூல்களைப் பிள்ளையார் அருளால் இயற்றினார். அவற்றை நாடெங்கும் சென்று பரப்பினார்.

தமக்கு இளமை நீங்கி, முதுமை வேண்டுமென்று பிள்ளையாரை வணங்கியவர், அழிவில்லாத ஞானத்தையும் தந்தருளுமாறு வேண்டினார். அதற்கிணங்க விநாயகப் பெருமானே, ஞானத்தை வழங்கினார். அத்துடன் யோகத்தைப் பற்றியும் உபதேசித்தார்.

அவன் அருளாலே தான் அவன் தாள் வணங்க முடியும். அதுபோல, அவ்வையாரும் தமது ஞான குருவான பிள்ளையாரின் அருளாலே ஞானமும் யோகசித்தியும் கைவரப் பெற்று, "விநாயகர் அகவல்" என்னும் ஒரு யோக சாத்திர நூலை இயற்றிப் பிள்ளையாருக்கே படைத்தார்.

எழுபத்திரண்டு அடிகளைக் கொண்ட இந்த விநாயகர் அகவல்' ஒரு பாராயண நூலாகும். முன்பு பள்ளிப் பிள்ளைகள் 'விநாயகர் அகவலை' மனப்பாடம் செய்து வைத்திருப்பர். பொருள் தெரியாத போதும், அப்படியே மனப்பாடம் செய்து பாராயணம் செய்பவர்களுக்கு ஒரு தனிச்சக்தி உருவாவதைத் தாம் உணர்வதாக, அவர்கள் கூறக் கேட்கலாம். பொருள் தெரியாத போதே இந்த உணர்வு ஏற்படுகிறதென்றால் அந்நூலைப் பொருளுணர்ந்து - ஞானப் பொருளை அறிந்துணர்ந்து - பாராயணம் செய்தால் உயர்ந்த ஞானத்தைப் பெறலாம் என்பது அனுபவம் மிக்க ஆற்றோர்களின் கருத்தாகும்.

அவ்வையார் அருளிய அந்த யோக சாத்திர நூலான ''விநாயகர் அகவலில்'' அடங்கியுள்ள சில கருத்துகளைச் சிந்திப்பது நலம் பயக்கும் எனக் கருதுகிறோம்.

அகவலின் முதல் பதினான்கு அடிகளில் பிள்ளை யாரின் பாதாதி கேச வருணனை கூறப்பட்டுள்ளது. தெய்வங்களில் ஆண் தெய்வத்தைப் பற்றி வருணிக்கும் போது, இப்படித்தான் கூற வேண்டும் என்பது ஓர் ஆன்மிக நியதியாகும்.

அதன்படியே விநாயகர் அகவலின் தொடக்கத்தில் விநாயகப் பெருமானின் பாதச் சிலம்பையும் திருவடியையும் போற்றித் துதிக்கிறார்.

அவ்வடிகள் பின்வருமாறு

"சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரும் புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!"

அகவல்: 1-14

இப்படிப் பிள்ளையாரை வருணித்த அவ்வையார், அவர் தமக்குக் குருவடிவாகி வந்து திருவடித் தீட்சை புரிந்ததை,

"குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்து..."

அகவல்: 21-22

எனக் கூறுகிறார்.

அடுத்து, திருவடித் தீட்சை அளித்தவர், தமக்குத் தெவிட்டாத உபதேசத்தை உபதேசித்து, திகட்டாத

ஞானத்தைத் தமக்குத் தெளிவாக அறிவித்ததாகப் பின்வரும் வரிகளில் கூறியுள்ளார்.

"உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி"

அகவல்: 25-26

நம்மிடமுள்ள ஐம்புலன்களையும் அததன் போக்கில் இயங்க விட்டு விட்டால் நமக்குத் தீங்கே விளையும் அல்லவா? அவற்றை அடக்கி ஆண்டு விட்டால், எந்நாளும் துன்பமில்லை இன்பமே வந்தெய்தும். இதனை,

"ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின இனிதெனக்(கு) அருளி"

அகவல்: 27-28

என்று தெரிவிக்கிறார்.

பிள்ளையார் தமக்கு யோக நெறி பற்றி உபதேசம் செய்ததை அவ்வையார் பின்வருமாறு கூறுகிறார்.

"அவ்வையே! மனித உடலில் உயிர் நிற்பது, உடலின் இடப்பக்கம் இயங்கும் இடைகலை என்னும் நாடியும், வலப்பக்கம் இயங்கும் பிங்கலை என்னும் நாடியும் இடையறாது இயங்குவதால்தான் ஆகும். மற்றும், உடலின் நடுப் பாகத்தில் (முதுகுத் தண்டில்) இயங்கும் 'சுழுனை' எனப்படும் சுழுமுனை என்னும் நாடியும் அவ்விதமே இயங்குகிறது. எனவே, இடைகலை பிங்கலை ஆகிய இரு நாடிகளிலும் செயல்படும் பிராண

வாயுவை நிறுத்தி, சுழுமுனை வழியே செலுத்து. பிறகு, தலையின் உச்சி ஓட்டில் உள்ள ஞான வெளியில் உறவாடச் செய்'' என்று உபதேசித்தார்.

இதனை, தம் விநாயகர் அகவலில்'

''இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும்காட்டி...''

- அகவல்: 37-38

என்று எடுத்துச் சொல்லுகிறார்.

பின்னும் குண்டலினி சக்தி, அசபை மந்திரம், ஆறு ஆதாரச் சக்கரம், சிவாயநம என்னும் ஐந்தெழுத்து உண்மை பற்றிய விவரங்களைத் தம் 'விநாயகர் அகவலில்' எடுத்து ஓதுகிறார்.

இத்தகைய விவரங்களைக் கூறி, நாம் நம்மை உணர உணர்ந்து செயல்பட வழிவகுக்கிறார். இதனால், மனத்தை ஒருமுகப்படுத்தி எண்ணங்களைச் சிதறவிடாமல் காத்து யோக நெறி பயில் அறிவுரை கூறுகிறார். யோக நெறி கைவரப் பெற்றால், நான் என்னும் அகந்தை அகன்றுவிடும். அப்போது ஞானம் பிறக்கும்.

இவ்விதம், தத்துவப் பொருளையும், சைவ சித்தாந்தக் கருத்துகளையும் தமக்குப் பிள்ளையார் அருளியதைத் தம் 'விநாயகர் அகவல்' மூலம் எடுத்துக் கூறி, விநாயகரின் மேலான திருவடிகளை வணங்கி அகவலை முடிக்கிறார்.

அவ்வையார் ஆனை முகத்தோனின் அருளுக்கு மட்டும் பாத்திரமானவர் அல்லர். பரமேசுவரன், பார்வதி

தேவி, முருகன் ஆகியோரின் அருளுக்கும் பாத்திரமாகி இருந்தார். ஐந்தெழுத்தின் உண்மையை ஆனைமுகனிட மிருந்து அறிந்து தெளிவு பெற்ற அவ்வையார், அவ்வைந்தெழுத்துக்குரிய பரமேசுவரன் கோயில் கொண்டிருக்கும் கயிலைக்கே போக விரும்பினார். பிள்ளையார் தம் தும்பிக்கையால் தூக்கி அவ்வையாரை கயிலையில் சேர்ப்பித்தார். அவ்வையாரின் விருப்பமும் நிறைவேறியது.

அதற்கோர் வரலாறு உண்டு.

அவ்வையாருக்குக் கயிலாயம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் திடீரென்று தான் தோன்றியது. காரணம் அவ்வையாரின் சமகாலத்தவர்களும் நெருங்கிய நண்பர்களுமாகிய சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமன் பெருமான் நாயனாருமே ஆவர் என்று புராண வரலாறு தெரிவிக்கிறது.

சைவம் வளர்த்த சான்றோர் அறுபத்து மூவர் ஆவர். மேலே கூறப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் அவ்வறுபத்து மூவருள் அடங்குவர்.

சுந்தரரின் குழந்தைப் பெயர் நம்பியாரூரர் என்பதாகும். திருநாவலூரர் என்னும் பெயர், நாவலூரில் பிறந்ததால் ஏற்பட்டது. பின்னர், திருவாரூர் தியாகேசர் திருக்கோயில் வாயிலில் அமைந்த தேவாசிரியன் மண்டபத்தில் இருந்த அடியார்கள் யாவரும் கேட்கும் வண்ணம், ''நம்பியாரூரனே, உனக்கு நம்மைத் தோழமையாகத்

தந்தனம்'' என்றதோர் அருள்வாக்கு வானிடைத் தோன்றியது. அவ்வருள் வாக்கினைக் கேட்ட அடியார்கள் யாவரும் சுந்தரரைத் 'தம்பிரான் தோழர்' என அன்பினால் அழைத்தனர்.

சுந்தரரைத் தமக்குத் தோழமையாக்கிக் கொண்ட இறைவனே, தம் அடியாராகிய சேரமான் பெருமாள் நாயனாருக்கும் தோழமையாக்கி விட்டார். அதுமுதல் தம்பிரான் தோழரான சுந்தரர் சேரமான் தோழர் எனவும் பெயரிட்டு அழைக்கப்பட்டார்.

சுந்தரர் திருவாரூர் தியாகேசரிடத்தில் பக்தியால் ஆறாக் காதல் கொண்டவர். எனவே, அவர் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் தோறும் யாத்திரையை மேற்கொண்டார். தலையாத்திரையின் போது எங்கிருந் தாலும் தமக்குத் தியாகேசரைத் தரிசிக்க வேண்டும் என்னும் எண்ணம் எழுந்து விட்டால், உடனே திருவாரூருக்குத் திரும்பி விடுவார். அங்குச் சில நாள் தங்கிய பின் மீண்டும் தலயாத்திரையை மேற் கொள்ளுவார். அதுபோன்றே, தம் தோழர் சேரமான் பெருமாள் நாயனாரைப் பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் ஒரு சமயம் எழுந்த போது, சேரமான் பெருமாள் நாயனார் அரசாண்டு கொண்டிருந்த மலை நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்று சேரமானைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார். பல நாள்கள் அங்குத் தங்கவும் செய்தார்.

ஒருநாள் சேரமான் பெருமாள் திருமஞ்சனச் சாலையில் நீராடிக் கொண்டிருக்கும் போது, சுந்தரர் பெருமான்

திருவஞ்சைக்களத்தை அடைந்தார். அங்குக் கோயில் கொண்டிருக்கும் அஞ்சைக்கள ஈசரை, நெஞ்சம் நெகிழ்ந்துருகிக் கண்ணீர் பொழிய, வணங்கித் துதித்தார். அது போழ்து, "அடியேனை நின் திருவடியிலே சேர்த்தருள வேண்டும்" என்னும் குறிப்புடன், "தலைக்குத் தலை மாலை" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். அந்தப் பதிகத்தின் உட்குறிப்பு இந்த உலகத்தில் பாசத் தொடர்பான இல்லற வாழ்க்கை தம்மைவிட்டு நீங்க வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பித்துக் கொண்டதைப் புலப்படுத்துகிறது.

சிவபெருமான், சுந்தரரது பாசத்தளையை நீக்கிப் பேரின்ப வாழ்வைத் தந்தருளத் திருவுளங் கொண்டார். நம்பியாரூரைத் திருக்கயிலாயத்திற்கு அழைத்து வரும்படி தேவர்களைத் திருவஞ்சைக் களத்திற்கு அனுப்பி அருளினார். உடன் வெள்ளை யானையையும் அனுப்பி வைத்தார். அஞ்சைக் களத்தை அடைந்த தேவர்கள், அஞ்சைக்கள ஈசரை வழிபட்டுச் சுந்தரரை அணுகித் "தாங்கள் இந்த வெள்ளை யானையின் மீதமர்ந்து, திருக்கயிலைக்கு உடனே வரவேண்டும் என்பது சிவாஞ்ஞையாகும்" என்று விண்ணப்பித்தனர். அதைக் கேட்ட சுந்தரர் சிவபெருமானை நினைந்து, தம்மை மறந்து நின்றார். அப்போது, தேவர்கள் அவரை வெள்ளையானை மீது ஏற்றினார்கள். சுந்தரர் தம் தோழரான சேரமான் பெருமாள் நாயனாரை நினைத்துக் கொண்டே வெள்ளை யானை மீது சென்றார்.

இதற்கிடையில் திருமஞ்சனச் சாலையில் நீராடச் சென்ற சேரமான் பெருமாள், தம்பிரான் தோழரான சுந்தரரின் செயலை அறிய வந்தார். அப்போதே பக்கத்திலிருந்த ஒரு குதிரை மீதேறித் திருவஞ்சைக் களத்தை அடைந்தார். அடைந்தவர் அங்கே வானத்தின் மீது வெள்ளை யானையில் அமர்ந்து சுந்தரர் செல்வதைக் கண்டார். நிலத்தில் நிற்க நிலையற்றவரானார். உடனே, தாம் போவதற்கு முன் தம்மனம் விரைவாகச் செல்வது போல் தம்குதிரையும் விரைவாகச் செல்ல வேண்டும் என்று எண்ணினார். உடனே அவர் தம் குதிரையின் காதில் திருவைந்தெழுத்தோடு சில மந்திரங்களை ஓதினார். அடுத்த கனமே, அவருடைய குதிரை ஆகாயத்தில் பாய்ந்து எழுந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் ஊர்ந்து செல்லும் வெள்ளை யானையை அணுகி, வலம் வந்து அதன் முன்னாகச் சென்றது.

இவ்வாறு, சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமான் நாயனாரும் முறையே வெள்ளை யானை மீதும் குதிரையின் மீதும் ஏறிக் கொண்டு கயிலைக்குப் புறப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி அவ்வையாரின் காதில் வீழ்ந்தது. அக்கண்மே அவரும் கயிலை செல்ல வேண்டும் என்று எண்ணினார். எண்ணம் வலுப்படவே ஆவல் அதிகரித்தது. ஆவல் இருந்தால் மட்டும் போதுமா? அதற்கேற்ற சூழ்நிலையும் அனுகூலமாக இருந்தால் தானே, காரியம் கைகூடும். ஆனால், கவலை தான் மிகுந்தது. காரணம் அவருக்கோ வயதும் அதிகமாகி

விட்டது; ஊர்தியோ அவரிடம் ஒன்றும் இல்லை. என் செய்வது?

சுந்தரரும் சேரரும் கயிலை செல்லும் அந்த நேரத்தில் தான், அவ்வையார் விநாயகருக்குப் பூசை செய்து கொண்டிருந்தார். எனவே, தம் வழிபடும் தெய்வமான பிள்ளையாரை, "அய்யனே! நீர்தான் அருள்புரிந்து என் ஆசையை நிறைவேற்ற வேண்டும்" என மன்றாடிப் பிரார்த்தித்தார்.

அவ்வையார் தினமும் பிள்ளையார் பூசை செய்வது வழக்கம்தான். அப்பூசை என்றும் நிதானமாகவே நடைபெறும். ஆனால், கயிலை செல்ல வேண்டும் என்ற ஆவல் எழுந்த அன்றோ, பிள்ளையார் பூசை அவசர அவசரமாக நடந்து கொண்டிருந்தது.

அவ்வையின் அவசரப் பூசையை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆனைமுகன், "என்றும் நிதானமாகப் பூசை செய்யும் நீ இன்று ஏனம்மா? இந்த அவசரம்?" என்றும் கேட்டு விட்டார்.

அவ்வையும் "அய்யனே! கயிலை செல்லும் ஆசையை அருள்புரிந்து தேவரீர் தான் நிறைவேற்ற வேண்டும் என்று, பூசையின் தொடக்கத்திலேயே வேண்டுகோள் விடுத்துவிட்டேன்" என்று கூறினாள்.

"நீ வேண்டுகோள் விடுத்தது சரி. அதற்காக நீ எனக்காகச் செய்யும் வழிபாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டுமா? இந்தத் தும்பிக்கையான் மீது நம்பிக்கை இல்லையா?" என்ற கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"எம்பெருமானே! விநாயகனே! வேழ முகத்தோனே! வெள்ளை யானையின் மேல் ஏறிய சுந்தரரும், குதிரையின் மீது ஏறிய சேரமான் பெருமாளும் கயிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்களே! இதை நீவிர் அறியாதவர் அல்லர். என் தோழர்களான அவர்கள் செல்லும்போதே நானும் செல்ல வேண்டும் என்பது என் அவா! நானோ கிழவி; என்னிடமோ ஊர்தி ஏதும் இல்லை. அப்படியிருக்க நான் போவது எப்படி?" என்று தன் ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

"அதற்காக அவசர அவசரமாகப் பூசை செய்து முடிக்க வேண்டுமா? அப்படி முடித்து விட்டால் வயோதிக நிலையும் வாகனமின்மையும் உன்னைக் கயிலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுமா? சற்றுச் சிந்தித்துப் பார். பிறகு, எனக்குப் பூசை செய்வதில் கடைப்பிடிக்க வேண்டிய முறையை உறுதி செய்து கொள்" என்று கூறிவிட்டார்.

அதைக் கேட்ட அவ்வையார் தம் செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். "கணபதியே அவர்களோடு நானும் செல்ல தேவரீர் தாம் தயை புரிய வேண்டும்" என்றும் வேண்டிக் கொண்டார்.

"கவலைப்படாதே அவ்வையே! ஆர அமரப் பூசை செய்வாயாக! அவசரப்படாமல் பூசை செய்தால், நானே உன்னை அவ்விருவர்களுக்கும் முன்னர்க் கயிலாயத்தில் கொண்டு சேர்த்து விடுகிறேன்" என்று பிள்ளையார் கூறினார்.

அவர் கூற்றுக்கிணங்க அவ்வையும் என்றும் போல் அன்றும் நிதானமாகப் பூசை செய்தார்; அமைதியாகச் செய்தார்; செவ்வனே செய்தும் முடித்தார்.

உடனே பிள்ளையார் அவ்வையாரைத் தம் துதிக் கரத்தால் தூக்கி, அவ்விருவருக்கும் முன்னர்க் கயிலாயத்தின் வாயிலில் கொண்டு நிறுத்தினார்.

ஆனால், அவ்வைக்கு முன்னரே கயிலைக்குப் புறப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் வெள்ளை யானை மீதும் வெள்ளைக் குதிரை மீதும் விரைந்து வந்தவர்கள் அவ்வைக்குப் பின்னரே வந்து சேர்ந்தனர். அங்குத் தங்களுக்கு முன்னரே, அவ்வை வந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு, ''இது என்ன மாயமந்திரமோ! தெரிய வில்லையே!'' என்று வியந்து போனார்கள்.

அவ்விருவரும் அவ்வையை நோக்கி, ''அவ்வையே! நீர் எங்களுக்கு முன் வெகுவிரைவில் இங்கு வந்து சேர்ந்த அற்புதச் செயலை நாங்கள் தெரிந்து கொள்ளாமா?'' என்றனர்.

அதற்கு, அவ்வையார் சேரமானை நோக்கி, ''உயர் குடிப் பிறந்த மன்னனே! மதுரமொழி பேசும் நல்ல உமையம்மையின் புதல்வராகிய விநாயகப் பெருமானின் மலரடிகளை உறுதியாக எண்ணித் தொழுபவர்களுக்கு, அது ஓர் அரிதான செயலாகாது. மேகம் போல் இடி இடித்து, பூமி அதிருமாறு விரைந்து ஓடும் யானையும் தேரும், அதன் பின்னே தொடர்ந்து வந்த குதிரையும் (ஒரு

நாழிகையில்) காத வழி நடக்கும்; இந்தக் கிழவியாகிய நானும் கடந்து வந்தது அந்தக் காத வழி தூரம் தான்'' என்னும் பொருளமைந்த பாடலால் பதிலளித்தார், என்று அறிஞர்கள் கூறுவர். அந்தப் பாடல் பின்வருமாறு:

''மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்கு அரிதோ முகில்போல் முழங்கி
அதிர வருகின்ற யானையும் தேரும் அதன் பின் சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே!''

இவ்விதம், அவ்வையார் கயிலாயம் சென்றதில் உள்ள சிறப்பு அம்சம் என்னவெனில்,

1. சிவபெருமானாலேயே அழைக்கப்பட்ட சுந்தரர் கயிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.
2. அதன்பின் புறப்பட்ட சேரர், தம் குதிரையின் காதில் சிவபெருமானின் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி, அதன் அருளால் வான் வெளியிலேயே சுந்தரருக்கு முன் சென்று நிற்கிறார்.
3. இவ்விருவர் செயலையும் முந்திக் கொண்டது, அவ்வை கயிலாயம் சென்றது. காரணம், அவ்வைக்கு ஐந்தெழுத்தின் உண்மைப் பொருளை உணர்த்திய பிள்ளையாரே தம் தும்பிக்கையால், அவரைக் கயிலாயத்திற்குச் சுந்தரரும் சேரமான் பெருமானும் சேர்வதற்கு முன்னதாகவே சேர்ப்பித்ததாகும்.

இவ்வாறு, அவ்வையார் கயிலாயம் செல்வதற்கு மூவர் காரணமாவர். ஒருத்தர் சிவனுக்கு மூத்த பிள்ளை விநாயகர் - கடவுள். மற்றொருத்தர் சிவனின் தோழர் - சுந்தரர். மூன்றாமவர் ஓர் அரசன் - சேரமான் பெருமார்.

துணை நின்ற நூல்கள்

1. வித்வான் கே.எம். கிருஷ்ணமூர்த்தி, விநாயகர் அகவல், மூலமும் உரையும், அன்னை அன்னபூரணி வெளியீடு, சென்னை. 1988
2. பன்னிரு திருமுறை வரலாறு, திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் திருவிடை மருதூர், 1992
3. பெரிய புராணம், தொகுதி, மூலமும் தெளிவுரையும், 2002 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17
4. இந்தியப் பெண்மணிகள் பகுதி 3, படக்கதை, அன்னை ஸ்ரீ சாரதா தேவி 150ஆம் ஆண்டுசிறப்பு வெளியீடு, ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 2004.
5. வெற்றி தரும் விநாயகர், சாந்தினி, காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட் சென்னை, 1996
6. பிள்ளையார் கதைகள், சரஸ்வதி கே., நர்மதா பதிப்பகம், சென்னை. 1989.
7. சிங்கார வேலு முதலியார் ஆ. அபிதான சிந்தாமணி, திருத்தியது சிவப் பிரகாச முதலியார், 1994 ஏஷியன் எஜுகேஷனல் சர்வீஸஸ், சென்னை-14.

நம்பியாண்டார் நம்பிக்கு அருளிய தும்பிக்கையான்

மலம்செய்த வல்வினை நோக்கி உலகை
வலம்வரும் அப்
புலம்செய்த காட்சிக் குமரற்கு முன்னரே
புரிசடைமேல்
சலம்செய்த நாரைப் பதிஅரன் தன்னைக் கனிதரவே
வலம்செய்து கொண்ட மதக்களி றேஉன்னை
வாழ்த்துவனே.

- திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை, பாடல் : 8

தில்லை நடராசர் கோயில் கொண்டிருக்கும் சிதம்பரத்தைத் தெரியாத சைவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என உறுதியாக நம்பலாம். புகழ்வாய்ந்த தில்லையம்பதியான சிதம்பரத்திற்குத் தென்மேற்கே 16 கி.மீ. தொலைவில் திருநாரையூர் எனப்படும் ஓர் ஊர் உள்ளது. இது ஒரு சைவத்தலம். இங்குள்ள விநாயகர், பொள்ளாப் பிள்ளையார் என்னும் பெயரினை உடையவர். பொள்ளா என்பதற்கு உளியால் செதுக்கப் படாத என்பது பொருளாகும். இருப்பினும் இவரைப் பொல்லாப் பிள்ளையார் என்றே அழைக்கின்றனர். நாமும் அப்படியே கொள்வோம். எனவே, இப் பிள்ளையார் சிலை சுயம்புவாகத் தோன்றியதாகும் என்பது வரலாறு.

இத்தலத்தில் தான், சைவ அடியார்களில் புகழ்பெற்ற நம்பியாண்டார் நம்பி என்பவர் அவதரித்தார். இவரது தந்தை ஆதி சைவ அந்தணர் குடியைச் சேர்ந்தவர்; பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசனை புரியும் பேறு பெற்றவர். அந்தணர் குல முறைப்படி, நம்பி உரிய பருவம் எய்தியதும் உபநயனம் செய்விக்கப்பட்டது. இதனால், நம்பி பிள்ளையாருக்குப் பூசை செய்யும் தகுதியைத் தந்தை பெறச் செய்தார். தந்தையாரைப் போலவே ஆசார முறைப்படி, சிறப்பாகப் பூசை செய்யும் முறைகளைக் கற்று வல்லவரானார்.

ஒருநாள் தந்தையார் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. தாம் திரும்பி வரும் வரையில் பிள்ளையாருக்குப் பூசை செய்யும்படி தம்மகன் நம்பியிடம் கூறிப் புறப்பட்டுச் சென்று விட்டார். தந்தையார் சொற்படி, பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசனை செய்யும் பொருட்டு நம்பி கோயிலுக்குச் சென்றார்.

பிள்ளையாருக்கு அபிடேகம் (திருமஞ்சனம்) முதலானவற்றைச் செய்து முடித்தார். பிறகு, நிவேதனப் பொருளை (திருஅமுதினை)ப் பிள்ளையார் முன் வைத்தார்.

"பெருமானே திருவமுது உட்கொண்டு அருள-வேண்டும்" என்றார், நம்பி. பிள்ளையார் நம்பி படைத்த திருவமுதினை உட்கொள்ளவில்லை. இளம் வயதினரான நம்பி, கடவுளுக்கு நிவேதிக்கும் (காட்டும்) திருவமுதைக் கடவுளே உட்கொள்ளுவார் என்ற நம்பிக்கையில் இருந்தார். அந்த நம்பிக்கையினால், தாம் திருவமுது

படைத்ததைப் பிள்ளையார் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம், தம் வழிபாட்டில் தவறு ஏதேனும் நேர்ந்திருக்குமோ என்று கலங்கினார் நம்பி. திருவமுதினைப் பிள்ளையார் உட்கொள்ளாததால், தம் தலையைக் கல்லில் மோதிக் கொள்ள முற்பட்டார்.

அதுபோழ்து, பிள்ளையார் "நம்பி பொறு" என்று அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் படைத்த திருவமுதினை முழுவதுமாய் உட்கொண்டருளினார்.

அதுகண்ட நம்பிக்கு மகிழ்ச்சி பெரிதும் ஏற்பட்டது. பின்னும் பிள்ளையாரை நோக்கி,

"எம்பெருமானே, இன்று தங்களுக்கு வழிபாடு செய்ததால் காலங் கடந்துவிட்டது. இனிப் பள்ளிக்கூடம் சென்றால் ஆசிரியர் தண்டிப்பார். எனவே, அனைத்துக் கல்வியினையும் அடியேனுக்கு நீவிரே ஓதுவித்து அருளல் வேண்டும்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

நம்பிக்கு அருள் ஞானம் கூடிவரும் வேளையுமாக இருந்த நிலை ஏற்பட்டது. எனவே, விநாயகரே நம்பிக்குக் குருவாக இருந்து எல்லாக் கலைகளையும் ஓதியருளினார். பொல்லாப் பிள்ளையார் நம்பியை இவ்விதம் ஆட்கொண்டதால், அவர் அன்றுமுதல் "நம்பியாண்டார் நம்பி" என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்.

இவ்வாறு பிள்ளையாரின் அன்பையும் அருளையும் பெற்ற நம்பியாண்டார் நம்பி, நாள்தோறும் பிள்ளை யாருக்கு நிவேதனம் படைத்து, அதை உண்ணச் செய்து மகிழ்ந்து வந்தார். இச் செய்கையால் நம்பியாண்டார்

நம்பிக்குப் பொல்லாப் பிள்ளையார் பால் மிகுந்த பக்தி உண்டாயிற்று. இதன் பயனாக, ''திரு இரட்டை மணிமாலை'' என்னும் நூலை இயற்றினார்.

திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பியின் பொருட்டு நிகழ்த்திய திருவருட் செய்தி தமிழகம் எங்கும் பரவியது. அந்தக் காலக் கட்டத்தில் சோழ மண்டலத்தை ஆண்டுவந்த இராச இராச சோழ மன்னனின் காதுக்கு இத் திருவருட் செய்தி எட்டியது. செய்தியைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து போனான்.

அம்மன்னன் சமயகுரவர் மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகப் பாடல்களைப் பலர் ஓதக் கேட்டு வந்தான். அப்பாடல்கள் மீது அவனுக்கு ஈடுபாடு அதிகமாயிற்று; பக்தியும் ஏற்பட்டது. அப்பாடல்கள் கொண்ட ஏடுகள் எங்கும் இல்லாத காரணத்தால், அவை எங்கிருந்தாலும் தேடிக் காணக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான்.

நாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் அன்பும் அருளும் பெரிதும் பெற்றுள்ளவர் நம்பியாண்டார் நம்பி அல்லவா! அவரை அணுகி அவர் மூலமாகத் தேவார ஏடுகள் இருக்கும் இடம் தெரிவிக்குமாறு பிள்ளையாரை வேண்டிக் கொள்ளலாம் என்ற ஆவல் மன்னனுக்கு ஏற்பட்டது.

நம்பியாண்டார் நம்பியைக் காணச் சோழ மன்னன் திருநாரையூருக்கு வந்து சேர்ந்தான். அப்படி வரும்போது பிள்ளையாருக்குப் பிடித்தமான பல்வேறு பழவகைகள்

பலவகையான பட்சணங்கள் ஆகியவற்றை எல்லாம் உடன் கொண்டு வந்தான்; நம்பியாண்டார் நம்பியைச் சந்தித்தான்; வணங்கினான். தான் கொண்டு வந்த விநாயகப் பெருமானுக்குப் பிடித்தமான பொருள்களை எல்லாம் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்யுமாறு நம்பியை வேண்டிக் கொண்டான். மன்னன் வேண்டு கோளை ஏற்று நம்பியும் அவற்றைப் பிள்ளையாருக்குப் படைத்தார். பொல்லாப் பிள்ளையாரும் அவற்றைத் தன் துதிக்கை நீட்டித் திருவமுது செய்தருளினார். இந்த அற்புத நிகழ்ச்சியைத் தாமே நேரில் கண்ட சோழ மன்னன் பெரிதும் மகிழ்வெய்தினான்.

பொல்லாப் பிள்ளையரின் அருளால் ஆட்கொள்ளப் பட்ட நம்பியாண்டார் நம்பியை வணங்கினான். வணங்கிய மன்னன், நம்பியிடம் "பெருமானே சமயகுரவர் மூவர் அருளிச் செய்த தேவாரத் திருபதிகங்கள் சிலவே தற்போது ஓதப்பட்டு வருகின்றன. ஆனால், அப்பதிகங்களின் ஏடுகள் ஏதுமின்றியே செவிவழி வழங்கியே ஓதப்பட்டு வருகின்றன. அவற்றோடு இன்னும் பல ஏடுகளும் இருக்கலாம். அவையெல்லாம் வெளிப்பட்டு இந்நிலவுலகில் விளக்கம் பெறுதல் வேண்டும். அதற்குத் தாங்கள் தாம் ஆவன செய்து உதவிபுரிய வேண்டும்" என்று தம் உள்ளத்துள் எழுந்த குறையை நம்பியின் முன் வைத்தான்.

நம்பியாண்டார் நம்பியும் பொல்லாப் பிள்ளையாரை நோக்கி,

''எம்பெருமானே! தேவாரத் திருப்பதிக ஏடுகள் இருக்கும் இடத்தை அடியேனுக்குக் காட்டி அருளல் வேண்டும்'' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார்.

பொல்லாப் பிள்ளையார் நம்பியின் வேண்டுகோளுக்கு இசைந்தார். இசைந்து, ''நம்பியே! தில்லையில் பொன்னம் பலத்தின் அருகில், சிற்றம்பலத்திற்கு மேற்கு திசையில் உள்ள அறையில் தேவார ஆசிரியர்கள் மூவரின் அழகிய கை - அடையாளமிட்ட கதவின் உள்ளே தேவாரத் திருப்பதிக ஏடுகள் வைத்துப் பூட்டப் பட்டுள்ளன'' என்று கூறியருளினார். அது போழ்து, திருத்தொண்டர்களின் வரலாறுகளையும் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வருளுரையைக் கேட்டு மகிழ்ந்தனர் நம்பி யாண்டார் நம்பியும் சோழ மன்னனும். பின் பிள்ளை யாரின் வாக்குப்படி தில்லைக்குச் சென்றனர்; தில்லைக் கூத்தப் பெருமானை வணங்கினர்.

பிள்ளையார் தெரிவித்த தேவாரத் திருப்பதிக ஏடுகள் இருக்கும் அறை, தில்லைவாழ் அந்தணர்களின் பொறுப்பில் உள்ளதை அறிய வந்தனர்.

பின்னர், அவ்வந்தணர்களை மன்னன் அணுகினான். அவர்களிடம் மன்னன் தன் விருப்பத்தைத் தெரிவித்தான்; தேவாரத் திருப்பதிக ஏடுகள் இருக்கும் அறையைத் திறக்கும்படி வேண்டினான்.

அதற்குத் தில்லை அந்தணர்கள் அந்த அறையைத் திறப்பதற்கு ஒரு நிபந்தனை உள்ளது. அதற்கேற்பவே தான் நாங்கள் செயல்பட முடியும் என்று கூறினர்.

நிபந்தனையைக் கூற வேண்டினான் மன்னன்.

அதுகேட்ட அந்தணர் தம் நிபந்தனையைக் கூறு வார்கள். அதாவது, ''தேவார ஆசிரியர்களான சமய குரவர் மூவருடைய கைகளினால் இடப்பட்ட இலச்சினை யுடன் (முத்திரையுடன்) இவ்வறை பூட்டப்பட்டுள்ளது. அம்மூவரும் நேரில் வந்தாலன்றி, இவ்வறையைத் திறக்க இயலாது'' என்று அவர்கள் கூறிவிட்டனர்.

''இப்போது, சமயக் குரவர் மூவரும் உயிருடன் இல்லையே! என் செய்வது?'' என ஒரு கணம் அவன் மனம் பேதலித்தது. அடுத்த கணம் அவன் உள்ளத்தில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

மன்னன் அதன்படி இயங்கத் தொடங்கினான்.

முதலில் தில்லை அம்பலவாணருக்குச் சிறப்புப் பூசைகள் நடத்தினான். அடுத்து, சமயகுரவர் மூவர் படிமத் திருவுருவங்களுக்கும் வழிபாடு இயற்றினான். பிறகு, அப் படிமங்களைத் திருவீதி உலா வரச் செய்தான். அடுத்து, அவற்றைக் கனக சபையை வலம் வரச் செய்து, திருப்பதிகங்கள் சேமித்து வைக்கப்பட்ட அறையின் முன்பு எழுந்தருளச் செய்தான்.

பிறகு, தில்லை அந்தணர்களிடம் மன்னன், ''இதோ, சமய குரவர் மூவரும் எழுந்தருளி விட்டனர்; அறையைத் திறமின்'' எனப் பணித்தான்.

மன்னனின் சமயோசித அறிவை வியந்து பாராட்டிய அந்தணர்கள், அம்மூவர் படிமங்களும் எழுந்தருளியதற்கு எதிரேயுள்ள அறையைத் திறந்தனர்.

அறையினுள்ளே சென்று பார்த்தபோது, திருப் பதிகங்கள் எழுதப்பட்ட ஓலை ஏடுகள் பல, கரையான் பூச்சிகளால் மண்மூடி மறைக்கப்பட்டிருந்தன. மண்ணால் மறைக்கப்பட்டவற்றின் மீது எண்ணெய் சொரிந்து, அவ்வேடுகளை வெளியே கொண்டு வந்தனர். அவற்றை எடுத்துப் பார்த்தபோது, அவற்றுள் பெரும்பாலான ஏடுகள் சிதைக்கப்பட்டிருந்தன.

அதைக் கண்ட மன்னன் அளவிலாத் துயரம் அடைந்தான். அப்போது,

''இக்காலத்திற்குத் தேவையானவற்றை மட்டும் வைத்து விட்டு மற்றவற்றைச் செல்லரிக்கச் செய்தோம்'' என்ற தோர் அருள்வாக்கு (அசரீரி) அங்குக் கூடியிருந்தோர் அனைவரும் கேட்கும்படி எழுந்தது. இந்த வாக்கு அம்பலவாணனின் அருள் வாக்கேயாகும் என உணர்ந்து ஆறுதல் அடைந்தனர்.

பின்னர், சோழ மன்னன், நம்பியாண்டார் நம்பியைச் செல்லரிக்காது எஞ்சியுள்ள ஏடுகளை மட்டும், சிதையாமல் எடுத்து, அவற்றிலுள்ள பதிகங்களைத் தொகுத்து அருளும்படி வேண்டிக் கொண்டான்.

நம்பியாண்டார் நம்பியும் மன்னன் வேண்டுகோளுக்கு இசைந்தார். முதலில் மூவர் பாடிய திருப்பதிகங்களைத்

தொகுத்தார். அவை ஏழு தொகுதிகள் கொண்டவை. அவற்றிற்குத் திருமுறைகள் என்று பெயர் சூட்டப்பட்டன. முறை என்பதற்கு நூல் என்னும் பொருள் ஒன்று உண்டு. ஆதலால், நம்பியாண்டார் நம்பி தொகுத்த தொகுதி ஒவ்வொன்றும் 'முறை' எனப்பட்டது. மேலும், அத்தொகுதி ஒவ்வொன்றும் முறைப்பட இயற்றப் பெற்றமையின் முறை என்றும் பெயர் பெற்றதாகும். அந்த முறை (நூல்) இறைவனைப் பற்றி எழுந்தது ஆகையால், திருமுறை எனப்பட்டு ஏழு திருமுறைகளாக வகுக்கப் பட்டன.

அந்த ஏழு திருமுறைகளும் தொகுக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

1. திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளியவற்றை முதலில் வைத்து, ஒன்று, இரண்டு, மூன்று என மூன்று திருமுறைகளாகக் கொள்ளப்பட்டன. 3
2. திருநாவுக்கரசர் பாடியருளியவற்றை அடுத்ததாக வைத்து நான்கு, ஐந்து, ஆறு என மூன்று திருமுறைகளாகக் கொள்ளப்பட்டன. 4
3. அவற்றை அடுத்து, சுந்தரர் பெருமான் அருளிய வற்றை ஏழாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு முதல் ஏழு திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி அவர்கள் தொகுத்தருளினார்.

நம்பியாண்டார் நம்பி, தமக்குப் பொல்லாப் பிள்ளையார் உபதேசித்தருளிய வண்ணம், சுந்தரர் பெருமான் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு, "திருத்தொண்டர் திருவந்தாதி" என்னும் நூலை அருளிச் செய்தார். மேலும், சம்பந்தப் பெருமான் மீது ஆறு பிரபந்தங்களையும், நாவுக்கரசர் மீது ஒரு பிரபந்தமும் மற்றும் இரு நூல்களையும் செய்தருளினார்.

இவ்வாறு, முதல் ஏழு திருமுறைகள் நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பட்டு நமக்குக் கிடைத்ததன் வரலாற்றை அறிந்து கொண்டோம்.

இனி, அந்த முதல் ஏழு திருமுறைகளுக்கும் இசை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் மன்னனுக்கும் நம்பியாண்டார் நம்பிக்கும் எழுந்தது.

திருமுறைகள், பக்தியுள்ளத்தோடு அவன் அருளா லேயே அருளப்பட்ட பாடல்களைக் கொண்டன அல்லவா! அத்தகைய பாடல்களுக்கு இறையருள் இருந்தால் தானே முறையான பண் அமைக்க முடியும். அந்தப் பண் அமைப்பதில் முறைமையும் திறமையும் கொண்டவர்களை அல்லவா அணுக வேண்டும். அப்போது அவர்களுக்கு ஒரு வழி தோன்றியது.

சிதம்பரத்திற்கு மேற்கே திரு எருக்கத்தம்புலியூர் என்னும் சிவத்தலம் ஒன்று உள்ளது. அவ்வூர், சம்பந்தப் பெருமானுடன் சென்று யாழ் வாசித்த திருநீலகண்ட

யாழ்ப்பாணர் அவதரித்த திருவூராகும். அங்குச் சென்றால் ஏதாவது வழிபிறக்கும் என்ற எண்ணத்தில், மன்னனும் நம்பியும் திரு எருக்கத்தம்புலியூர் சென்றார்கள்.

அங்குள்ள திருக்கோயில் இறைவனை வழிபட்டார்கள். தங்கள் எண்ணம் நிறைவேறும் பொருட்டு அருள்புரிய வேண்டும் என்று இறைவனிடம் முறையிட்டார்கள்.

அப்போது ஓர் அசரீரி (அருள்வாக்கு) எழுந்தது.

''திருநீலகண்ட பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண் ஒருத்திக்கு, இசைத்திறனை அளித்துள்ளோம்; அவளைத் தில்லையம்பலத்திற்கு அழைத்துச் சென்று, அங்குத் தேவாரத் திருப்பதிகங்கட்குப் பண் அடைவு (முறை) வகுக்கக் கடவீர்'' என்பது அவ்வருள்வாக்காகும்.

மன்னனும் நம்பியும் அவ்வருள் வாக்கின் வண்ணம், அவ்வூரிலிருந்த பாடினியை அழைத்துக் கொண்டு தில்லையம்பதிக்குச் சென்றார்கள். அங்கே தில்லைக் கோயிலில் தில்லையம்பல முன்றில் பாடினியைக் கொண்டு திருப்பதிகங்கட்குப் பண் வகுக்கச் செய்தார்கள்.

இவ்வாறு நம்பியாண்டார் நம்பியின் முயற்சியால் தேவாரத் திருமுறைகளுக்குப் பண் அமைக்கப்பட்டு அந்தந்தப் பண்களுக்கு உரிய கட்டளைகள் வரையறுக்கப்பட்டன. 'கட்டளை' என்பது ஒரு பண்ணுக்கு உள்ள சந்த நடை வேறுபாடுகளுக்கு ஏற்ப அமையும்

பல்வேறு நடைமுறைகளைக் குறிக்கும். ஒவ்வொரு பண்ணுக்கும் பல கட்டளைகள் உண்டு. கட்டளைக்கு ஏற்ப யாப்பு அமைப்பும் வேறுபடும். தேவாரங்களுக்கு அமைந்த பண்கள் இறைவன் திருவருளால் வகுக்கப் பட்டன. இது பற்றியே, ஒவ்வொரு தேவாரப் பதிகத்திற் கும் என வகுக்கப்பட்ட பண்ணினை மாற்றி வேறு பண்ணில் பாடுதல் கூடாது எனும் மரபு கடைப்பிடிக் கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பல்லாண்டுகளாக அறியப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருகின்ற இசை வகைகளுள் தமிழ்த் திருமுறை இசை என்னும் ஒரு பிரிவும், கருநாடக இசை (தென்னகச் செவ்விசை) என்னும் மற்றொரு பிரிவும் உண்டு. திருமுறை இசையில் பண் பயன்படுகிறது. கருநாடக இசையில் இராகம் பயன்படுகிறது.

ஒவ்வொரு பண்ணுக்கும் இயைந்த (ஏற்ற) இராகம் என்ன என்பதையும் ஆராய்ந்து அறிஞர்கள் வெளியிட்டுள்ளார்கள். அவற்றைத் தெரிந்து கொள்வது நலம் பயக்கும் எனக் கீழே குறிக்கப்படுகின்றன.

எனவே, தேவாரத் திருப்பதிகங்களுக்கு, அமைந்த பண்களுக்கு இசைந்த இன்று வழங்கப்படுகின்ற இராகங்களும் பாட்டும் எடுத்துக்காட்டும் பின்வருமாறு:

	பண்	இராகம்	பாட்டு-எடுத்துக்காட்டு
1.	செவ்வழி	எதுகுல காம்போதி	தொண்டர் அஞ்சு-சம்பந்தர்
2.	தக்கராகம்	காம்போதி	மடையில் வாளை - சம்பந்தர்
3.	புறநீர்மை	பூபாளம்	மங்கையர்க்கரசி - சம்பந்தர்
4.	பஞ்சமம்	ஆகிரி	பைங்கோட்டுமலர்ப் புன்னை - சம்பந்தர்
5.	நட்டபாடை	நாட்டை, கம்பீர நாட்டை	தோடுடைய செவியன் - சம்பந்தர்
6.	அந்தாளக்குறிஞ்சி	சாமா	கல்லூர்ப் பெருமணம் - சம்பந்தர்
7.	காந்தாரம்	நவரோசு	மந்திரமாவதுநீறு - சம்பந்தர்
8.	கொல்லி	நவரோசு	தில்லைவாழந்தணர் - சுந்தரர்
9.	கொல்லிக் கௌவாணம்	நவரோசு	மண்ணில் நல்லவண்ணம் - சம்பந்தர்
10.	பழம் பஞ்சுரம்	சங்கராபரணம்	வேதவேள்வியை - சம்பந்தர்

11.	மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி	புலனைந்தும் பொறிகலங்கி சம்பந்தர்
12.	பழந்தக்கராகம்	சுத்தசாவேரி	மறை உடையாய் - சம்பந்தர்
13.	குறிஞ்சி	அரிகாம்போதி	வாசிதீரவே - சம்பந்தர்
14.	நட்டராகம்	பந்துவராளி	என்ன புண்ணியம் - சம்பந்தர்
15.	வியாழக்குறிஞ்சி	சௌராஷ்ட்டிரம்	அவ்வினைக்கு இவ்வினை - சம்பந்தர்
16.	செந்துருத்தி	மத்தியமாவதி	மீளாஅடிமை - சுந்தரர்
17.	தக்கேசி	காம்போதி	பூவார்கொன்றை - சம்பந்தர்
18.	இந்தளம்	நாதநாமக்கிரியை	சடையாய் எனுமால் - சம்பந்தர்
19.	காந்தார பஞ்சமம்	கேதாரகௌளை	இடரினும் தளரினும் - சம்பந்தர்
20.	கௌசிகம்	பயிரவி	காதலாகிக் கசிந்து - சம்பந்தர்
21.	பியந்தைக் காந்தாரம்	நவரோசு	வேயுறு தோளிபங்கன் - சம்பந்தர்
22.	சீகாமரம்	நாதநாமக்கிரியை	மட்டிட்ட புன்னையங்கானல் -சம்பந்தர்
23.	சாதாரி	பந்துவராளி	மருந்தவை மந்திரம் - சம்பந்தர்

சம்பந்தர் பாடிய மூன்று திருமுறைகளுள் முதல் திருமுறையின் இறுதியில், ''மாதர் மடப்பிடியும்'' எனத் தொடங்கும் ஒரு பதிகம் உள்ளது. இந்தப் பதிகத்தைச் சம்பந்தர் பாடவும், அவருடன் அவர் பாட்டுக்கேற்ப யாழில் இசையமைத்துப் பாடி வந்த திருநீலகண்ட பெரும்பாணர், அப்பதிகத்தின் இசை யாழில் அடங்காதது உணர்ந்தார். எனவே, இந்த யாழினை இனித் தொடுவதில்லை என்று சொல்லித் தம் கையில் உள்ள யாழினைப் பெரும்பாணர் ஓங்கினார். சம்பந்தப் பெருமான் அதனைத் தடுத்தருளி, யாழினைத் தம் கையில் வாங்கிக் கொண்டார். உடன், பெரும்பாணரை நோக்கி, ''சிவபெருமானின் பெருமை எல்லாம் இந்த யாழினில் அடங்குமா? அடங்காது. ஆகையால், திருப்பதிக இசையினை இயன்றவாறு பாடி இசைப்பீராக'' என்று கூறியருளி, யாழினைப் பாணர் கையில் திரும்பக் கொடுத்தருளினார்.

இந்தக் காரணத்தாலேயே, ''மாதர் மடப்பிடி'' என்னும் பதிகத்திற்கு ''யாழ்முரி'' என்னும் தலைப்புக் கொடுக்கப் பட்டது. ஆகவே, யாழ்முரி என்பது ஒரு பண் அன்று. இப்பதிகத்தின் பண்ணும் யாது என்பது தெரியவில்லை. இக்கருத்துத் திருமுறைப் பண்களில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்களின் அன்றுமுதல் இன்று வரை நிலவிவரும் ஒத்த கருத்தாகும். இருப்பினும், இக்காலத்தில் இதனை அடாணா இராகத்தில் பாடுகிறார்கள்.

இவ்வாறு, சைவம் தழைத்தினிதோங்க நமக்குத் தேவாரப் பதிகங்கள் பண்ணோடு கிடைத்துள்ளன. இதை எண்ணி மகிழ்ந்து, இப்பதிகங்கள் கிடைப்பதற்கு மூலகாரணமாய் இருந்தவர்களை, அவர்கள் செயலை மீண்டும் ஒருமுறை சுருக்கமாகச் சில வரிகளில் எடுத்துக் கூறுவதால் தவறேதும் இல்லை எனக் கருதுகிறோம்.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் திருவுளங் கொண்டு, தேவாரத் திருப்பதிகங்கள் இருக்கும் இடத்தைக் காட்டினார். அவ்விதம் காட்டியவரைத் ''திருமுறைகள் காட்டிய தெய்வக்களிறு'', எனப் போற்றிப் பணிவோம்.

பிள்ளையார், பதிகங்கள் இருக்கும் இடத்தைக் காட்டவும், இராச இராச சோழ மன்னனும், நம்பியாண்டார் நம்பியும் அவற்றைச் சேதமின்றி வெளிக் கொணர்ந்தனர். அவ்விதம், வெளிக்கொணர்ந்த சோழ மன்னனை ''திருமுறை கண்ட சோழ மன்னன்'' என்று தமிழ் உலகம் போற்றுகிறது.

பின் சோழ மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க அப்பதிகங்களைச் சுந்தரர் ஏழு திருமுறைகளாக ஒழுங்கு படுத்தினார். வியாசர் எப்படி வேதங்களை ஓர் ஒழுங்கு படுத்தினாரோ, அதுபோல இவரும் திருமுறைகளை ஒழுங்கு முறைப்படுத்தியதால், இவர் ''தமிழ் வியாசர்'' எனப்பட்டார்.

திருஎருக்கத்தம்புலியூர் இறைவன் திருவுளங் கொண்டு பண் அமைக்கப் பாடினி ஒருத்தியை அருள் மொழியாக (அசரீரியாக)த் தெரிவித்ததால், ''பண்ணமைக்கப்

பாடினியை''ப் ''பரிந்துரைத்த பரமன்'' என மக்களால் வணங்கப் பெறுகிறார்.

பதிகங்களுக்கு ஏற்ற முறையான பண்களை அமைத்துக் கொடுத்த பாடினியைத் ''திருமுறைப் பண் அமைத்த நாயகி'' என்றும் கூறலாம் அல்லவா!

துணை நின்ற நூல்கள்:

1. வைத்தியநாதன், கு., ஆசிரியர், பன்னிரு திருமுறை வரலாறு, 1992. திருவாவடுதுறை ஆதீன, சைவ சித்தாந்த நேர்முகப்பயிற்சி மையம், திருவிடை மருதூர்.

2. சாந்தினி, வெற்றி தரும் விநாயகர், 1996, காமதேனு பப்ளிகேஷன் லிட்., சென்னை 1996

குமரகுருபரர் காட்டும் அன்னை சிவகாமவல்லி

தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

(சிதம்பரச் செய்யுட் கோவை: 45)

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி. மதுரையை, திருமலை நாயக்கர் அரசாண்டிருந்த காலம். அந்தக் காலக் கட்டத்தில் தான் இமயம் முதல் குமரி வரை சைவத்தை நிலைநாட்டிய பெருந்தகையார் ஒருத்தர் வாழ்ந்தார். அவரே குமரகுருபர அடிகளாவர்.

அடிகளார் பிறந்த ஊர் ஸ்ரீ கைலாசபுரம் ஆகும். இவ்வூர் தாமிரபர்ணி ஆற்றின் வடகரையிலுள்ள ஸ்ரீவைகுந்தபுரத்தின் வடபால் உள்ளது. அடிகளாரின் தந்தை சண்முக சிகாமணிக் கவிராயர் ஆவர்; தாய் சிவகாமசுந்தரி அம்மையார் எனப்படுவர். இவ்விருவரும் செய்த நல்ல தவப்பயனாலேயே இறைவன் திருவருளால் குமரகுருபரர் இத்தம்பதிகளுக்கு மகனாக வந்து தோன்றினார்.

அப்படிப் பிறந்த குழந்தை ஐந்து வயது வரையிலும் பேசும் திறன் அற்று இருந்தது. அதனால், பெற்றோர் பெரிதும் வருத்தமுற்றனர். திருச்செந்தூர் சென்று

செந்திலாண்டவனை வணங்கி அவன் சந்நிதியிலே வளர்த்தி விட்டுத் தாமும் பாடு கிடந்தனர்; தம் குறையைத் தெரிவித்தனர்; அருள்புரிய வேண்டினர்.

பின்னர், முருகவேளின் திருவருளால் அக்குழந்தை பேசும் ஆற்றலைப் பெற்றது. அவனருளால் அதற்குக் கல்வி ஞானமும் வந்தெய்தியது. அப்பொழுதே, அப்பெருமான் மீது அக்குழந்தை கந்தர் கலிவெண்பா என்னும் ஒரு பிரபந்தத்தைப் பாடியது. அக்கலிவெண்பா 122 கண்ணிகளைக் கொண்டது; முருகவேளின் பெருமைகளை உரைப்பது; கந்தபுராணத்தின் சுருக்கமாக வும் உள்ளது. இவற்றை நூலைப் படிப்போர் நன்குணர்வர்.

இவ்விதம் குழந்தை பாடியதைக் கேட்டு அனைவரும் வியந்தனர்; பெற்றோரும் மகிழ்ந்தனர்; பெருமானை வழிபட்டனர்; பிள்ளையோடு ஊர் திரும்பினர்.

குழந்தைக் குருபரர் இளைஞரானார். செந்திலாண் டவன் திருவருளால் இலக்கண இலக்கியங்களையும், ஞான சாத்திரங்களையும் விரைந்து கற்றுத் தேர்ந்தார்; கவிபாடும் பேராற்றலும் பெற்றுத் திகழ்ந்தார். பழைய நல்வினையின் பயனாய்ப் பக்தி ஞான வைராக்கியம் இவரிடத்தே வளரத் தொடங்கியது. பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு பல சிவதலங்களுக்கும் சென்று சிவதரிசனம் செய்யத் தொடங்கினார்.

மதுரை சென்று சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது, மீனாட்சியம்மை மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார். அக்காலத்தில், மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர்

முன்னிலையில் அதனை அரங்கேற்றினார். அவ்விதம் அரங்கேற்றுகையில் மீனாட்சி அம்மையே குழந்தை வடிவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்தாராம். பிள்ளைத்தமிழில் வரும் முத்தப் பருவத்திற்குரிய பாட்டு அரங்கேறும் போது, தம் கழுத்திலிருந்த முத்து மாலை ஒன்றை குமரகுருபரருக்கு அணிந்து விட்டு மறைந்தாராம். திருமலை நாயக்கரும், குமரகுருபரருக்குச் சிறப்புச் செய்து, பரிசுகள் பலவற்றை வழங்கினாராம். இவ்வாறு வரலாறு கூறுகிறது.

அதன்பின், பக்தி வைராக்கியம் மேலும் சுடர் விடவே, சிவஞான உபதேசம் பெற வேண்டும் என்னும் கருத்து, இவருக்கு மேலிட்டது. அதன் விளைவாகத் தருமபுர ஆதீனத்து 4ஆம் பட்டத்துக் குருமூர்த்தியாக விளங்கிய சீர்வளர் மாசிலாமணி தேசிகரை அணுகி, அவரது மாணவரானார்.

அப்பால், தமக்குத் துறவு நிலை அருள வேண்டுமென ஆதீனத்திடம் வேண்டினார். துறவு மேற்கொள்வதற்கு முன், தல யாத்திரை செய்வது ஆதீனத்தின் மரபு ஆகும். அதற்கேற்ப, மாசிலாமணி தேசிகரும், குமரகுருபரரை நோக்கிக் காசி யாத்திரை செய்து வரும்படி கட்டளை யிட்டார். காசி சென்று வருவதென்றால் (அக்கால நிலைப்படி) நெடுங்காலம் கழிந்து விடுமே என்று குமரகுருபரர் வருந்தினார். அதைக் கண்ட தேசிகர், சிலகாலம் சிதம்பர வாசமேனும் செய்து வரும்படி குருபரரைப் பணித்தார்.

அதன்படியே, குமரகுருபரர் சிதம்பரம் போந்து சிலகாலம் தங்கினார். அங்கே தில்லை நடராசப் பெருமானையும், சிவகாம வல்லியையும், நாள்தோறும் எல்லையில்லாத பக்தியோடு வழிபட்டு வந்தார். அதன் பயனாகச் சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்னும் செந்தமிழ்க் கவிதை நூல்களை அவர் இயற்றி அருளினார். அந்நூல்களுள் வரும் ஒன்றிரண்டு பாடல்களின் கருத்துகளை மட்டும் சுருக்கமாகக் கண்டு களிப்போம்.

எம்பெருமானாகிய பரம்பொருள், தமக்கென ஓர் உருவும், ஒரு பெயரும் உடையவன் அல்லன். ஆயினும், நம் பொருட்டு அவன் பல உருவமும் பல பெயரும் கொண்டு அருள்புரிகின்றான். அவ்வுருவங்களுள் நடராச உருவம் மிகவும் சிறப்புடையது.

தில்லையில் விளங்கும் நடராசப் பெருமானின் திருவுருவுக்கு அருகில், சிவகாமியம்மையின் திருவுரு வமும் அமைக்கப் பெற்றிருக்கும். உற்று நோக்கினால், நடராசரின் முகமானது சற்றுச் சாய்ந்து, அருகில் நிற்கும் சிவகாமியம்மையை நோக்கி ஆடுவது போலுள்ளதைக் காணலாம்.

இவ்விதம் அமையப் பெற்றுள்ளதைச் சேக்கிழார் சுவாமிகள், தமது பெரிய புராணத்தில் பின்வருமாறு பாடியுள்ளார்.

"மாரொரு பாகம் நோக்கி
மன்னு சிற்றம் பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் ...."

(பெரிய புராணம்: 149)

இங்ஙனம், "அம்பிகையை நோக்கியே எம்பெருமான் ஏன் தன் ஆடலை நிகழ்த்த வேண்டும்?" என்பதைப் பற்றிக் குமரகுருபரர் சிந்தித்தார். இறைவன் அருளால் தம் முள்ளே கருத்தொன்று பளிச்சிட அதை அழகுற விளக்குகின்றார்.

எம்பெருமான் உயிர்கள் உய்யும் பொருட்டுத் தில்லையில், ஆனந்தத் தேன் சொரிந்து அருள் நடனம் புரிகின்றார். அந்தத் தேன் நாலாபுறங்களிலும் பேரானந்தப் பெருவெள்ளமாகப் பாய்கின்றது. அதைக் காண்பதற்குரிய பக்குவம் உயிர்களுக்கு இல்லையென்றால், அவை பிறவி நோயில் வீழ்ந்து வருந்த வேண்டியே நேரும்.

ஆனால், எம்பெருமானுக்கு அருகில் நிற்கும் அருளே வடிவான சிவகாமியம்மை என்ன செய்கிறாள் தெரியுமா? உயிர்களை எல்லாம் ஈன்றெடுத்த தாய் அல்லவா அவள்.

அத்தாயின் உள்ளத்தில் ஒரு பரிவு உணர்ச்சி ஏற்படுகிறது. அப் பேரானந்தப் பெரு வெள்ளத்தைப் பருக முடியாமல் தம் குழந்தைகள் அல்லற்படக் கூடாதே

என்று எண்ணுகிறாள். அதற்கு அவள் என்ன செய்கிறாள்?

இதற்கு விடையாக, உலகில் மனித குலத்தில் ஒரு தாய் தன் குழந்தை நோயால் வருந்தும் போது, மேற்கொள்ளும் செய்கையோடு ஒப்பிட்டு நமக்கு விளக்குகிறார் குமரகுருபரர்.

பச்சிளங் குழந்தை ஒன்று நோயால் வருந்துகிறது. அக் குழந்தைக்குத் தாய் என்ன செய்ய வேண்டும்? நோய் தீருவதற்கான மருந்தை அக்குழந்தை உட்கொள்ளும்படி செய்ய வேண்டும். ஆனால், தாய் அவ்விதம் செய்வதில்லை. காரணம், குழந்தையின் இளங்குடல், அம் மருந்தினைச் சீரணிக்கும் சக்தியற்றது எனத் தாய் கருதுகிறாள். அம்மருந்தை அவளே உட்கொள்ளுகிறாள். மருந்து அவள் உடலில் பரவிப் பாலில் கலக்கிறது. குழந்தை உட்கொண்ட அப்பாலானது, அதன் வயிற்றினுள் சென்று நோயைத் தீர்த்துக் குணமாக்குகின்றது. இதுவே உலகியல் நடைமுறையில் நாம் காணும் காட்சியாகும்.

இந்த உலகத்து இயல்பினைத் தான், உலகத்து உயிர்கள் அனைத்துக்குமே தாயாக விளங்கும், சிவகாமியம்மையும் மேற்கொள்ளுகிறாள் என்று குமரகுருபரர் கூறுகிறார்.

அதாவது, நடராசமூர்த்தியின் ஆனந்த நடனத்தைக் கண்டு பயன்பெறும் பக்குவம் வாய்க்கப் பெறாத உயிர்களின் சார்பாக அம்மையே அதைக் கண்டு உயிர்களுக்கு உதவுகிறாளாம்.

எப்படி?

எம்பெருமானின் ஆனந்த நடனமாகிய மருந்தினை எல்லா உயிர்களும் உட்கொள்ள முடியாது. ஞான வலிமை உடையவர்களே அம்மருந்தை உட்கொண்டு அனுபவிக்க முடியும். எனவே, ஞான வலிமை பெறாத உயிர்களும், தம் பிறவியாகிய நோயைத் தீர்த்து முத்தியின்பம் பெற வேண்டும் என்று சிவகாமி அன்னையின் அருள் உள்ளம் மேலோங்க உயிர்களின் சார்பாக அன்னையே எம்பெருமானின் நடனத்தைக் காண்கின்றாராம். அதன்மூலம் குழந்தைகளாகிய நமக்கு வந்து சேர்ந்த பிறவி நோயைப் போக்குகின்றாராம்.

இவ்வாறு, குமரகுருபர அடிகளார் சிவகாம வல்லியின் பேரருள் திறத்தினைத் தாம் இயற்றிய சிதம்பர மும்மணிக் கோவ்வ என்னும் நூலில் போற்றித் துதித்து மகிழ்கிறார்.

இனிப் பாடலைக் கீழே காண்போம்:

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம்ஈன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன் ...."

(சிதம்பர மும்மணிக் கோவை: 14-21)

உலகத்து உயிர்களுக்கெல்லாம் சிவகாமவல்லியே தாயாக இருந்து பேரருள் வழங்குகிறாள் அல்லவா? இந்தச் சிவகாமவல்லி ஒருத்தியே, தில்லையில் ஐந்தொழில் நாடகம் புரியும் நடராச பெருமானுக்கு மனைவி - தாய் - தங்கை - மகள் என்னும் பல நிலைகளில் இருந்து, அவன் செயலுக்குத் துணை புரிகின்றாள் என்பதைக் கீழ்வரும் பாடலில் குருபரர் எடுத்தோதுகிறார்.

"கனகமார் கவின்செய் மன்றில்
அனகநாட கற்கெம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள்."

(சிதம்பர செய்யுட்கோவை: 33)

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்" என்று சிவஞான சித்தியாரில், அருணந்தி சிவம் அருளிச் செய்துள்ளபடி, சிவகாமவல்லியே ஈசனின் செயலுக்கும் இயலுக்கும் ஏற்றவாறு துணை புரிகின்றாள் என்பதனால் மனைவி ஆகின்றாள்; சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலால் தாயாகின்றாள்; சிவ தத்துவம் தோன்றிய பின்னரே சக்தி தத்துவம் தோன்றுதலின் தங்கையாகின்றாள்; சிவமே தன்னிடமிருந்து சக்தியைத் தோற்றுவித்தலின் மகளாகின்றாள்.

இவ்வாறு, சிவகாமவல்லியாகிய அன்னையை, நாடகத்தில் ஒருவரே பல வேடங்களில் தோன்றும் உலக இயல்பு போல, இறைவன் இயற்றும் இந்நாடகத்தில், பல வேடங்களில் நடிக்கும் தெய்விக நடிகையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் குமரகுருபரர்.

பரமன் இயற்றும் இந்நாடகம் நம் பவவினையைப் போக்குவதற்குத்தானே அமைந்துள்ளது. இந்நாடகம் உலகியலில் நடைபெறும் நாடகங்களைப் போல் இழிந்ததன்று; உயர்வானது.

தில்லைச் சிவகாமியை ஒரு பாடலில் குமரகுருபரர் சிவகாமவல்லி என்றழைக்கிறார். வல்லி என்றால் கொடி. தேவர் உலகத்தில் உள்ளது காமவல்லி. இது அங்குள்ள கற்பகத் தருவில் படர்ந்து கேட்டதைக் கொடுக்கும் என்பர். தில்லைச் சிவகாமவல்லி ஆனந்த நடராசரைப் பற்றிப் படர்ந்துள்ளது. படர்ந்து அவரிடமிருந்து ஆனந்தத்தைப் பருகுகிறது. பருகிய ஆனந்தத்தை உயிர்கட்கு ஊட்டுகின்றது என்கிறார் குமரகுருபரர்.

சிவகாமி அம்மையை 'வல்லி' அதாவது, கொடி என்று தான் அவரே விளக்கம் அளிக்கிறார். அவளிடமிருந்தே தோன்றிய இவ்வுலகம் 'பூ' என்று சொல்லப்படுகிறது. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்று நால்வகைப் பூக்கள் உள்ளன. இவற்றுள் கொடிப் பூவே சிறந்தது என்பர். ஆகவே, அனைவராலும் பூ எனப் போற்றப்படும் இவ்வுலகைப் பூத்தவளை அதாவது தோற்றுவித்தவளைக் கொடி என்று அழைப்பது பொருத்தம் அல்லவா? இது ஒரே கொடியன்று; பல கொடிகளாக (வல்லிகளாக)வும் படர்ந்திருப்பதாகச் சித்திரித்துள்ளது குமரகுருபரரின் கவிநயத்தைப் புலப்படுத்துகிறது.

இனிப் பாடலைப் படியுங்கள்.

"ஒருவல்லி; அல்லிக் கமலத்தில் ஊறுபைந் தேறல் ஒத்த
திருவல்லி; தில்லைச் சிவகாம வல்லிஎன் சித்தத்துள்ளே
வருவல்லி; செம்பொன் வடமேறு வில்லியை வாட்கண் அம்பால்
பொருவல்லி பூத்தலின் அன்றோ இப்பூமியைப் பூஎன்பதே."

(தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை: 4)

கொடியாகக் காட்டிய சிவகாமியம்மையைக் குருபரர் கற்பகப் பூங் கொம்பாகவும் காட்டுகிறார்; இறுதியில் அவள் என்றும் குமரியாகவே காட்சி அளிப்பதாகவும் கூறி விளக்குகிறார்.

பூக்களை நாடி அதிலுள்ள தேனைப் பருக வண்டுகள் வருவது இயல்பு. ஒரு கொம்பில் பூக்கள் நிறையப் பூத்திருந்தால், அவற்றை நாடி இசை பாடி வரும் வண்டின் கூட்டத்திற்குத் தலை குனிந்து பூங்கொத்துகள் வளைத்து நிற்கும். ஆனால், தேவர் உலகத்துக் கற்பகத் தருவின் பூங்கொத்துகளை வண்டுகள் (அளிகள்) அணுகு வதில்லை. எனினும், தில்லைச் சிவகாமி, எம்பெருமானின் அளிக்கூட்டத்திற்கு, அதாவது அருள் வெள்ளத்திற்கு உடல் வளைத்துத் தலைகுனிந்து நிற்கும் கற்பகக் கொம்பாக உள்ளாள் என்கிறார். இச்செய்தியை ஒரு பாட்டின் முதற்பகுதியில் கூறும் குமரகுருபரர் அப்பாட்டின் இறுதியில், உலகில் பிறந்த பல உயிர்களைத் தான் பெறாது பெற்றாள் ஆகையால் அவள் என்றும்

குமரியாகவே காட்சி அளிக்கிறார் என்றும் கூறுகிறார். வேறொரு பாட்டில், குருபரர் சிவகாமி அம்மையை எம்பெருமானுக்கு மனைவி - தாய் - தங்கை - மகளாகக் காட்டியதை, நாம் இங்கு நோக்கி வியக்காமல் இருக்க முடியாது.

"தலைவளைத்து நாணி எந்தை தண்ணளிக்கே
ஒல்கும்
குலை வளைத்த கற்பகப் பூங்கொம்பர் -
கலைமறைகள்
நான்குமரி யார்க்கிந்த ஞாலமெலாம் ஈன்றளித்தும்
தான்குமரி யாகியிருந் தாள்."

(தில்லைச் சிவகாமி இரட்டை மணிமாலை: 15)

இவ்வாறு, அலகில் சோதியனாய் அம்பலத்தே ஆனந்த நடமிடும் அம்பலவாணனை அகலாது அணைந்து நிற்கும் அன்னை சிவகாமவல்லியைக் குமரகுருபரர் போற்றிப் புகழ்ந்து பாடித் துதிக்கிறார். அந்தச் சிவகாமி அம்மையின் திருவடிகளை நாம் அனைவரும் வணங்கி, வாழ்வாங்கு வாழ்ந்து உய்வதற்கு முயலுவோமாக!

துணை நின்ற நூல்கள்:

1. சாமிநாத ஐயர், டாக்டர் உ.வே., ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, மூலமும் ஆராய்ச்சிக் குறிப்புரையும், 1961, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு.

2. சிதம்பரம் ஸ்ரீ சபா நாயகர் கோயில் ஸ்ரீ சிவகாமி அம்பாள், திருக்கோயில் திருக் கும்பாபிஷேக மலர், 1972.

குமரகுருபரர் கூறும் அங்கயற்கண்ணியின் அரசாட்சி

வார்கொண் டணிந்தமுலை மலைவல்லி கர்ப்பூர
வல்லியபி ராமவல்லி
மாணிக்க வல்லிமர கதவல்லி யபிடேக
வல்லிசொற் றமிழ் தழையவே.

(மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்,
விநாயகக் கடவுள் துதி)

குமரகுருபரர் பிறந்து ஐந்து வயது வரையே பேசும் திறன் அற்றிருந்தார். செந்திலாண்டவன் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்றார்; கந்தர் கலிவெண்பா பாடினார். இளைஞரானார். ஆண்டவன் அருளாலேயே கல்வி ஞானம், சாத்திர ஞானமெல்லாம் கைவரப் பெற்றார். ஒரு ஞானாசிரியரைப் பெற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது. அவரைத் தேடி வடதிசை நோக்கிப் பயணமானார். வழியில் மதுரையை அடைந்தார். அங்கே சிலகாலம் தங்கியிருந்தார்.

அப்போது, மதுரையைத் திருமலை நாயக்கர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். அம்மன்னர் முன்னிலையில், குமர குருபரர் தாம் இயற்றிய மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றிக் கொண்டிருந்தார். அப்பிள்ளைத்

தமிழின் வருகைப் பருவப் பாடல்களில் ஒன்றான, ''தொடுக்கும் கடவுட் பழம் பாடல்'' என்னும் பாடலைப் பாடியபோது, மீனாட்சி அம்மையே குழந்தையாக நேரில் தோன்றி, மன்னர் மடியில் அமர்ந்து, பாடலைக் கேட்டு அனுபவித்து, மன்னர் கழுத்தில் இருந்த முத்து மாலையைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்தில் அணிவித்து அருளினார். இவ்வாறு, எல்லாராலும் இந்த நிகழ்ச்சி கூறப்படுகிறது.

இந்நிகழ்ச்சி பற்றி, வேறோர் கருத்தும் நிலவுகிறது. ''காலத் தொடுகற் பனை கடந்த கருவூலத்துப் பழம் பாடல்...'' என்னும் பாடலில் 'முத்தம் தருகவே' என முடியும்போது, முத்து மாலையை அம்பிகை அணிவித்தாள் என்பதே கொள்ளத் தக்கதாகும் என்பது அருணை வடிவேல் முதலியாரின் கூற்றாகும். ஆனால், தமிழண்ணல், சோம இளவரசு போன்றோர் முன்னால் சொல்லப்பட்ட கருத்திற்கே உடன்படுகின்றனர்.

எப்படியாயினும் ஆகுக. அற்புதம் நிகழ்ந்தது உண்மையே. இந்நூல் சிறப்பு எய்துவதற்கு இவ்வற்புதமே காரணமாகும்.

மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழில், குமரகுருபரர் மீனாட்சி அம்மை (அங்கயற்கண்ணி) தம் ஆட்சியின் போது அவர் மேற்கொண்ட நாற்றிசை வெற்றியை (திக்விஜயத்தை), நயம்பட எடுத்துக் கூறியுள்ளார்.

அதுபற்றி இனிச் சிந்திப்போம்.

அதற்குமுன், மீனாட்சி அம்மை மதுரையில் தோன்றிய வரலாற்றைச் சிறிது தெரிந்து கொள்வது நலம் பயக்கும்.

ஒரு காலத்தில், மதுரையை மலயத்துவச பாண்டிய மன்னன் என்பான் ஆண்டு வந்தான். அவனது மனைவி காஞ்சனமாலை என்னும் பெயருடையாள் ஆவள். அவர்களுக்கு நீண்ட நாட்களாக மக்கட்பேறு இல்லாத குறை இருந்தது. அதன் பொருட்டு, இறைவனை வேண்டி வேள்வி செய்தனர். வேள்வியினின்றும் மூன்று வயது பெண் மகவு ஒன்று வெளிப்பட்டது. அப்பெண் குழந்தைக்கு மூன்று தனங்கள் இருந்தன. வெளிப்பட்ட அக்குழந்தை காஞ்சனையின் படியில் வந்து அமர்ந்தது. அக்குழந்தை உமாதேவியின் மறுதோற்றமாகும்.

அக்குழந்தையைக் கண்டு மலயத்துவசன் மனவருத்தம் கொண்டான். அவன் விரும்பியதோ, தனக்கு அடுத்த வாரிசாக ஓர் ஆண்குழந்தை வரவேண்டும் என்பதே யாகும். வந்ததோ பெண்குழந்தை; அதுவும் மூன்று தனங்களுடன் தோன்றிய குழந்தையாகும். அப்போது, வானத்திலிருந்து ஓர் அருள்மொழி (அசரீரி) எழுந்தது. "மன்னனே! உன் பெண் மகவுக்கு ஓர் ஆண் பிள்ளைக்குச் செய்வது போல் சடங்குகள் யாவும் செய்து "தடாதகை" என்று பெயரிட்டு முடிசூட்டக் கடவாய்! இப் பெண் தனக்கு ஏற்ற கணவரைக் காணும் போது, ஒருதனம் தானாகவே மறையும். ஆதலால், மனங் கலங்காதே!" என்பதே அவ்வருள் மொழியாகும்.

அவ்வருள் மொழி கேட்ட மன்னன் அமைதியுற்றான். குழந்தைக்குத் 'தடாதகை' என்று பெயரிட்டான். அருங்கலைகள் யாவும் கற்பித்து வளர்த்தான். தடாதகையும் வேதங்கள் முதல் அறுபத்து நான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். படைக்கலப் பயிற்சியிலும் வல்லவரானார்; உரிய பருவம் வந்தடைந்தார். மன்னன், தன் பெண்ணுக்கு முடிசூட்டி மகிழ்ந்தான். சில நாட்களில் மன்னன் விண்ணுலகு எய்தினான்.

மன்னன் மறைவுக்குப் பிறகு, தடாதகைப் பிராட்டியார் மனுநூல் முறைப்படி ஆட்சி செய்து வந்தார். அவருக்குத் திருமண வயது வந்தது. தாய் காஞ்சனை வருத்தம் கொண்டார். தாயின் வருத்தத்தை அறிந்த பிராட்டியார், "தாயே! வருந்தற்க! தங்கள் மனக்கவலையைப் போக்க, எட்டுத் திசைகளிலும் சென்று வெற்றியை நிலை நாட்டுவேன். அப்போது, தாங்கள் கொண்டுள்ள எண்ணம் நிறைவேறும்" என்று சொல்லி, வெற்றி முரசு கொட்டப் போருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பிராட்டியார் நிகழ்த்திய போர், பூவுலகில் மட்டுமன்று தேவர் உலகத்திலும் நிகழ்ந்தது. கடைசியாகக் கயிலாயத்திற்கே சென்று தம் போர்க் கொடியைத் தூக்கினார். சென்ற இடமெல்லாம் வென்றே வந்தார்.

இவற்றையெல்லாம், குமரகுருபரர் தம் பிள்ளைத் தமிழில் நயம்படக் கூறியுள்ளார்.

இந்தக் கட்டுரை, பிராட்டியாரின் போர் புரிந்து வெற்றி அடைந்த செய்தியைக் குறிக்க இருப்பதால், அந்தப் போரைப் பற்றிக் கூறும் இடங்களில் எல்லாம் குமரகுருபரர் அவ்வப் பாடல்களில் எவ்வாறு அவற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறார் என்பதை ஆங்காங்கே காணலாம்.

முதலில், பிராட்டியார் பூவுலகில் செய்த வெற்றிப் போர்களைப் பார்ப்போம்.

பிராட்டியார் வேற்று அரசர்களோடும், திசைத் தலைவர்களோடும் போர் புரிந்தார். அப்போது, பிராட்டியாரின் சேனைத் தலைவர்கள் சரமாரி பொழிந்த அப்புகளால் பகைவர்களின் கிரீடங்கள் வீழ்த்தப்பட்டன. அதைத் தொடர்ந்து அவர்களது தலைகள் வெட்டப்பட்டு வீழ்ந்தன. போரில் இரத்த ஆறு ஓடிற்று. தலையறுபட்ட பிணங்கள் (கவந்தங்கள்) கைகோத்து, மண்டலமிட்டுப் பவுரிக் கூத்தாடின. இதனை,

"சோனைக் கணைமழை சொரியப் பெருகிய
குருதிக் கடலிடையே
தொந்த மிடும்பல் கவந்த நிவந்தொரு
சுழியற் பவுரிகொள"

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், தாலப் பருவம்: 7

என்னும் அடிகளில் கூறுகிறார்.

அந்தப் போர்க்களத்தில் இறவாமல் இருந்த யானைகளும் குதிரைகளும், அங்குள்ள இரத்தக் கடலில்

அங்குமிங்கும் ஓடின. அது, பார்ப்பதற்கு அம்மானை ஆட்டத்தில் யானை மீனையும், குதிரை மீனையும் (அம்மானை ஆட்டத்தில் காய்கள்) வைத்துப் பெண்கள் ஆடுகின்ற ஆட்டம் போல் இருந்தது. அதாவது, யானையையும் குதிரையையும் இவ்விரத்தக் கடலலை அம்மனை ஆடுகின்றது எனப் பின்வரும் வரிகளில் குருபரர் கூறுகிறார்.

"ஆனைத் திரளொடு குதிரைத் திரளையும்
அப் பெயர் மீனைமுகந்
தம்மனை யாடு கடற்றிரை போல...
அடற்றிசை மோதவெழும்
தானைக் கடலொடு......"

மேலது: 7

பிராட்டியார் பூவுலகில் நான்கு திசைகளிலும் சென்று, மன்னர் பலரை வென்றதை அடுத்து, தேவலோகத்தை நோக்கிப் படை எடுத்தார்.

தேவர்களோடு நடந்த இப்போரில், இறந்த மனித வீரர் எய்திய சிறப்பையும், இறந்த தேவவீரர் எய்திய இழிவையும் குருபரர் தகுந்த காரணத்தோடு விளக்கிக் கூறும் நயம் போற்றத் தக்கதாகும்.

போரில் இருதரப்பிலும் சில வீரர்கள் இறப்பது இயல்புதான். அப்படித்தான், பிராட்டியாரின் சேனா வீரர்கள் - மனித வீரர்கள் - கொல்லப்பட்டனர்; வீர சொர்க்கம் அடைந்தனர். அவர்கள் அங்குள்ள தெய்வ

மகளிரின் கண்களும் தனமும் ஆகிய பொருபடைகளால் தாக்குற்று, அம் மகளிரோடு களிப்புற்றனர்.

இதனை,

"மண்ணவர் பண்ணவர் வாளின் மறித்தவர்
மற்றவர் பொற்றொடியார்
பானற் கணையும் முலைக்கு வடும்பொரு
படையிற் பட........"

மேலது, சப்பாளி: 6

என்னும் அடிகளில் கூறுகிறார்.

திக்குப் பாலகர்களின் சேனாவீரர்கள் சிலர் போரில் மாண்டனர். மாண்ட அவ்வீரர்களின் மூளையையும் குடரையும் பேய்கள் உண்டன. உண்ட அப்பேய்கள் தமக்கு இதுவரை கிடைக்காத புதிய உணவு தற்போது கிடைத்தது எனக் களித்துக் கை கோத்துக் குரவைக் கூத்தாடின. இது போர்க்களத்தில் திக்குப் பாலகர் களுடைய இறந்த சேனாவீரர்கள் எய்திய இழிவைக் காட்டுகிறது. புதிய உணவு என்று கூறப்பட்டது எக்காரணத்தால் என்றால், முன்பு நடந்த போர்களில் எல்லாம், பேய்களுக்கு மனித மூளையும் குடருமே உண்ணக் கிடைத்தன. அம்மனிதர் குடர் மூளையைத் தவிர்த்து வேறொருவர் குடரும் மூளையும் அப் பேய்களுக்கு உணவாகக் கிடைக்கவில்லை. ஆனால், இப்போரில் பெற்ற தேவர்களது மூளையும் குடரும் அவற்றிற்குப் புதிய உணவாக அமைந்தன.

இவற்றைப் பின்வரும் பாடல் அடிகளில் குருபரர் எடுத்துக் கூறுகிறார்.

"................ இமையோர்
பைங்குடர் மூளையொ டும்புதி துண்டு
பசுந்தடி சுவைகாணாச்
சேனப் பந்தரின் அலகைத் திரள்பல
குரவை பிணைத்தாட...."

மேலது, சப்பாணி: 6

பிராட்டியார் செய்த தேவலோகப் போரில் நிகழ்ந்த மற்றொரு அரிய செய்தியையும் குமரகுருபரர் வேறொரு பாடலில் கூறுகிறார்.

பிராட்டியார் தேவர்களோடு போர் புரிந்தபோது, பகைப் படைகளும் தம்முள்ளே கருத்து வேறுபட்டு மாறினார்கள். அதாவது, பிராட்டியாரை முன்பு பூவுலகில் எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற சேரரும் சோழரும் பிராட்டியாரோடு நட்பு கொண்டு தேவர்களை எதிர்த்தனர்.

மேலும், அப்போரின் போது இயமனது எருமையும், இந்திரனது வெள்ளை யானையும் பிராட்டியாரின் அம்புக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல், கடலில் சென்று ஒளிந்து கொண்டன. வருணனது சுறாவோ (மீன்வாகனம்) சூரியனது தேரில் பாய்ந்து ஒளிந்து கொண்டது. பிராட்டியின் அம்பு இப்படிப் பகைவரைத் தண்டித்த செயல் அறம் ஆதலின், அவரது ஆட்சி செங்கோல் ஆட்சியுமாகும்.

இந்தப் பாடலில் இன்னொரு செய்தியையும் கூறுகிறார். ஒரு மன்னன் தன் ஆட்சிக் காலத்தில், எட்டுத் திக்குகளிலும் சென்று போரிட்டு வெற்றி பெற்றால், தன் ஆட்சிக்குள் அடங்கும் நிலத்திற்கு எல்லைக் கல் நிறுத்துவது மரபு. அதுபோல, பிராட்டியானவர் தாம் பெற்ற வெற்றியால் இமயமலையோடுவளர்கின்ற எட்டு மலைகளையும் தம் ஆட்சிக்குள் அடங்கும் நிலத்திற்கு எல்லைக் கல்லாக நிறுத்திக் கொண்டார்.

இதைக் குமரகுருபரர் 'வடகடல் துறையில் குமரித்துறை போல ஆடும் பிடி' என்று கூறினார். எனவே, பிராட்டியானவர் உலக முழுவதையும் தமக்கு அடிமைப்படுத்திக் கொண்டு செங்கோல் ஆட்சி புரிந்தார் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலே கூறப்பட்ட மூன்று செய்திகளையும் கீழ்க் காணும் பாடலில் எடுத்தோதுகிறார்.

"சமரிற் பிறகிடும் உதியரும் அபயரும்
எதிரிட் டமராடத்
தண்ட தரன்செல் கரும்பக டிந்திரன்
வெண்பக டோடுடையாத்
திமிரக் கடல்புக வருணன் விடுஞ்சுற
வருணன் விடுங்கடவுள்
தேரின் உகண்டெழ வார்வில் வழங்கு
கொடுங்கோல் செங்கோலா
இமயத் தொடும்வளர் குலவெற் பெட்டையும்
எல்லைக் கல்லினிறீஇ

எண்திசை யுந்தனி கொண்டு புரந்து
வடாது கடற்றுறைதென்
குமரித் துறையென ஆடு மடப்பிடி
கொட்டுக சப்பாணி
குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி.''

மேலது; சப்பாணி: 7

உலகு முழுதும் உள்ள மன்னர்களையும் வென்று, தேவலோகத்துத் தேவர்களையும் வென்று, வெற்றிக்கொடி நாட்டிய பிராட்டியார், கயிலை மீதும் போர்த்தொடுக்கப் புறப்பட்டார்.

கயிலையை அடைந்து, எம்பெருமான் சிவன் வாழும் கயிலாயத்தின் மதிலை வளைத்துக் கொண்டார். அங்குள்ள காவலர்கள் ஓடிச் சென்று, நந்திதேவனை அணுகி அவரை வணங்கிச் செய்தியைத் தெரிவித்தனர். நந்தியெம் பெருமான் பூதக் கணங்களோடு புறப்பட்டு வந்தார்.

வந்தவர் பிராட்டியை நோக்கி, ''சிறு பெண்ணாகிய நீயோ சிவபெருமான் வாழும் கயிலை மலையின் மதிலை வளைத்துக் கொண்டு போருக்கழைப்பது?'' எனக் கூறி எதிர்த்துப் போரிட்டார். போரிட்டுத் தோற்றுப் புறமுதுகிட்டும் ஓடினார். இதனை,

"தகரக் கரியகு ழற்சிறு பெண்பிளை
நீயோ தூயோன் வாழ்
சயிலத் தெயிலை வளைப்பவ னென்றெதிர்
சீறா வீறோதா
நிகரிட் டமர்செய்க ணத்தவர் நந்திபி
ரானோ டேயோடா."

- மேலது, தாலப்பருவம்: 10

அப்படி அவர்கள் புறமுதுகிட்டு ஓடியபோது, அவர்கள் பிடித்திருந்து இடபக் கொடி பயனற்றதாயிற்று. அந்தப் பயனற்ற இடபக் கொடியைப் போலவும், முன்பு சிவபெருமானுடைய யோகத்தைக் கலைக்கச் சென்ற மன்மதனுடைய மீனக் கொடியைப் போலவும் பிராட்டியாரின் கொடி தோல்வியடையவில்லை. ஏனெனில், அப்போரில் பிராட்டியார் அனைவரையும் வென்றார். அதனால், அவர் உயர்த்திப் பிடித்திருந்த மீனக்கொடி பயனுள்ளதாயிற்று என்கிறார் குருபரர். அடிகள் பின்வருமாறு:

"நிலைகெட் டுலையவு டற்றவி டைந்தொ
ரானே றாகாமே........
சிவனைப் பொருதச மர்த்தனு கந்துள
சேல்போன் மாயாமே
மகரத் துவசமு யர்த்தபொ லன்கொடி..."

- மேலது, தால் : 10

இந்த நாடு இன்னார் ஆட்சியின் கீழுள்ளது என்பது அவர் உயர்த்திப் பிடிக்கும் கொடியே புலப்படுத்தும். அந்த வகையில், தடாதகை பிராட்டியார் தாம் போரிட்ட

போரிலெல்லாம் வெற்றி கொண்டு உயர்த்திப் பிடித்த மீனக் கொடியின் பெருமையை எடுத்துக் கூறியதோடு, அவரது ஆட்சி எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதையும் குமரகுருபரர் புலப்படுத்துகிறார் அல்லவா!

மற்றொரு பாடலில், குமரகுருபரர் பிராட்டியார் சிவபெருமானை வசியப்படுத்திய நிகழ்ச்சியைத் தன் கையிலுள்ள வில்லால் போரிடும் போது, புருவ வில்லால் சிவனை வெற்றி கொண்டார் என்று கூறுகிறார்.

அது எப்படி? என்பதை இனிப் பார்ப்போம்.

பூதகணங்கள் தோற்று ஓடிவந்த பிறகு, சிவபெருமானின் படைகளாகிய கூளிகள், காளிகள், சிங்கம் போல் போர் செய்யும் பைரவக் கடவுள் ஆகியோர் நந்தியோடு அணிவகுத்து வந்தனர். இவரனைவரும் சிதறியோடும்படி பிராட்டியாரின் வாளிகள் நாசம் செய்தன. அப்போது நந்தியெம் பெருமான் போருக்கு வரும்போது இருந்த முகமலர்ச்சி, பின்முதுகு காட்டி ஓடும்போது இருந்த முகச் சோர்வு என வேறுபாட்டினைக் கண்டு பிராட்டியார் குறுநகை புரிந்தார் எனக் குமரகுருபரர் பின்வரும் அடிகளில் எடுத்துக் காட்டுகிறார்.

“......... நந்திபிரான்
நின்றிலன் ஓடலும் முன்னழ கும்மவன்
பின்னழ குங்காணா
நிலவுவி ரிந்திடு குறுநகை கொண்டு”

- மேலது, சப்பாணி : 8

நந்தியெம் பெருமானே தோற்று வந்தபிறகு, சிவபிரானே நேரில் போருக்கு வந்து விட்டார். அப்போது, பிராட்டியார் தாம் முன்பு எம்பெருமானோடு கயிலையில் விளையாடிக் கொண்டிருந்ததையும் மறந்து, தம் கைவில்லோடு, இரு புருவ வில்லையும் கொண்ட, மேரு மலையாகிய வில்லை ஆள்பவரை வென்றார்,

என்பதை,

"முன்றிலி னாடன் மறந்தம ராடியொர்
மூரிச் சிலைகுனியா
முரிபுரு வச்சிலை கடைகுனி யச்சில
முளரிக் கணை தொட்டுக்
குன்றவி லாளியை வென்ற தடாதகை."

மேலது, சப்பாணி: 8

என்ற அடிகள் வழி விளக்குகிறார்.

இதன் மூலம் பிராட்டியார் கயிலங்கிரியை அடைந்து சிவபெருமானை வயப்படுத்திய செய்தி அறியப்படு கிறது.

மேற்கூறிய பாடலில் பிராட்டியார் சிவபெருமானைத் தம் விற்புருவத்தால் வயப்படுத்திய அதே வேளையில் தான், மற்றோர் நிகழ்ச்சியும் நிறைவேறியது.

அந்நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை; சிவபெருமானைக் கண்டளவில் பிராட்டியாரின் மூன்று தனங்களுள் ஒன்று மறைந்து விட்டதாகும். அதைப் பின்வரும் பாடல் அடிகளில் தெரிவிக்கிறார். குமரகுருபரர்.

"பொன்மேரு வில்லியை யெதிர்ப்பட்ட
ஞான்றம்மை
பொம்மன்முலை மூன்றிலொன்று
கைவந்த கொழுநரொடு முள்ளப் புணர்ச்சிக்
கருத்தா னகத்தொடுங்க."

மேலது, சப்பாணி: 2

இந்த அடிகளுக்கு டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரையில், "சிவபெருமானைக் கண்ட மாத்திரத்தில் தடாதகைப் பிராட்டியாருடைய மூன்று நகில்களில் ஒன்று மறைந்ததற்குத் தற்குறிப்பேற்ற அணி அமைய வேறொரு காரணம் கற்பித்தார். உள்ளப் புணர்ச்சி - காதலர் இருவருடைய மனமும் ஒத்தல். உள்ளத்துள்ளே நிகழும் புணர்ச்சிக்கண் பயன்பட ஒரு நகில் உள்ளே சென்றதென்றார்" என்று குறிப்பிடுகிறார்.

சிவனைப் பார்த்த மாத்திரத்தில் தடாதகைப் பிராட்டியாரின் மூன்று நகில்களுள் ஒன்று மறைந்தது இயற்கையாக நிகழ்ந்தது. ஆனால், இவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம் காதலர் இருவரின் உள்ளப் புணர்ச்சிக்கு உதவுவதற்காகத் தான் என்று தம் உள்ளக் குறிப்பினைக் குமரகுருபரர் ஏற்றிக் கற்பனையாகக் கூறுகிறார் எனலாம் அல்லவா? இது, அகப்பொருள் அமைந்த ஒரு கற்பனையாகும்.

ஒருதனம் மறைந்ததாலும், சிவபெருமானின் பார்வையாலும் பிராட்டியாரின் உள்ளத்தில் நாணம், மடம், அச்சம் வந்தெய்த முன்னை அன்பு குடிகொண்டது.

தலை குனிந்து வெட்கத்துடன் உயிரோவியமாய் நின்றருளினார். இதனை,

"மெய்வந்த நாணினொடு நுதல்வந் தெழுங்குறு
வெயர்ப்பினொ டுயிர்ப்பு வீங்கும்
விம்மிதமு மாய்நின்ற உயிரோவியம்..."
என்றும் அப்பாடல் வரிகளில் தெரிவிக்கிறார்.

மேலது, சப்பாணி: 2

இதுவரை பிராட்டியாரும் சிவபெருமானும் போரில் நேருக்கு நேர் சந்தித்தபோது, பிராட்டியாரது காதல் உணர்வின் வெளிப்பாட்டைத் தெரிவித்த குமரகுருபரர், வேறொரு பாடலில் அந்தச் சந்திப்பின் போது, பிராட்டியின் பால் சிவபெருமான் காதல் கொண்டதையும் அப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் தெளிவாக்குகிறார்.

அப்பாடலில், போர்க்கோலம் பூண்டு நின்ற பிராட்டியாரின் தேர்க்கோலமும் திருக்கோலமும் எதிரில் தோன்றிய சிவபெருமானுக்கு முதலில் கோபந்தான் எழுந்தது. அடுத்தகணமே, அக்கோபம் நீங்குமாறு காமக்கனல் எழுந்தது; காமக்கனல் கோபக் கனலை அணைத்தது ஒருபுறம்; மற்றொருபுறம் அக்காமத்தீ, சிவபெருமானது உள்ளத்தையும் அவர் கைக் கொள் வில்லான மேரு மலையையும் உருக்கி விட்டது என நயம் படக் குமர குருபரர் கூறுகிறார். அச் செய்யுள் அடிகள் இதோ,

"தேர்க்கோல மொடுநின் றிருக்கோல முங்கண்டு
சிந்தனை புழுங்கு கோபத்
தீயவிய முண்டெழுங்காமா னலங்கனற்..."

....

"தார்க்கோல வேணியர்த முள்ளமென வேபொற்
றடஞ்சிலையு முருகியோட..."

மேலது, பொன்னூசல்: 6

என்னும் அவ்வடிகளாகும்.

ஏற்கெனவே, காதலால் உந்தப்பட்டு நாணமுற்ற பிராட்டியார், தலைகுனிந்து சிவபிரானின் முன் நின்று விட்டார் அல்லவா? தற்போது, சிவபிரானும் காமவயப் பட்டுச் செயலற்று விட்டார்.

விளைவு? பிராட்டியாரின் போர்க்கோலமே மணக் கோலமாக மாறியது.

எப்படியெனின், சிவபிரானைக் கண்டதும் பிராட்டி யாரின் மூன்றாம் தனம் மறைந்த அப்போதே, அவர்தாம் தம் கணவர் என்பதை உணர்ந்தார். அதே வேளை சிவபிரானும், பிராட்டியை நோக்கி அவரை மதுரைக்குப் போகும்படி கூறினார். பின், அடுத்து வந்த சோம வாரத்தில் நல்ல முகூர்த்த வேளையில் மதுரை வந்து பிராட்டியைத் திருமணம் புரிந்து கொண்டார்.

இவ்வாறு தடாதகைப் பிராட்டியாராகிய அங்கயற் கண்ணி அம்மையார் தம் ஆட்சியின் எல்லையை நிறுவ நாற்றிசையும் சென்று வெற்றி கொண்டார்.

இறுதியாகக் கயிலைக்கே சென்று சிவபிரானையும் வெற்றி கொண்டார்.

அங்கயற்கண்ணியின் அரசாட்சியே அரசாட்சிதான்!

தடாதகைப் பிராட்டியாரின் செயல்கள் அனைத்தும் இன்றும் மதுரைச் சித்திரைத் திருவிழாவில் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. முதலில் மீனாட்சிக்குப் பட்டாபி ஷேகம் நடைபெறும்; அடுத்த நாளில் மீனாட்சியின் திக்கு விசயம் நடக்கும். அதன் மறுநாள் மீனாட்சிக்கும் சிவபெருமானாகிய சுந்தரேசுவரருக்கும் மிக விமரிசையாகத் திருக்கலியாணம் நடைபெறும். மதுரை நகரமும் சுற்று வட்டார மக்களும் மீனாட்சியம்மன் கோயிலுக்குள் திரண்டு மீனாட்சியின் திருக்கல்யாணத் தைக் கண்டு மகிழ்வர். பெண்கள் அங்கு வரும் கன்னியருக்கும் சுமங்கிலிகளுக்கும் மஞ்சளும் மஞ்சள் கயிறும் குங்குமமும் கொடுத்துத் தம் அன்பைப் பரிமாறிக் கொள்வர். அதற்கு மறுநாள் நான்கு மாசி வீதிகளில் மீனாட்சியும் சுந்தரேசுவரரும் ஊர்கோலமாகத் தேரில் பவனி வருவர்.

இவ்வாறாகக் குமரகுருபரர், அங்கயற்கண்ணியின் ஆட்சியில் நிகழ்ந்த போர்களில் சிலவற்றை நம்முன் படம் பிடித்துக் காட்டுகிறார். இதில் போர் செய்யப் புகுவாரும், போர் செய்வாரும், போரில் வென்றாரும் செய்யும் செயல்களையும், போர்க்களத்தே நிகழும் நிகழ்ச்சி களையும் தம் கவியாற்றலால் கூறிய பாங்கு, படித்து இன்புறத் தக்கதாகும்.

துணை நின்ற நூல்கள்

1. சாமிநாத ஐயர், டாக்டர் உ.வே., ஸ்ரீகுமர குருபரர் பிரபந்தத் திரட்டு, மூலமும் ஆராய்ச்சிக் குறிப்புரையும், 1961, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு.

2. மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், மூலம் குறிப்புரையுடன், 1954, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு, சென்னை-1

3. குமரகுருபரர், முந்நூறாவது ஆண்டு விழா மலர், 1988 - 1989, ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கலைக் கல்லூரி வெளியீடு, ஸ்ரீவைகுண்டம்.

விடையேறி நடத்திய வேடுபறி நாடகம்

மற்று நீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்.

(பெரிய புராணம்: 216)

ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் இருப்பவன் யார்? ஈசனல்லவா! இதனைச் சுந்தரர், தாம் பாடிய திருவாரூர் பதிகத்தில் 10ஆவது பாடலில் குறிப்பிடுகிறார்.

'சுந்தரரின் சுந்தரத் தமிழுக்கு ஆசைப்பட்ட இறைவன், சுந்தரர் பயணம் செய்யும் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு முறையைக் கையாண்டு, சுந்தரப் பாடல் களைப் பெறுகிறார்.

அம்முறைகளுள் ஒன்றுதான் பின்வரும் நிகழ்ச்சி ஆகும்.

கொங்கு நாட்டில் திருமுருகன் பூண்டி என்றதொரு தலம் உள்ளது. இத்தலம், இன்றைய கோவை மாவட்டத்தில் கோவை திருப்பூர் நெடுஞ்சாலையில் அவிநாசியிலிருந்து 5 கி.மீ. தொலைவிலும், திருப்பூரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இது தற்போது சிற்றூராக உள்ளது. ஆனால், சுந்தரர் வாழ்ந்த காலத்திலோ ஒரு மாநகரமாகவே இருந்துள்ளது. சுந்தரர் பாடிய திருமுருகன் பூண்டித் தேவாரப் பதிகத்திலுள்ள பாடல்களில் எல்லாம், ''முருகன் பூண்டி மாநகர்'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளமை, இதை உறுதிப்படுத்தும்.

இந்தத் திருமுருகன் பூண்டியில் தான், சுந்தரரின் பொருளைக் கவர்ந்து, அவரைப் பாட வைத்து மகிழ்ந்தார் இறைவன்.

அந்த வரலாறு பின்வருமாறு:

சுந்தரர் வாழ்ந்த காலத்தில், சேரநாட்டைச் சேரமான் பெருமாள் என்றோர் அரசர் ஆண்டு வந்தார். இவர் ஈசனிடம் அளவிலாப் பக்தி பூண்டவர். ஈசன் அருளாலே சுந்தரரின் நட்பு இவருக்குக் கிட்டியது. ஆரூரின் தோழராக இருந்த சுந்தரர் அது முதல் சேரனின் தோழராகவும் அமைந்துவிட்டார்.

தோழமை வலுப் பெற்றதால், ஒரு சமயம் திருவாரூரிலிருந்து சுந்தரர் புறப்பட்டுச் சென்று, சேரமானோடு சேர நாட்டில் பலநாள் தங்கி இருந்தார். தாம் எங்கிருந்தாலும் திருவாரூர் தியாகராசனை மறவாத நினைவு கொண்டவர்

அந்த நினைவு மேலோங்கவே, ஒருநாள் திடீரென்று சேரமானிடம்

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்னும் திருப்பதிகத்தின் வாயிலாகத் தம் திருவாரூர் பயணத்தை உணர்த்தி விடை பெற முயன்றார்.

அப்போது, சுந்தரர் பெருமானைப் பிரிய மனமில்லாத சேரமான் பெருமாள் நாயனார் கண் கலங்கினார். ஆயினும், ஆரூர் இறைவனைக் காணும் பேரார்வம் காரணமாகச் சுந்தரருக்கு இசைவு தந்தார். அத்துடன், தம் மாளிகையிலுள்ள பெரும் பொருள்களைப் பொதி செய்து, ஆட்களின் மேல் ஏற்று வித்துச் சுந்தரரின் பரிசனங்களுக்கு (சூழ்வோர்) முன்பாகவே கொண்டு செல்லும்படி அனுப்பி வைத்தார்.

சுந்தரரும் மலை நாட்டை நீங்கினார்; காடுகள் பல கடந்தார்; இடையே காட்டாறுகள் பலவும் குறுக்கிட்டன. அவற்றையும் கடந்து கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்றான திருமுருகன் பூண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

இப்போது, எம்பெருமான் ஒரு திருவிளையாடல் நிகழ்த்த எண்ணினார்.

"சுந்தரர் எது வேண்டுமானாலும் தம்பிரான் தோழனாகிய என்னிடம்தானே கேட்பார். மேனியில் பூணுவதற்கு மணி ஆபரணங்கள் வேண்டுமென்றாலும், தடவிக் கொள்ளக் கத்தூரி கமழ் சாந்தும் (சுந்தரரின்

நாகைப் பதிகம் கூறும்) வேண்டுமென்றாலும் என்னிடம் தானே கேட்பார். தற்போது புதுத் தோழன் ஒருவன் கொடுப்பதும், அதைச் சுந்தரர் பெற்றுச் செல்வதும்சரியா? அதை நாம் பொறுத்துக் கொள்ள முடியுமா? அதைப் பறித்து நாமே சுந்தரரிடம் கொடுக்கலாமே!'' என்ற எண்ணினாரோ என்னவோ, தம் பூதகணங்களை வேடர்களாக மாறி அப்பொருள்களைக் கவர்ந்து செல்லும்படி கட்டளையிட்டார்.

பூதகணங்களும் அவ்வாறே செய்தன.

பொருள்களைப் பறிகொடுத்த சுமை ஆட்கள், சுந்தரரிடம் வந்து சேர்ந்தனர். இதைப் பார்த்த சுந்தரருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. உடனே அதிவேகமாகத் திருமுருகன் பூண்டியை அடைந்தார்.

இறைவனைத் தொழுது, ''எம்பெருமானே! இந்தக் காட்டில் எதற்காக நீர் எழுந்தருளி இருக்கின்றீர்! இந்த வழியே போகும் மனிதர்களிடம் வேடர்கள் கொள்ளை யிடுகிறார்கள். இந்த எல்லையில் அதைத் தடுத்து, அப்பாவிகளைக் காப்பதற்கில்லாமல் நீர் எதற்காக இங்கே இருக்கின்றீர்!'' என்னும் கருத்தை எடுத்துச் சொல்லும் ''கொடுகு வெஞ்சிலை வடுக வேடவர்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி உரிமையோடு திட்டித் தீர்த்து விடுகிறார்.

சுந்தரரின் இந்தத் தமிழ்ப் பாட்டிற்குத் தான் இறைவன் ஏங்கி இருந்தார் போலும். அது நிறைவேறிய நிலையில்,

எம்பெருமான் மனமிரங்கி வேடர்கள் பறித்துச் சென்ற பொருள்களை எல்லாம், அன்றிரவே அவர்களாகவே கோயிலில் கொண்டு வந்து குவித்துவிடச் செய்தார்.

இனித் திருமுருகன் பூண்டிக் கோயில் அமைப்பைக் காண்போம்.

இக்கோயில் கோவை மாவட்டத்தில் கோவை - திருப்பூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. அவிநாசியி லிருந்து 5 கி.மீ. தொலைவிலும், திருப்பூரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

கோயில் மேற்குத் திசை நோக்கியுள்ளது. சிவன் கோயில்கள் மேற்குத் திசை நோக்கி இருப்பது, மிகவும் சிறப்பானது என்பர் ஆன்றோர். கோயில் ஊரை விடப் பள்ளத்தில் அமைந்துள்ளது. கோயிலினுள் நுழையப் பள்ளத்தில் இறங்கித் தான் செல்ல வேண்டும்.

உள்ளே நுழைந்ததும் இருபுறமும் சுந்தரர் சிலைகளைக் காணலாம். ஒருபுறம் பொருளை இழந்த சுந்தரரின் முகத் தோற்றமும், மறுபுறம் மீண்டும் பொருளைப் பெற்ற முகத் தோற்றமும் உள்ள நிலைகளில் காணப் பெறுவது நம் சிந்தையையும் செயலையும் கவரத்தக்கனவாகும்.

சுந்தரர் சிலைகளைக் கடந்து சென்றால், கருவறையில் எழுந்தருளியுள மூலவரைக் காணலாம்.

சூரனைத் தண்டித்த முருகன், இந்த மூலவரை நிறுவி வழிபட்டதால், மூலவர் திருமூலநாதர் என்னும் பெயர்

பெற்றார்; ஊரும் திருமுருகன் பூண்டி எனும் பெயர் பெற்றது.

சந்நிதிக்கு வலப்புறத்தில் ஆறுமுகப் பெருமான் தனிக்கோயில் கொண்டிருக்கிறார். மயில் மீது அமர்ந்துள்ள இப் பெருமானின் அழகிய தோற்றம் நம் கண்களுக்கு நிறைவைத் தருகின்றன. இருபுறமும் அன்னமும் மயிலுமாய் வள்ளி தெய்வானை சமேதராய் உள்ள அறுமுகனைக் கண்டதும் கன்னத்தில் போட்டுக் கொள்ள நம் கைகள் தாமாகவே செயல்படுகின்றன. அதேவேளை அர்ச்சகர் ஆண்டவனுக்குத் தீபவொளி காட்டும்போது, பின்னால் உள்ள மூன்று முகங்களும் தெரியும்போது அயன் நமக்குப் படைத்த கண்களின் பயனை எண்ணி நாம் பூரிப்படைகிறோம்.

இந்த ஆறுமுகனை, அருணகிரிநாதர் தம்முடைய திருப்புகழில் ஒரே ஒரு பாடலில் பாடியுள்ளார்.

அவசியம் உன் வேண்டிய பலகாலும்
அறிவின்உணர்ந் தாண்டுக் கொருநாளில்;
தவசெபமும் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும் பூண்டற் கருள்வாயே;
சவதமொடும் தாண்டித் தகர் ஊர்வாய்
சடுசமயங் காண்டற் கரியோனே;
சிவகுமரன் பீண்டிற் பெயரானே
திருமுருகன் பூண்டிப் பெருமாளே.

இக்கோயிலின் வெளிப் பிரகாரத்தில் ஆடல் வல்லான் இருந்த சபை உள்ளது. இறைவன் இங்கே பிரமதாண்டவம்

ஆடியதாக வரலாறு கூறுகிறது. இச்சபையில் தற்போது ஆடல் வல்லான் (நடராசர்) சிலை இல்லை. அது பாதுகாப்புக் கருதி அவிநாசிக் கோயிலில் உள்ளது. திருவிழாவின் போது மட்டும் அவர் இங்கே எழுந்தருளுவார்.

ஆலயத்தின் ஈசான மூலையில் பைரவர் உள்ளார். அருகில் மிக அண்மைக் காலத்து நவக்கிரகங்களும் உள்ளன.

அதை ஒட்டியே மூலையில் ஒரு குழி உள்ளது. இதில்தான் இறைவன் சுந்தரரிடமிருந்து கவர்ந்த பொருள்களை வைத்திருந்தார் என்று கூறுகிறார்கள்.

ஆலயத்தின் அம்பிகைக்கு முயங்கு பூண் முலை வல்லி என்று பெயர். தேவாரத்தில் இவர் பெயர் நுண்ணிடை மங்கை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோயில் கல்வெட்டுகளும் இதே பெயரைக் குறிப்பிடுகின்றன. அம்பிகை அழகு ஓவியமாக நின்று, அன்பர்களுக்கு அருள் வழங்கும் அன்னையாகக் காட்சி அளிக்கிறாள்.

அறுபத்து மூவரும் வெளிப் பிரகாரத்தில் சிலை வடிவில் நின்று இறைவனை வணங்கிய வண்ணம் உள்ளனர்.

கோவிலுக்கு வெளியில் ஒரு வேப்ப மரத்தின் அடியில் வேல் முருகன் என்னும் பெயரில் தனியாக முருகன் உள்ளார். அருகில் ஒரு சதுரக்கல் நடப்பட்டுள்ளது. முருகன், இறைவனை வழிபட்டவுடன் விலகிய பிரம கத்தியின் வடிவம் என்பது அர்ச்சகர்கள் கூற்றாகும்.

மற்றும், கோவிலுக்கு உள்ளேயும் வெளியேயும் தீர்த்தங்கள் பல உள்ளன. அவற்றில் நீராடி மனத்தெளிவு பெறச் சிலர் இங்கே தங்கி நீராடி வருகின்றனர். அவ்விதம் நீராடி மனத்தெளிவு பெற்றவர்கள் தம் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படுவதாகக் கூறுகிறார்களாம். கோயிலில் உள்ள குறிப்பேடு இதைக் கூறுகின்றது.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகும். அவற்றைக் கல்வெட்டுக் கருவூலங்கள் எனலாம். அவற்றிலிருந்து அரிய செய்திகள் பல தெரிய வருகின்றன.

அந்தச் செய்திகளுள் மிகச் சிறப்பான ஒன்றிரண்டினை மட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

கோவைக்குப் பக்கத்திலுள்ள மருதமலை ஆண்டவன் என்னும் முருகன் குடிகொண்ட மலைக்கு அப்பெயர் வந்த காரணத்தை ஒரு குறிப்புத் தெரிவிக்கிறத. அதாவது, மருதமலையான் என்னும் பெயர் உடையான் இவ்வூர்க் கோயிலுக்கு நிபந்தம் அளித்துள்ளதும், மருதமலை இடைக்காலத்தில் புகழ்பெற்று விளங்கியதும் ஆகிய செய்திகள் தெரிய வருகின்றன.

மற்றொரு சிறப்பு.

ஆடல் மகளிராக விளங்கிய பதியிலார் பெண்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு உரிமைகளை ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது. அதாவது, அவ் ஆடல் மகளிர் திருவெம்பாவை பாடும்போது, கருவறைக்குள் சென்று பாடலாம் என அக்குறிப்புத் தெரிவிக்கிறது.

இன்னொரு சிறப்பு:

திருமுருகன் பூண்டி ஆலயத்துக்குத் தானம் வழங்கிய ஒரு நிலத்தின் எல்லையைக் குறிப்பிடும்போது, "பொருள் பறிச்சுக் கொண்ட பாதைக்கு மேற்கு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, பொருள் பறிச்சுக் கொண்ட பாதை என்ற பெயரில் ஒரு பாதை இருந்ததும், அந்தப் பாதையில் தான் சுந்தரர் வேடுபறி நடந்ததும் சரித்திர நிகழ்ச்சிகள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு, கல்வெட்டுகள் பற்றிய செய்திகளைத் திருமுருகன் பூண்டித் தல வரலாறு எடுத்துரைக்கிறது.

சுந்தரத் தமிழுக்கு ஏங்கித் தனக்குத் தோழரான சுந்தரரிடம் வேடுபறி செய்து, சுந்தரமான பாடலைப் பெற்றிருந்தும், தலத்திற்குத் தந்தை முதன்மையாகாமல் தனையனே முதன்மையாகிறான். இதைத் திருமுருகன் பூண்டி என்னும் தலப்பெயர் வலியுறுத்துகிறதல்லவா!

துணை நின்ற நூல்

1. பெரிய புராணம், தொகுதி 1, புலவர் மாணிக்கம், அ., மூலமும் தெளிவுரையும் 2002 வர்த்தமான பதிப்பகம், சென்னை-17
2. வைத்தியநாதன் ஆசிரியர், பன்னிரு திருமுறை வரலாறு, 1992, திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடை மருதூர்.
3. திருமுருகன் பூண்டித் தலவரலாறு, 1998, திருக் கோயில் வெளியீடு, திருமுருகன் பூண்டி, அவிநாசி வட்டம், கோவை மாவட்டம்.

தாடங்கம் வீசித் தண்ணளி பொழிந்த அபிராமி

தனம்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்(வு) அறியா
மனம்தரும் தெய்வ வடிவும்
தரும்நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி
ராமி கடைக்கண்களே.

(அபிராமி அந்தாதி: 69)

சோழ வளநாட்டில், மாவட்டத்தில், மயிலாடுதுறைக்கு அருகில் திருக்கடவூர் என்னும் ஓர் ஊருள்ளது; தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலம். இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் அமிர்தகடேசுவரர்; இறைவி பெயர் அபிராமி வல்லி.

இத்தலத்தில் இறைவன் மார்க்கண்டேயரைக் காப்பாற்றத் தம் இடக்காலால் உதைத்து வீரச் செயல்புரிந்து அருளினார். எனவே, இது வீரட்டானம் எனப் பெயர் பெற்றது; அட்ட வீரட்டானத்துள் ஒன்றானது.

சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்பு, அவ்வூரின் கண் ஓர் அந்தணர் குலத்தில் பிறந்தவர் தாம்

அபிராமி பட்டர் என்னும் அருளாளர். இவரது இளமைப் பெயர் சுப்பிரமணிய அய்யர் என்பதாகும்.

இவர் பிறந்த குடும்பம் பரம்பரையாக இசைப்பயிற்சியிலும், தேவி வழிபாட்டிலும் ஈடுபட்டு வந்தது. எனவே, சுப்பிரமணிய அய்யரும் இளமை முதலே, திருக்கடவூரில் கோயில் கொண்டுள்ள அபிராமி வல்லியை மாறாத அன்புடன் வழிபட்டு வந்தார். இவர் கல்வி கேள்வி கலைகளில் சிறந்து விளங்கியதோடு, அவ்வாலயத்தில் பட்டராகத் தினமும் பஞ்சாங்கப் படனம் செய்யும் தொண்டையும் ஏற்றுச் செய்து வந்தார். அதனால், அபிராமி வல்லியின் சந்நிதியிலேயே தம் காலத்தைப் பெரிதும் கழித்து வந்ததாலும், பட்டராகத் தொண்டு செய்து வந்ததாலும் ‘அபிராமி பட்டர்’ எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டார். அவரது இயற்பெயரான சுப்பிரமணிய அய்யர் என்பதும் வழக்கொழிந்தது.

அபிராமி பட்டர் தேவி வழிபாட்டிலும், யோக நெறியிலும் செவ்வனே ஒழுகி வந்தார். அதனால், யோக சித்தி எய்தி அறிவு வெளியில் (சித்தாகாசத்தில்) அம்பிகையை ஒளி வடிவமாகக் கண்டு பேரின்பத்தில் மூழ்கியிருந்தார்; பித்துப் பிடித்தவர் போல் ஆனார். இவரது இறை அனுபவ நிலையை உணராத சிலர், இவர் மீது பொறாமை கொண்டனர். அப்போது, தஞ்சையை ஆண்டு வந்த சரபோஜி மன்னரிடம் அவர்கள் பட்டரைப் பற்றிக் குறை கூறினர்.

அம்மன்னர், ஒரு தை அமாவாசை தினத்தன்று காவிரிப் பூம்பட்டினத்தில் கடலாடித் திரும்புகையில், திருக்கடவூர் கோயிலைத் தரிசிக்க வந்தார்; அபிராமி அம்பிகையின் சந்நிதி அடைந்தார். அப்போது, பட்டர் அபிராமி அன்னையின் அருள் வெள்ளத்தில் மூழ்கி இருந்தார். அதனால், இவ்வுலக நினைவு ஏதுமின்றி அமர்ந்திருந்தார்.

மன்னர், அவரிடம் பேச்சுக் கொடுத்தார். 'இன்று என்ன திதி?' என்று வினவ, பட்டரோ 'பவுர்ணமி' (முழு நிலவு) என்றார். அதைக் கேட்ட மன்னருக்குப் பட்டர் மீது குறை கூறியவர்கள் சொன்னது உண்மை என்றே பட்டது. எனவே, பட்டரிடம் "இன்று மாலைக்குள் வானில் முழு நிலவைக் காட்ட வேண்டும். இல்லாவிடில் உங்கள் உயிர் உங்களிடம் இருக்காது" என்று மன்னர் கூறினார்.

தன்னுணர்வு எய்திய பிறகு, அபிராமி பட்டர் நிகழ்ந்தவற்றை அறிந்தார். மன்னரிடம் தாம் அமாவாசை நாளை முழு நிலவு நாள் என்று மாற்றிக் கூறியது, தம்முள் இருந்த அன்னையே யாகும். அந்த உண்மையை நிலைநாட்ட விரும்பினார்.

அபிராமி அன்னையின் சந்நிதிக்கு எதிரில் குழி ஒன்றில் தீ வளர்த்தார். நூறு கயிறுகளில் தொங்குமாறு ஓர் உறியை அமைத்துத் தொங்கவிட்டார். அந்த உறியில் தாம் அமர்ந்து கொண்டு, "அம்பிகை எனக்குக் காட்சி தந்து, எனக்கு ஏற்பட்ட பழியை மாற்றாவிடின் இந்தத் தீயில் விழுந்து உயிர் விடுவேன்" என்று உறுதி செய்து கொண்டார். "உதிக்கின்ற" என்று தொடங்கி அபிராமி

அந்தாதியைப் பாடலானார். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும், அம்பிகையின் காட்சியைப் பெறாத காரணத்தால், உறியில் ஒவ்வொரு கயிறாக அரிந்து கொண்டு வந்தார். "விழிக்கே அருளுண்டு" என்று தொடங்கும் அந்தாதியின் 79ஆம் பாடல் முடிந்தபோது, மாலைக் காலம் வந்துவிட்டது. அப்போது, அபிராமி அம்பிகை அவருக்குக் காட்சி கொடுத்தருளினார். மேலும், தமது திருத்தோடு (தாடங்கம்) ஒன்றைக் கழற்றி வான மண்டலத்தில் வீசினார். அது வானை அடைந்து முழுநிலவைப் போலச் சுடர்விட்டு ஒளி வீசியது.

"அமாவாசை இரவான இன்று இப்படி முழுநிலவு ஒளி வீசுகிறதே! அற்புதம்! அற்புதம்!!" என்ற அரசரும் பிறரும் அதிசயித்து நின்றார்கள். மன்னர், பட்டரிடம் ஓடோடி வந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவரிடம் பிழை பொறுத்தருளுமாறு வேண்டினார்.

பட்டரோ, "உங்களாலன்றோ எனக்கு அபிராமி அன்னையின் அருள் கிடைத்தது" என்று அடக்கத்துடன் கூறினார். பிறகு, மிகுதியுள்ள 31 பாடல்களைப் பாடி முடித்தார். இறுதியில் ஒரு பயனும் இயற்றினார். அந்தாதியை முடித்து அம்பிகையின் பாதத்தில் வைத்துப் பணிந்தார்.

இவ்வந்தாதி, 'உதிக்கின்ற' என்று தொடங்கி, 'உதிக்கின்றவே' என்று இறுதியில் முடிவு பெறுகிறது. இது நூறு அந்தாதிப் பாடல்களுடன் ஒரு காப்பும் ஒரு பயனும் சேர்த்து நூற்றிரண்டு செய்யுட்களைக்

கொண்டதாகும். செய்யுள்கள் கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளன.

ஆதிசங்கரர் தேவியைத் துதிக்கத் தொடங்கும் போதே, முற்பிறவியில் எவன் ஒருவன் அளவிட முடியாத புண்ணியத்தைச் செய்கிறானோ, அவன் தான் தேவியைத் தோத்திரம் செய்யவோ வணங்கவோ முடியும். அவ்வாறு, புண்ணியம் செய்யாதவர்கள் தேவியைத் துதிக்கவோ வணங்கவோ முடியாது என்று கூறுகிறார்.

அதுபோல, அபிராமி பட்டரும் இப்பிறவியில் தேவியைத் துதிக்கவோ, வணங்கவோ வேண்டுமென்றால் முற்பிறவியில் நிறையப் புண்ணியம் செய்திருக்க வேண்டும் அல்லவா? அதைத்தான் அன்னையிடம் வினாவுகிறார். அதனைக் கீழ்வரும் பாடல் அடிகளில் காணலாம்.

"நண்ணிய(து) உன்னை நயந்தோர்
அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏ(து)என்அம் மே!புவி
ஏழையும் பூத்தவளே!

(மேலது: 12)

"......... அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம் அன்
றோ! முன்செய்த புண்ணியமே."

(மேலது: 40)

அவ்விதப் புண்ணியத்தை அபிராமி பட்டர் முற்பிறவியில் செய்துள்ளார். அதனால்தான், தேவியின் மீது இவ்வந்தாதியைப் பாட அவரால் முடிந்தது.

அப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் சொற்சுவையும், பொருட்சுவையும் செறிந்து காணப்படுகின்றன.

அப்பாடல்களுள், அபிராமி அம்மையின் உருவமற்ற ஒளிநிலையை அகத்தேயும், பல்லுருவத் திருமேனியை புறத்தேயும் கண்டு களித்துள்ளவற்றில் சிலவற்றை இனிக் காண்போம்.

இறைவன் சோதி வடிவானவன் அல்லவா? அவனது இடப்பாகத்தில் என்றும் பிரியாது அமர்ந்திருக்கும் இறைவியும் சோதி வடிவமாகத் தானே இருக்க வேண்டும்? இத்தகைய வடிவை மெய்ஞ்ஞானிகளால் தான் காண முடியும். தேவியின் பூரண அருள்பெற்ற மெய்ஞ்ஞானி அல்லவா பட்டர்? எனவே, தேவியின் ஒளி வடிவைத் தம் அகத்தே கண்டுகளிக்கிறார். தம் வாக்குகளில் அவற்றை எடுத்தும் உரைக்கின்றார்.

அம்பிகையானவள் நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி (ஆகாயம்) என்னும் ஐம்பூதங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டு சோதி வடிவாய்த் திகழ்கின்றாள். இத்துணைப் பெரிய பொருளாகிய அம்பிகை தம் பொருட்டு மனமிரங்கித் தமது சிற்றறிவின் எல்லைக்குட் பட்டுத் தோற்றமளிப்பது தமக்கு வியப்பைத் தருகிறது என்கிறார். இதனை,

"ஒளியே! ஒளிரும் ஒளிக்(கு) இட
மே! எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே! வெளிமுதல் பூதங்கள்
ஆகி விரிந்த அம்மே!" (மேலது: 16)

என்னும் அடிகளில் காணலாம்.

அம்பிகையின் ஒளி வடிவத்தை மேலும் சிறப்பித்துக் கூறும் பட்டர், "மின்னாயிரம் ஒரு மெய் வடிவாகி விளங்குகின்ற அன்னாள்" (மேலது: 55) என வியக்கிறார். அதாவது, ஆயிரம் மின்னல்கள் திரண்டு ஓர் உருவாகித் தம் அகத்தே எழுந்து காட்சி அளித்தாளாம். சாதாரணமாக, ஒரு மின்னலையே சாதாரண மக்களாகிய நாம், நம் ஊனக்கண்ணால் காண முடிவதில்லை. அப்படியிருக்க, ஆயிரம் மின்னல்கள் ஒருங்கு திரண்டு ஓர் உருவாகி வந்தால், எவ்விதம் காண முடியும்? அவ்வாறு காண வேண்டுமெனின், அம்பிகையின் அருள் இருந்தால் தானே முடியும்!

அருவ நிலையில் (உருவமற்ற நிலையில்) அம்பிகையைக் கண்ட அபிராமிபட்டர், பல உருவ நில்லைகளிலும் வைத்து எண்ணுகிறார்.

அம்பிகை உருவத் திருமேனி கொண்டு இலங்கும்போது, கொடி போன்றும், கொம்பு போன்றும், கிளி போன்றும், குயில் போன்றும், மயில் போன்றும், அன்னம் போன்றும் ,உள்ளாள் என்பதைத் கற்பனை நயத்துடன் பட்டர் கூறுகிறார்.

முதலில், கொடியாக எப்படி அம்பிகையைச் சிறப்பித்துக் கூறுகிறார் என்பதைக் காண்போம்.

கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ எனப் பூக்கள் நான்கு வகையாகக் கொள்ளப்படும் எனத் தமிழ் இலக்கிய நூல்கள் கூறுகின்றன. இந்த நான்கு வகையான பூக்களுள்ளும், மிகச்சிறப்பானது எனக் கருதப்படுவது

கொடிப் பூவே ஆகும். பூக்களிலே மிகச்சிறந்து விளங்குவது தாமரைப் பூவாகும். தாமரைப் பூ கொடியில் பூக்கும் பூவாகும். சிவந்த நிறமும், மென்மையான மணமும், மேன்மையான அழகும் உடையதாகும்.

இத்தகைய பண்புடைய தாமரை மலர்களெல்லாம், தம்மினும் அழகில் சிறந்த தேவியினுடைய முகத்தா மரையை வணங்கும் படியான, வெற்றியையுடைய திருமுகத்தைக் கொண்ட அழகிய கொடி போல்பவள் அம்பிகை என்னும் வகையில்,

"அதிசயம் ஆன வடி(வு) உடை
யாள்அர விந்தம்எல்லாம்
துதிசய ஆனன சுந்தர
வல்லி" .... (மேலது: 17)

என்று பாடுகிறார்.

இன்னொரு பாடலில், அம்பிகையானவள் தில்லையம் பலத்தே ஆனந்த நடம்புரியும் அம்பலவாணனைத் தழுவியிருக்கும் அழகிய பூங்கொடி போல உள்ளாள் என்கிறார். அந்தத் தழுவல் சொல்லும் பொருளும் போல் ஒன்றையொன்று தழுவியிருப்பது போல் உள்ளதாம். சொல் அபிராமி அம்மை எனின், பொருள் அம்பலவாணர் ஆவார். இதைச்,

"சொல் வடிவாய் நின்னிடம் பிரியா விமயப்பாவை, தன்னையுஞ் சொற் பொருளான வுன்னையுமே" (திருவிளையாடல் இடைக்காடன், 10) எனும் அடியால்

அறியலாம். அம்பிகையோடு பிரிவின்றி நிற்கும் சிவம். இதைக் குறிப்பிட வந்த பட்டர், தில்லையில் நடராசப் பெருமானுடன் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம் சிவகாமவல்லி என்பதாதலின், அதை நினைந்து கொடி என்றார். இவ்வாறு, திரு. கி.வா. ஜகந்நாத அய்யர் அவர்கள் பொருள் கொள்கிறார். இதைப் பின்வரும் பாடல் அடிகள் சுட்டுகின்றன.

"சொல்லும் பொருளும் என நடம்
ஆடும் துணைவர் உடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யே!" .... (மேலது:28)

மற்றொரு பாடலில்,

அம்பிகையைப் பச்சைக் கொடி என்கிறார். கொடி பச்சை நிறமானது மட்டும் அன்று; இயற்கை மணமும் மிகக் கொண்டதாம். அந்தக் கொடி எங்கே இருக்கிறது தெரியுமா? ஒளி மிகுந்து விளங்கும் பிறையைச் சடாமுடியில் அணிந்த சிவபெருமானாகிய, செம்பவளம் போன்ற குன்றில் (திருமேனியில்) பொருந்திப் படர்ந்துள்ளதாம். இதனை,

"சுடரும் கலைமதி துன்னும்
சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக்
கொடி" .... (மேலது: 48)

என்னும் அடிகளில் குறிப்பிடுகிறார். இதில், சிவபெருமானைக் குன்றம் என்றதற்கேற்ப, அம்பிகையைக் கொடி

என்றார். "பங்காயோர், தமனிய மலைபடர் கொடியென வடிவு தழைந்தாய்" (மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், செங்கீரை: 10) என்று குமருகுருபரர் கூறுவதையும் ஒப்புநோக்குக.

இளைய வஞ்சிப் பூங்கொம்பைப் போன்றவள் அம்பிகை என்று அந்தாதியின் 22ஆவது பாடலில் குறிப்பிடும் அபிராமி பட்டர், அந்தாதியின் 71ஆவது பாடலில், குளிர்ந்த நிலவின் கீற்றைத் திருமுடியில் அணிந்தவளும் என்றும் இளமையும் மென்மையும் அழகும், சாமள (ஒருவகை பச்சை) நிறமும் கொண்டிலங்கும் அபிராமி தேவி என்னும் பூங்கொம்பு என்று வருணிக்கிறார். இதனை,

"........ பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள
யாமளைக் கொம்(பு) இருக்க" ..... (மேலது: 71)

எனப் பாடுகிறார்.

அம்பிகையின் மேனியைக் கொடியாகவும் கொம்பாகவும் வருணித்த அபிராமி பட்டர் மேலும் பல உருவங்களில் வருணித்துச் செல்லுகிறார்.

கயிலையங்கிரித் தலைவன் சிவபெருமான் அவனுக்கு இமவான் தன் மகளாகிய உமாதேவியைத் திருமணம் செய்து கொடுத்தான். அந்த உமாதேவியே அபிராமி தேவியாகக் கடம்ப வனத்தில் (மதுரையில்) குயிலாய் இருப்பாள்; இமயமலையில் பச்சை நிற மயிலாக இருப்பாள்; வானத்தில் (சிதம்பரத்தில்) கடலினின்றும்

வந்துதித்த பொன்னிறமுடைய இளங்கதிரோனாய் இருந்தருளுவார்; தாமரைப் பூவில் (மூலாதாரத் தானமாகிய திருவாரூரில்) வெண்ணிறம் பொருந்திய அன்னமாய் இருந்தருளுவாள் என்றெல்லாம் கூறிச் செல்கிறார் பட்டர். இந்தக் கருத்தை,

"குயிலாய் இருக்கும் கடம்பா
டவியிடைக் கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயா
சலத்(து)இடை வந்(து) உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்
கமலத்தின் மீ(து) அன்னமாம்
கயிலா யருக்(கு) அன்(று) இமவான்
அளித்த கனம் குழையே." (மேலது: 99)

எனும் பாடலில் எடுத்துக் கூறுகிறார்.

அடுத்துப் பண்களுக்கும் இனிமையைக் கொடுக்கும் இனிய சொற்களையும், இயற்கை மணத்தையுமுடைய ஒருவகை பச்சை நிற (யாமளை)க் கிளியாவாள் அபிராமி என்பதை,

"பண்ணளிக் கும்சொல் பரிமள
யாமளைப் பைங்கிளியே" (மேலது: 15)

என்னும் பகுதியில் குறிப்பிடுகிறார்.

இதுவரை, அபிராமி அம்பிகையின் உருவ வடிவைக் கொடியாக, கொம்பாக, குயிலாக, மயிலாக, அன்னமாக,

கிளியாகவெல்லாம் உருவகித்துக் கூறிய பட்டர், அவளின் இயல்புத் திருமேனியை எவ்வாறு வருணிக்கிறார் என்பதை இனிக் காண்போம்.

இறைவன் உருவமில்லாதவன். ஆணவமல இருளில் அழுந்தி, அறிவு விளக்கம் பெறாமல் கிடக்கும் ஆன்மாக்கள் (உயிர்கள்) அறிவு விளக்கம் பெறும் பொருட்டு, இறைவன் தன் எளிவந்த கருணையினால், அவ்வுயிர்களுக்கு இந்த உலகையும் படைத்து, உடலையும் படைத்து, ஐம்புலன்களையும் வழங்கி, அவ்வுயிர்களை இவ்வுலகில் உலவ விடுகிறான். அறிவு விளக்கம் பெற்ற உயிர்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டு வேறு வேறு வடிவங்கள் கொண்டு அருள்புரிகிறான்.

உருவம் இல்லாத் அருவ நிலையில் இறைவன் பரசிவம் எனப்படுகிறான். பரசிவ நிலையிலிருக்கும் அவன் உயிர்கள் பொருட்டு, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்யும் போது பிரமன், விஷ்ணு, உருத்திரன் எனப்படுகிறான். பரசிவமான ஈசன் இத் தொழில்களை எல்லாம் தானே நேரில் வந்து செயல்படுத்துவது இல்லை. தன்னுள் அடங்கி என்றும் பிரியாதிருக்கும் ஆற்றல் சக்தியான பராசக்தியைக் கொண்டே அவற்றை நடத்துகின்றான்.

இவ்வாறு, ஈசன் உயிர்களின் பவ நோயை நீக்க அவ்வுயிர்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்று திருவுளம் கொள்கிறானோ அவ்வாறே பராசக்தியும்

(அவனுள் அடங்கியிருக்கும் ஆற்றலும்) அவனுக்குத் துணையாக நின்று உயிர்களுக்கு அருளை வழங்கப் பல்வேறு சக்தி வடிவங்களை மேற்கொள்கிறாள். இந்த உண்மையைச் சிவஞான சித்தியாரில்,

''எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்.'' (சிவஞான சித்தியார்: 165) என்று அருள்நந்தி சிவம் அருளிச் செய்துள்ளார்.

இந்த அடிப்படையில், அம்பிகை எவ்வாறு பல்வேறு வடிவங்களையும், வண்ணங்களையும் கொண்டு விளங்குகிறாள் என்பதைக் காண்போம்.

அபிராமவல்லி, பச்சை நிறக் கொடியாய் உமாதேவி யாகச் சிவபெருமானின் இடப்பாகத்தில் என்றும் சுமங்கலியாய் (மங்கலை) அமர்ந்துள்ளாள். அவளே பொன்னிறமுடையவளாக (பிங்கலை) திருக் கோலம் பூண்டுள்ளாள். அவளே, துர்க்கையாக வடிவம் கொள்ளும் போது, கரிய நிறமுடைய நீலி எனப்படுகிறாள்; திருமகளாக வடிவம் கொள்ளும் போது, சிவந்த நிறமுடைய செய்யாள் எனப்படுகிறாள்; கலைமகளாக வடிவங் கொள்ளும்போது, வெண்ணிற முடைய வெளியாள் எனப்படுகிறாள்.

இவ்வாறு, படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களை மேற்கொள்ளும் போது, நான்முகன் திருமால் உருத்திரன் முதலிய வடிவங்களை ஈசன் ஏற்கிறான். ஈசனின் அவ்வடிவங்களுக்கு ஏற்ப, அபிராமி என்னும் திருநாமத்திலுள்ள பராசக்தியே கலைமகளாக

வும் (சரசுவதி), அலை மகளாகவும் (இலக்குமி), மலை மகளாகவும் (உமை), தன் ஆற்றலால் வடிவெடுத்து உயிர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

அபிராமி பச்சை நிறமும், பொன்னிறமும், செந்நிறமும், வெண்ணிறமும் கொண்டு விளங்குவதை எடுத்துக் கூறுவதால், வேறு வேறு வடிவங்கள் மட்டுமல்ல; வேறு வேறு நிறங்களையும் உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்பப் பெற்று பராசக்தியே அந்நிலைகளில் அருள்பாலிக் கிறாள் என்பது புலனாகும்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

"மங்கலை செங்கல சம்முலை
யாள்மலை யாள் வருணச்
சங்(கு) அலை செங்கைச் சகல
கலாமயில் தாவுகங்கை
பொங்(கு) அலை தங்கும் புரிசடை
யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி
யாள்பசும் பெண் கொடியே"

(மேலது: 21)

"ஒருநாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி, நாம் - தெள்ளேனம் கொட்டாமோ?

(திருவாசகம், திருத்தெள்ளேனம்: 1)

என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளது போல், அபிராமிபட்டர் அபிராமிக்குப் பல நாமங்களைக் கூறி

மக்கள் துதிப்பர் என்பதைத் தம் இரு பாடல்களில் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

முதல் பாடலைக் காண்போம்.

"நாயகி நான்முகி நாரா
யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதிநச்சு
வாய் அகி மாலினி வாராகி
சூலினி மாதங்கிஎன்(று)
ஆய கியாதி உடையாள்
சரணம் அரண் நமக்கே."

(அபிராமி அந்தாதி: 50)

ஒரு பொருளாக இருக்கும் பராசக்தியே பல பல சக்திகளாக வடிவெடுத்து இந்த உலகெங்கும் நிறைந்து நிற்கின்றாள். அப்படி வேறு வேறு சக்திகளாக நிலை கொள்ளும்போது வேறு வேறு பெயரையும் கொண்டு இலங்குகிறாள்.

அந்தப் பராசக்தியின் வேறு வடிவமே அபிராமிதான். மிக்க அழகான வடிவத்தை மேற்கொண்டதால் அபிராமி என்னும் திருப்பெயரைப் பெற்றாள்.

இவ்வாறே, அபிராமிபட்டர் தம் இரு திருப்பாடல் களிலும் அபிராமியின் பல்வேறு திருப் பெயர்களைக் கூறியுள்ளதை அத் திருப்பெயர்களின் பொருளுணர்ந்து மகிழலாம்.

நாயகி என்னும் பெயர், அனைத்துலகங்களுக்கும் ஒரே தலைவியாக விளங்கும் அன்னை பராசக்தியைக்

குறிக்கும். இந்த அம்பிகையே, பிரமாவிடத்தில் இருந்து படைத்தல் தொழிலை நடத்துவதால், நான்முகி அதாவது நான்கு முகங்களைக் கொண்டவள் என்று கூறுவர். இது போன்றே நாராயணனிடம் இருந்து, காத்தல் தொழிலை நடத்துவதால், நாராயணி என்று கூறுவர். மற்றும் பிரமாவிடம் இருந்து ஆற்றல் புரிவதால் பிராம சக்தி என்றும், விஷ்ணுவிடம் இருந்து ஆற்றல் புரிவதால் வைணவி அதாவது விஷ்ணு சக்தி என்றும் கூறுவர். கையிலே தாமரை, மாம்பூ, அசோக மலர், முல்லை, நீலோற்பலம் ஆகிய ஐந்து மலர்களை அம்புகளாகக் கொள்ளும்போது, கை நளின பஞ்ச சாயகி என்று அழைக்கப்படுகின்றாள். சம்புவின் சக்தியாக இருந்து தொழில் படுவதால், சாம்பவி எனப்படுகிறாள். உயிர்களுக்கு இன்பத்தை உண்டாக்குவதால் சங்கரி என்றும் அறிஞர் பொருள் கொள்வர். ஒருவகைப் பச்சை நிற எழிலைக் கொண்டவள் ஆதலால் சாமளை என்று போற்றப்படுகிறாள். மற்றும், நச்சு பொருந்திய பாம்பை மாலையாக அணிந்தவள் ஆதலால், நச்சுவாயகி என்று சொல்லித் துதிக்கப்படுகிறாள். வாராகி என்று அம்பிகை அழைக்கப்படுவது எதனால் என்றால், விஷ்ணுவின் சக்தியாகிய பன்றியின் ஆற்றலைக் கொண்டமையால் ஆகும். வாராகி என்பதற்கு திரு.கி.வா.ஜகந்நாத அய்யர் அவர்கள் பின்வருமாறு பொருள் விளக்கிக் கூறுகிறார்.

''வாராகி: 77; விஷ்ணு சக்தி வகையில் ஒன்று; அம்பிகையின் அமிச சக்திகளுள் தண்டினி என்னும்

பெயருடையவள். திரிபுரா சித்தாந்தமெனும் நூல், 'பராசக்தி வரகானந்த நாதர் என்பவருக்கு வராகத் திருமுகத்துடன் தரிசனம் தந்தமையின் வாராகி என்னும் பெயர் பெற்றாள்' என்று கூறும். தமிழில் வராகியை 32 செய்யுட்களால் துதிக்கும் மாலை ஒன்று உண்டு."

சூலத்தை உடையவள் ஆதலின் சூலினி எனப்பட்டாள். மாதங்கி என்றது மாதங்க முனிவரின் குமாரியாகத் தோன்றியதாலாகும். யாழ்ப்பாணர்களாகிய மாதங்கர் குலத்துப் பெண்ணாகத் தோன்றியவள் என்பதனாலும் ஆகும். பின்னால், அபிராமி அந்தாதி 70ஆவது பாடலில், "மாதங்கர் குலப் பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே" என்று கூறுவதை ஒப்பு நேர்க்கலாம்.

இச் சக்தி பேதத் தோற்றங்களெல்லாம் உயிர்களுக்கு அருளும் பொருட்டே ஆனமையால், "ஆய கியாதி யுடையாள்" என்றார்.

அம்பிகையின் பல்வேறு நாமங்களைக் குறிக்கும் மற்றொரு பாடலைப் பார்ப்போம்.

"பயிரவி பஞ்சமி பாசாங்
குசை பஞ்ச பாணிவஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி
காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி
சூலி வராகி என்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே."

(மேலது: 77)

இந்தப் பாடலில் சொல்லப்படும் அபிராமி அம்மையின் நாமங்களெல்லாம் குற்றமற்ற நான்கு மறைகளில் காணப்படும் திருப்பெயர்களே ஆகும் என்று அபிராமி பட்டரே கூறுகிறார். இந்தத் திருப் பெயர்களாலேயே மெய்யன்பர்கள் எல்லாரும் அம்பிகையைப் போற்றி வணங்குவர் என்றும் கூறுகிறார்.

அத் திருப்பெயர்களெல்லாம் எவ்வாறு ஒவ்வொன்றும் பொருளோடமைந்து, அம்பிகைக்குப் புகழ் சேர்க்கின்றன என்பது பற்றி இனிக் காண்போம்.

அம்பிகையானவள், தமக்கு அடியார்களாக உள்ளவர்களுக்கு ஊறு செய்வோரை ஒறுத்தல் பொருட்டு மிகுந்த அச்சத்தைத் தருபவள் (பயிரவி) என்பதை எடுத்த எடுப்பிலேயே பட்டர் அறிவித்து, மேலும் தொடர்கிறார்.

உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் உருவத்திரு மேனியாக மூவகை வடிவங்களைக் கொள்கிறான். உயிர்கள் உலக இன்பத்தைப் பருகும் பொருட்டு, மணக்கோலம் கொள்ளுகிறான். அப்போது கொள்ளும் வடிவம் போக வடிவமாகும். இறை இன்பத்தை விரும்பும் உயிர்களுக்கு ஞானத்தை வழங்கும் பொருட்டு, ஆசிரியக் கோல வடிவம் ஏற்கிறான். இறைவனை நினைந்து வழிபடும் அன்பர்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் போக்கப் போர்க்கோல வடிவம் கொள்கிறான். இந்த வடிவங்களுக்கு ஏற்பவே, சக்தியும் வேறு வேறு வடிவங்களை ஏற்று, இறைவனுக்குத் துணை புரிகின்றாள். இந்தப் பின்னணியைக் கொண்டு, வாசகர்கள் தொடர்ந்து

பாடலில் கூறப்பட்டுள்ள திருப்பெயர்களின் பொருளைத் தெரிந்து கொண்டால், சூழலுக்கேற்ப அம்பிகை வேறு வேறு வடிவம் கொள்வதையே அபிராமி பட்டர் பல திருப்பெயர்களைச் சொல்லி இப்பாடலை நிறைவு செய்கிறார் என்பது நன்கு புலனாகும்.

இனிப் பாடல்களில் சொல்லப்படும் அன்னையின் திருப்பெயர்களை அறிஞர்கள் எவ்வாறு பொருள் கண்டுள்ளார்கள் என்பதைச் சிந்திப்போம்.

அடுத்து, பாடலில் பஞ்சமி என்னும் பெயரைக் குறிப்பிடுகிறார். பஞ்சமி என்றால் எங்கும் நிறைந்தவள் என்பர் ஆன்மிக அறிஞர். இதுவே, சதாசிவத்தின் சக்தியாகிய பராசக்தியைக் குறிக்கும் என்றும், ஐந்தாவது சக்தியாகிய அனுக்ரக சக்தியென்றும் கூறுவர். எனவே, உயிர்களுக்கு அநுக்ரகம் செய்யும்போது, அம்பிகை இவ்வடிவத்தை மேற்கொள்கிறாள் என்பதாகிறது அல்லவா?

பாசாங்குசை, பஞ்சபாணி என்றெல்லாம் அடுத்தடுத்து இரு சொற்களைக் குறிப்பிடுகிறார். இவை உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு, அம்பிகையானவள் தம் கைகளில் ஏந்தியுள்ள பாசம் அங்குசம் ஆகிய ஆயுதங்களையும், ஐந்து மலர் அம்புகளையும் குறிக்கும்.

வஞ்சமுடையவர்களது உயிரைப் பலியாகக் கொள்ளும் பொருட்டு, உயர்வான பெருமையுடைய சண்டிகா தேவியாக வடிவெடுக்கிறாள் என்பதை உயர் சண்டி என்னும் பெயரிட்டுச் சொல்கிறார். இங்கு,

அம்பிகை மகிடாசுரனைக் கொன்றதை நினைவு கொள்ளலாம். மகிடாசுரனைக் கொல்வதற்காக, மும்மூர்த்திகளும் தம் சக்திகளை எல்லாம் ஒன்று கூட்டிச் சண்டிகாதேவி என்னும் சக்தியைப் படைத்து, அவள் மூலம் மகிடாசுரனை அழித்தனர். இச் செய்கை ஈசனின் செயலுக்கேற்பச் சக்தியானவள் துணைபுரிகின்றாள் என்பதை வலியுறுத்தும்.

காளி என்றதும் நம் கண்முன் கோர வடிவம் தோன்றும். கரிய நிறத்தையும், கோர வடிவத்தையும் கொண்டு அம்பிகை தன் அடியார்களுக்குத் துன்பம் கொடுப்போரைத் தண்டிப்பாள் என்பதைத் தெரிவிக்கவே காளி என்னும் பெயரை வழங்கியுள்ளார்.

வயிரவி என்னும் பெயரைக் குறிப்பிட்டுள்ளது, காளியின்மறுவடிவமான துர்க்கா தேவியைக் குறிக்கும். துர்க்கை என்றால், போரில் வெற்றியை விளைவிக்கும் வீரமங்கையைக் குறிக்கும். தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அசுரர்களை அழித்துப் போரில் வெற்றியைத் தேடித் தந்தவள் தான் இந்த துர்க்கை. இந்தப் பெயரும் அம்பிகையின் போர்க் கோல வடிவத்தை நினைவு படுத்தும்.

மண்டலி என்றால் சூரிய சந்திர மண்டலத்தில் வீற்றிருப்பவள் என்றும், மாலினி, சூலி, வராகி என்பன மேலது 50ஆவது பாடலில் கூறியுள்ள பெயர்களை மீண்டும் பட்டர் கூறுவாராயினார்.

இவ்வாறு மேலே குறிப்பிட்ட 50ஆவது பாடலிலும் 77ஆவது பாடலிலும் அபிராமி பட்டர், அம்பிகையானவள் உயிர்களுக்கு இன்பத்தை நல்கும் பொருட்டு, மேற்கொள்ளும் போக வடிவத்திற்கான திருப்பெயர்களையும், அடியார்களுக்கு இன்னல் விளைவிப்போரை ஒறுத்தல் பொருட்டு, மேற்கொள்ளும் போர்க் கோல வடிவத்திற்கான திருப்பெயர்களையும் சுட்டிச் செல்கிறார்.

இவ்விதம், "இவ்விரண்டு பாட்டுகளிலும் இருபத்திரண்டு திருப்பெயர்கள் ஓதப்படுவனவற்றை அறியலாம்" என்று திருமதி தேவகி முத்தையா அவர்கள் தம் ஆய்வு நூலில் (அபிராமி அந்தாதி ஆராய்ச்சி) குறிப்பிட்டுள்ளார் என்பது நோக்கத்தக்கதாகும்.

இந்த நூலின் 54வது பக்கத்தில், உலகத்து உயிர்களுக்கெல்லாம் சிவகாம வல்லியே தாயாக இருந்து பேரருள் வழங்குவதையும், அவளே தில்லை நடராசப் பெருமானுக்கு மனைவி, தாய், தங்கை, மகள் என்னும் நிலைகளிலிருந்து, அவன் செயலுக்குத் துணை புரிகின்றாள் என்று குமரகுருபரர் எடுத்துக் கூறியுள்ளதைக் காணலாம்.

அதுபோலவே; அபிராமவல்லியையும் அபிராமி பட்டர் சுட்டிச் செல்கிறார்.

உலகம் பதினான்கையும் அபிராமி தன் திருவருளால் பெற்றாள். அதுபோலவே அவற்றைப் பாதுகாக்கவும் செய்வாள். பின்னர், அவற்றைக் காரண மாயையில் ஒடுக்கவும் செய்பவள். இதனால், சக்தியே முத்தொழிலுக்

கும் மூலகாரணம் எனலாம். இத்தகைய பண்புகளைக் கொண்ட அபிராமி, விடத்தையுடைய நீலகண்டப் பெருமானுக்கு முன்னே பிறந்தவள் என்றும், மூப்பு (முதுமை) அடையாத திருமாலுக்குத் தங்கையாகவும் உள்ளாள் என்றும் குறிப்பிடுகிறார். இதனை,

"பூத்தவ ளே!புவ னம்பதி
னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளே!பின் கரந்தவ
ளே!கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளே!என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே!" .... (மேலது: 13)

என்னும் அடிகளில் காணலாம்.

சென்ற பாடலில் அபிராமி சிவபெருமானுக்கு முன்னே பிறந்தவள் என்று கூறிய அபிராமிபட்டர், பின்வரும் பாடலில் அபிராமி சிவபெருமானின் மனைக்கு மங்கலமாகிய நற்பத்தினியாகத் திகழ்ந்து, சிவனின் செயலுக்கு ஏற்றவாறு துணைபுரிகின்றாள் என்றும், ஒரு திறத்தில் தாயுமானாள் என்றும் கூறுகிறார்.

இச்செய்தி, "சத்தி தத்துவத்தினின்றும் சிவதத்துவம் தோன்றியது" என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் ஒன்றான 'சிவஞான சித்தியார்' எடுத்துக் கூறுவதை வலியுறுத்துகிறது.

மேலும், "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்று அருள் நந்தி சிவம் சிவஞான சித்தியாரில் 165) அருளியுள்ளபடி, மனைவி தாய் என்னும் இரு

நிலைகளிலும் அபிராமி நின்று செயலாற்றுகிறாள் என்பதை ஒருவாறு ஊகித்து அறியலாம்.

மேற்கூறிய கருத்தை விளக்கும் அந்தாதிப் பாடலின் அடிகளைக் கீழே காணலாம்.

"தவளே இவள்எங்கள் சங்கர
னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும்
ஆயினாள்" .... (மேலது: 44)

இறுதியாக, அபிராமிப் பட்டர் மீது பொறாமை கொண்ட சிலர் 'இவர் ஏதோ தேவதையை உபாசித்து அந்தணருக்கு மாறுபாடான ஆசாரங்களை மேற்கொண்டு சிறு தெய்வ வழிபாடு இயற்றிப் பித்துப் பிடித்து அலைகிறார்' என்று குறை கூறியும் ஏசியும் வந்தனர். அபிராமி பட்டரோ அவற்றையெல்லாம் பொய்ப்பிப்பது போல் தாம் இயற்றிய அந்தாதிப் பாடல் ஒன்றில் தெளிவுபடுத்தியுள்ளார்.

"வீணே பலிகவர் தெய்வங்கள்
பால்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்(கு)அன்பு பூண்டுகொண்
டேன்நின் புகழ்ச்சி அன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு
மேனிப்ர காசம் அன்றிக்
காணேன் இருநில மும்திசை
நான்கும் ககனமுமே."

(மேலது: 64)

"அபிராமவல்லியே வீணாக உயிர்ப்பலியை ஏற்றுக் கொள்ளும் சிறு தெய்வங்களிடம் அடியேன் என்றும் அன்பு கொள்ளேன். உன்னிடம் மிக்க அன்பு கொண்டுள்ளேன். அதுவன்றி உன் புகழை அல்லாது, வேறொரு தெய்வத்தினுடைய புகழை ஒரு போதும் விரும்பேன். எத்திசையிலும் உன் திருமேனி யொளியை அன்றிப் பிறிதொன்றையும் காண்கில்லேன்" என்று ஆணித் தரமாகக் கூறுவதிலிருந்து, அபிராமிப் பட்டரின் உண்மைத் தெய்வ வழிபாடு எத்தகைய சிறப்புடன் இருந்தது என்பதை நாம் உய்த்துணரலாம்.

இதுவரை, அபிராமி பட்டர் தாம் இயற்றிய அபிராமி அந்தாதியில், தாம் அம்பிகையை அகத்தே ஒளிவடிவாகவும், புறத்தே பல திருமேனி வடிவங்களாகவும் எவ்வாறு கண்டு மகிழ்ந்து போற்றி வணங்கினார் என்பதையும், இவையெல்லாம் தாம் முற்பிறவியில் செய்த தவப்பயனே என்றும், ஒரு நெறிய வழிபாடாக அபிராமி அன்னையைத் தவிர வேறொரு தெய்வத்தையும் தொழாத தன்மை பூண்டவர், குறிப்பாகப் பலி கொள்ளும் சிறு தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளாதவர் என்பதையும் ஒருவாறு இக்கட்டுரையில் எடுத்துக் கூற முயன்றுள்ளோம்.

துணை நின்ற நூல்கள்:

1. ஜகந்நாதன், கி.வா.உரை, அபிராமி அந்தாதி 1963 அமுத நிலையம் லிமிடெட் சென்னை-14.

2. அபிராமி அந்தாதி, உரை, 1973, தருமபுர ஆதீனம், வெளியீடு எண் 460,

3. அபிராமி அந்தாதி, மூலமும் உரையும் 1993, தி லிட்டில் ப்ளவர் கம்பெனி சென்னை-17.

4. திருக்கடவூர் பிரபந்தத் திரட்டு, தொகுப்பு 1980 ஸாதுராம் ஸ்வாமிகள், பொங்கி மோனாம்பிகை ட்ரஸ்ட், சென்னை-61

5. தேவகி முத்தையா, அபிராமி அந்தாதி ஆராய்ச்சி, இரண்டாம் பதிப்பு 1992, தருமபுர ஆதீன வெளியீடு எண்: 911

6. சாமிநாத ஐயர், டாக்டர் உ.வே., ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, மூலமும் ஆராய்ச்சிக் குறிப்புரையும், 1961, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு.

7. வைத்தியநாதன்,கு. உரையாசிரியர், சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள் (தடைகளும் விடைகளும்), 1992, திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடைமருதூர்.

8. வைத்தியநாதன்,கு. தெளிவுரை சிவ ஞான சித்தியார் பக்கம், 1994 திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடைமருதூர்.

9. திருவாசகம், 2001, அருஞ் சொற்பொருளுடன், அருள் தரும் மாணிக்கவாசகர் மன்றம், இராமாபுரம், வேலூர் மாவட்டம்.

10. அருணவசந்தன், பூசை.,ச., சிவமஞ்சரி. ஐந்தாம் தொகுதி, 2000, சிவசுந்தரி கலைக் கூடம், ஆழ்வார் பேட்டை, சென்னை-18.

புலிசை முனிவர் ஞானியார் அடிகளார்

சைவத் தனிச்சுடரைச் சார்வற்ற மக்கள்தமக்(கு)
உய்வைத் தருஞான ஒண்ணிதியைத் - தெய்வச்
சிவசண்முகஞான தேசிகனை என்றும்
பவங்கழல நெஞ்சே பணி.

- ச. வையாபுரிப் பிள்ளை
(சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறை
முன்னாள் தலைவர்)

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்தவர்; ஞானியார் என்னும் பெயருடையவர். அவர்களைச் சிறுவர் முதல் முதியவர் வரை - படித்தவர், படிக்காதவர், ஏழையர், செல்வர், தொழிலாளி, பெரும் பதவியில் இருந்தவர் எனப் பலரும் அறிவர். ஞானம் உடையவர்; வீடு பயக்கும் உணர்வினை உடையவர்; அன்பில் தழைத்தவர்; அறிவில் திளைத்தவர் என்றெல்லாம் அனைத்து மக்களாலும் போற்றப்பட்டவர்.

போற்றுதலுக்கேற்பச் சைவ சமயத் தலைவராகவும், கற்றுத் தெளிந்த பெரும் புலவராகவும், தலைசிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர், திருவருட் செல்வர் ஞானியார் சுவாமிகள். அவரிடம் முறையாகப் பாடங் கேட்டுப் பெரும் புலவரானோர் பல்லோர். அவரது

சொற்பொழிவுகளைக் கேட்டே புலமை பெற்றோர் அநேகர். அவர்தம் அருளுரைகளைக் காதுகொடுத்துக் கேட்டு, நல்லறமும் நல்லொழுக்கமும் உடையவராகி வாழ்ந்தோர் பற்பலர்.

இவர் தோன்றியது காவிரிக் கரையில் கும்பகோணத்தை அடுத்த திருநாகேச்சுரம் என்னும் திருப்பதியாகும். பிறந்த ஆண்டு ஸ்ரீமுக ஆண்டு, வைகாசித் திங்கள், நான்காம் நாள் (17.5.1873) ஆகும். தந்தை வீரசைவ மரபினரான அண்ணாமலை அய்யர் ஆவர். தாய் பார்வதி அம்மை ஆவர். பெற்றோர் இட்ட பெயர் பழநியாண்டியாகும். காரணம் அவர்கள் வழிபட்ட கடவுள் பழநிவாழ் பரமகுருவான பழநியாண்டி ஆகும்.

காவிரிக் கரையில் பிறந்த பழநியாண்டி - ஆறுமாதக் குழந்தையாக இருக்கும் போதே, கெடிலக்கரையிலுள்ள திருப்பாதிரிப்புலியூருக்கு முன் செய்த தவப் பயனாய் வந்து விட்டார். வந்த இடம் பாடலீசுவரர் சந்நிதித் தெருவிலுள்ள 'ஞானியார் மடாலயம்' ஆகும். இம்மடாலயம், திருக்கோவலூர் ஆதீனத்தைச் சேர்ந்தது. மடாலயத்தின் நான்காம் பட்டத்து அடிகளாரான சண்முக பரசிவ மெய்ஞ்ஞான சுவாமிகளின் ஆணைப்படியே, குழந்தை பழநியாண்டி அழைத்து வரப்பட்டார். அதுமுதல் மடாலயத்திலேயே வளர்ந்து வரலானார்.

இளமைப் பருவத்தில் பழநியாண்டிக்குத் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் கற்பிக்கப்பட்டன. பிரீ மெட்ரிகுலேஷன் (Pre - Matriculation)

வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது, மடாலயத்து அடிகளார், தமக்கு உடல்நிலை மாறுபாடுற்று இறுதிநிலை வந்தெய்துவதை உணர்ந்தார். பழநியாண்டியின் பள்ளிப் படிப்பை நிறுத்தினார்; துறவறம் கொடுத்தார். ஞானியார் மடாலயத்தின் ஐந்தாம் பட்டத்து அடிகளாகப் பட்டம் சூட்டினார். "சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்' என்னும் பட்டப் பெயரையும் அருளினார். (இனிச் சுருக்கமாக இவரை ஞானியார் சுவாமிகள் என்றே இக் கட்டுரை முழுவதும் குறிப்பிடுவோம்)

ஞானியார் சுவாமிகள், தாம் இளமையில் தொடங்கிய கல்வி கற்றலைப் பட்டமேற்றப் பின்னரும் தொடர்ந்தார். தெலுங்கு மொழியை நான்கு ஆண்டுகள் பயின்றார். ஆங்கிலத்தை ஏழு ஆண்டுகள் பயின்றார். தமிழையும் சமஸ்கிருதத்தையும் பதினைந்து ஆண்டுகள் பயின்றார். அவ்வாறு பயின்ற காலை, ஆசிரியர்களைத் தம் இருப்பிடத்திற்கே வருவித்தும், பணிவுடனும் ஆசிரியர் சொல் கடவாமலும் நடந்து கொண்டார். காஞ்சி மகாப் பெரியவரும் வியாகரணம், தருக்கம், வேதாந்தம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகியவற்றை அந்தந்தத் துறை சார்ந்த பண்டிதர்களிடம் கற்றார். அப்போது, மகாப் பெரியவர் பண்டிதர்களிடம் பணிவாகவும், மரியாதை யுடனும் நடந்து கொண்டது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

சைவமும், தமிழும் தழைக்க ஞானியார் சுவாமிகள் பல ஊர்களிலும் தமது தலைமையில், பல கழகங்களையும் சங்கங்களையும் தோற்றுவித்தார்.

எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டினைக் குறிப்பிடலாம்.

தமிழுக்கு:

பாலவாநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் வாயிலாக மதுரையில் 24.5.1901 இல் 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' என்று சுவாமிகளின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டதாகும். அது மிகச் சிறப்பானது.

1942ல் புதுவையில் சித்திரைத் திங்கள் முதல் நாளில் "கலைமகள் கழகம்' என்னும் பெயரில் ஒன்றைத் தோற்றுவித்தார். அக் கழகத்தின் சார்பில் 1913 இல் 'கலைமகள்' என்ற மாத இதழைத் தொடங்கினார். அதன் முதல் இதழுக்குச் சுவாமிகள் ஆசியருளித் திருமுகம் எழுதியுள்ளார் எனப் புலவரும் அவரது மாணாக்கருமாகிய திரு. க.பா. வேல்முருகன் அவர்கள் எழுதிய 'சிவத்திரு ஞானியார் அடிகள் வரலாறு' என்னும் நூலிலிருந்து அறிய வருகிறது.

சைவத்திற்கு:

சைவம் தழைக்கச் சுவாமிகள் சைவ சித்தாந்த சமாஜம் ஒன்றை 07.07.1905 இல் மடாலயத்தில் தோற்றுவித்தார். அதன் சார்பாகப் பல இடங்களில் சமாஜ மாநாடுகள் நடத்தி வந்தார். அந்தச் சைவ சித்தாந்த மகாசமாஜமே தற்போது சென்னையிலுள்ள சைவ சித்தாந்த பெருமன்றம் ஆகும். அதன் வெளியீடாக இன்றும் வெளியாகிக் கொண்டிருக்கும் 'சித்தாந்தம்' என்னும் திங்களிதழும் சுவாமிகளால் நிறுவப்பட்டதாகும்.

ஏழை எளியவர் எல்லாரும் கல்வி அறிவு பெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், பாடலீசுவரர் சந்நிதித் தெருவில் 'ஸ்ரீ பாடலீசுவரர் தர்ம பாடசாலை'யைத் தோற்றுவித்தார். தமது இறுதிக் காலத்தில் மடத்திற்குள்ளேயே "ஞானியார் பாடசாலை" என்னும் பள்ளியையும் நிறுவினார். தாமே பாடங்களையும் நடத்தி வந்ததுண்டு. பாடசாலையில் வகுப்பு நேரம் முடிந்த பின்னும், தனித்த முறையில் பலருக்கும் பாடம் சொல்லி வந்தார்.

அவ்விதம் பாடம் கேட்டவர்களுள் இந்நூலாசிரியரும் அடங்குவார். கிறித்துவப் பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டிருந்த இந்நூலாசிரியர், பள்ளி நேரம் முடிந்த பிறகு, நேரே ஞானியார் மடத்திற்கு வந்து பாடங் கேட்பது வழக்கம். அப்போது, அந்தக் கிறித்துவப் பள்ளி ஆசிரியராகிய கிறித்துவரும் வந்து பாடம் கேட்பார். இது நடந்தது 1938 முதல் 1941 வரையில் ஆகும்.

சுவாமிகள் வீர சைவராக இருந்த போதிலும், பிற மதத்தினர்பால், மதிப்புடையவர். மேற்குறிப்பிட்ட கிறித்துவர் போன்றே ஒருமுறை எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் தோல்வியுற்ற முகமதியச் சிறுவர் ஒருத்தருக்குத் தமிழ்ப் பாடம் கற்பித்து அவரை 80 மதிப்பெண்கள் வாங்கித் தேர்வில் வெற்றி பெறச் செய்தார்.

ஞாயிறு, கிருத்திகை ஆகிய தினங்களிலும், கந்த சஷ்டி வசந்த உற்சவம் போன்ற விழாக் காலங்களிலும்

மடாலயத்தில் சொற்பொழிவு நடத்துவார். சொற்பொழிவு மாலை ஐந்து மணியளவில் தொடங்கி, இரவு பத்து மணி வரை நடைபெறும். கணீரென்ற குரலில் (ஒலிபெருக்கி இல்லாத அக்காலத்தில்) 5 மணி நேரம் யாதொரு அசைவுமின்றித் தொடர்ந்து உரையாற்றுவார். ('ஞானியாரின் அந்தச் சொற்பொழிவுகளையும் இந்நூலாசிரியர் இறைவன் அருளால் கேட்கும் வாய்ப்பைப் பெற்றவர் ஆவார்)

ஞானியார் உருவத் தோற்றத்தை நேரில் பார்க்கும் வாய்ப்பும் பெற்றவர் எவரும் 'இதோ ஒரு ஞானியார் - அன்பே சிவமாக அமர்ந்திருக்கும் பெரியார் இவரல்லவோ" என்னும் பெருமிதம் அடைவர்.

இப்பெரியார், தம் வாழ்நாள் முழுவதும் அக்கால மடாலய மரபுப்படி பல்லக்கிலேயே அமர்ந்து, தமிழகம் முழுவதும் தல யாத்திரை மேற்கொண்டார். ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலியோர் தலங்கள் தோறும் சென்று, தேவாரப் பாடல்கள் மூலம் சைவத்தையும், தமிழையும் வளர்த்தது போல், ஞானியார் சுவாமிகளும் தம் சொற்பொழிவுகள் மூலம் அவற்றை வளர்த்தார்.

சுவாமிகள் இறுதியாகச் சொற்பொழிவாற்றியது பழநியில்தான். பழநி சைவ சித்தாந்த சபையின் ஆண்டு விழாவிற்குச் சென்று தலைமை தாங்கினார்கள்; சொற்பொழிவாற்றினார்கள். அவ்விதம் 23.1.1942 முதல் 31.1.1942 வரை பழநி கோயில் திருவிழாவை முன்னிட்டு நாடோறும் சொற்பொழிவு அருளினார்கள்.

கடைசி நாளன்று மாலை ‘சிவராசயோகம்’ என்னும் பொருள் பற்றி அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். அதுதான் அவரது கடைசி சொற்பொழிவாகவும் அமைந்து விட்டது. சொற்பொழிவு இரவு 9.30க்கு முடிவுற்றது. அதன் பிறகு சுவாமிகள் மலை மீதேறிப் பழநியாண்டவரை வணங்கிய பின்னர்க் கீழிறங்கி வந்து தங்கும் விடுதியை அடைந்தார்.

வைகறை மூன்று மணிக்குப் பழநியிலிருந்து திருச்சிக்குப் புறப்பட்டார். பயணம் பல்லக்கில்தான். பழநிக்கு 11 கி.மீ. தொலைவிலுள்ள ‘சித்திலவாடன்பட்டி’ என்னும் ஊரை நெருங்கிக் கொண்டிருந்தபோது, திடீரென அவரது உடல் நிலையில் மாறுதல் ஏற்பட்டது. பழநிக்குச் செய்தி பறந்தது. மருத்துவர் வருவதற்குள் 01.02.1942 ஆம் நாள் விடியற்காலை 69 ஆம் வயதில் அடிகளார் இறைவனடி எய்தினார்கள்.

ஞானியார் சுவாமிகளின் பூர்வாசிரமப் பெற்றோர், தாம் வழிபட்டு கடவுள் பழநி வாழ் பரமகுருவான பழநியாண்டி யின் நாமத்தையே அடிகளாருக்குச் சூட்டினர். பழநி யாண்டவர் அருளால் தோன்றி அவர் நாமத்தையே பெற்ற சுவாமிகள், தைப்பூச நன்னாளிலேயே, பழநியம்பதிச் சூழலிலே பரம் பொருளுடன் கலந்தது; சுவாமிகளின் முன் செய்த தவப் பயனே அன்றிப் பிறிதொன்றும் கூற இயலுமோ?

சமயச் சொற்பொழிவுகளாற்றுவதிலும், கல்வி கற்பிப்பதிலும் தம் வாழ்நாளைக் கழித்து விட்டதால், சுவாமிகளால் நூல்கள் இயற்றப்படவில்லை.

சுவாமிகளுடைய சொற்பொழிவுகளை யாராவது குறிப்பெடுத்து நூல் வடிவில் கொண்டு வந்திருந்தால் எத்தனையோ நூல்கள் நமக்குக் கிடைத்திருக்கும். இருப்பினும், சுவாமிகள் கந்தர் சஷ்டியின் போது செய்த சொற்பொழிவுகளுள் சில சுவாமிகளின் மாணாக்கரான வித்வான் முத்து இராசாக் கண்ணனார் அவர்களால் குறிப்பெடுக்கப்பட்டுக் கந்தர் சஷ்டிச் சொற்பொழிவுகள் என்னும் நூல் 1941 இல் வெளியானது.

ஆயினும் சுவாமிகளால் நூல் இயற்றப்படாமல் இல்லை. அவை சிறு நூல்களே. அவையாவன:

1. குருதுதி - 49 வெண்பாக்கள் கொண்டது
2. ஞானதேசிக மாலை - ஆசிரிய விருத்தம்
3. திலகவதிம்மை துதி - ஆசிரிய விருத்தம்

இம்மூன்றனுள் திலகவதியம்மை துதியை இந்நூலில் பிற்சேர்க்கையாக இணைந்துள்ளோம்.

இவ்விதம், சைவத்திற்கும் தமிழுக்கும் சுவாமிகள் ஏற்றி வைத்த ஒளிவிளக்குகள் யாண்டும் ஒளிபரப்புகின்றன.

துணை நின்ற நூல்கள்

1. வேல்முருகன், க.பா., புலவர். சிவத்திரு ஞானியார் அடிகள் வரலாறு, சிவத்திரு ஞானியாரடிகள் நூற்றாண்டு விழாக் குழு, ஸ்ரீமத் ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர், 1993.

2. சுந்தர சண்முகனார், புலவர், புலிசை ஞானியார் அடிகளார், புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகத்தார், வெளியீடு, 1993.

3. இரத்தின சபாபதி, வை., டாக்டர் தவத்திரு ஞானியார் அடிகள், சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம், பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா மலர், சென்னை - 1988.

பிற்சேர்க்கை

திலகவதியம்மை துதி

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

1. உலகமெலாந் திருநீற்றின் ஒளிவிளங்க
மணிவிளங்க உவகை யோடும்
பலகலைசொ லைந்தெழுத்து விளங்கவரன்
பெயர்விளங்கப் பான்மை யோடு
தலம்விளங்க மறைவிளங்க அப்பருக்குத்
திருநீறு சாற்றித் தந்த
திலகவதி யம்மையா ரடிக்கமல
மிரண்டினையுஞ் சிரத்திற் சேர்ப்பாம்.

2. நீயிலையேற் சைவமெனுஞ் சமயமெங்கே
அப்பரெங்கே? நேய மெங்கே?
கோயிலையாம் அடைவதெங்கே? குறிக்கோளுங்
கொள்வதெங்கே? குருதா னெங்கே?
காயிலைவேற் பரசிணாத்தாங் கரனெங்கே?
தேவாரங் கருத லெங்கே?
மாயிருஞா லம்போற்றுந் திலகவதீ
நின்னடியை வணங்கி வாழ்வாம்.

3\. உடன்பிறந்தார் பாலன்பும் உனைப்போல
யார்க்குண்டென் றுலகம் ஓத
உடன்பிறந்த அப்பருக்காச் சுவர்க்கசுகந்
தனையிழந்தாய் உண்மை யீதே
உடலணியும் அணிநீக்கி எவ்வுயிர்க்கும்
அருள்கொண்டாய் உன்னுங் காலை
மடனொழித்த திலகவதீ நின்னடியைப்
பெரியோர்கள் வணங்கி வாழ்வார்.

4\. அப்பருமே நினையடைந்து மாசொழிந்தார்
நோயொழிந்தார் அளவில் சீர்த்தி
செப்பருந்தே வாரஞ்சொல் திறம்பெற்றார்
சிவஞானத் திறம்பெற் றுய்ந்தார்
ஒப்பதிக மில்லாத இறைநாவுக்
கரசென்ன ஓதப் பெற்றார்
எப்பொழுதும் உனைநினைத்துத் திலகவதி
யம்மைநலம் எய்தி வாழ்வாம்.

5\. அடியேனை யாண்டருளும் அப்பரையே
எளியேங்கட் களித்தாய் போற்றி
கொடியேனை வாழ்விக்கும் தமிழ்மறையை
யாம்ஓதக் கொடுத்தாய் போற்றி
அடிமுடியு மில்லாத சிவநெறியை
யாம்பேண அளித்தாய் போற்றி
பொடியேறு திருமேனித் திலவதி
யம்மையே போற்றி போற்றி.

(எழுசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

6. *சுதிதனை யடைய வனந்தனை யடைவர்*
கடலொடு கலந்துமேம் பட்ட
நதிதனை யடைவர் மலையினை யடைவர்
நானிலம் வலம்வரு வார்கள்
விதியிது வென்னப் பலபல செய்வர்
விளங்கநா னிவையெலாஞ் செய்யேன்
அதிகைவாழ் திலக வதிப்பெய ரம்மை
அடைவனே நீகதி யாக.

(நேரிசை வெண்பா)

7. *திலகவதித் தாயே திருவுளமி ரங்காய்*
உலகிற் பிறவா உயர்வை - அலகிலா
இன்பத்தை யானடைய இன்றே யருள்செய்வாய்
துன்ப மகலத் தொலைத்து.

கருணாமூர்த்தி காஞ்சி மாமுனிவர்

ஒப்பிலாக் கருணையே உயிரினுக் கமுதே
இப்பிறவி மாறிடினும் இதயதீப ஜோதியே
செப்பரிய சின்மயத் திருவிளங்கும் இன்பமே
அப்ப காமகோடி பீடத்தரசு வாழ்கவே

-கவியோகி சுத்தானந்த பாரதி

நாட்டிற்கும் மக்களுக்கும் சோதனை ஏற்படும் போதெல்லாம் சான்றோர்;கள், மகான்கள், அருளாளர்கள் எனப் பலர் தோன்றுகின்றனர். தோன்றி, நாட்டையும், மக்களையும் நல்வழிப்படுத்திச் செல்கின்றனர்.

ஆதிசங்கரர் தோன்றிப் பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்றே என்னும் அத்வைதக் கொள்கையை உருவாக்கினார். அதன் மூலம், மக்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அந்த ஆதிசங்கரரின் மறு பிறப்பாகவே போற்றப்பட்டு நம் காலத்தில் நூறாண்டுகள் வாழ்ந்து, முக்தி அடைந்தவர் ஜெகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள் ஆவர்.

ஒரு மகான் புவியில் தோன்றுகிறார் என்றால், அதற்குரிய நட்சத்திரம் அமைவது, ஒரு நியதியாகவே இருந்து வருகிறது. அந்த வகையில், ஜெகத்குரு

பரமாசாரியார் தோன்றுவதற்கு அமைந்த நட்சத்திரம் அனுஷமாகும்.

பெருந்தன்மையும், விசேஷ குணங்களும் பரமாசாரி யார் அவர்களிடம் நிரம்பவே இருந்தன.

பரமாசாரியார் அவ்கள் 1907 இல் தமது 13 ஆவது வயதில், காஞ்சி காமகோடி பீடத்தின் 68 ஆவது பீடாதிபதியாகப் பதவி ஏற்றார். மடாபதிபதியாக ஓரிடத்திலேயே தங்கி இருக்காமல், மக்களை நேரில் சந்தித்து, அவர்கள் உய்யப் பல வகைகளில் ஆன்மிகத் தொண்டும், சமூகத் தொண்டும் செய்யும் பொருட்டு, விஜய யாத்திரையை மேற்கொண்டார். அப்போது சில நெறிகளைக் கடைப்பிடித்தார்.

அவற்றுள், மக்களின் ஆன்மிக உணர்வுக்கு வழிகாட்டும் ஞான நெறியும், சமூக உணர்வுக்கு வழிகாட்டும் அன்பு நெறியும் சிறப்பாக அமைந்தன.

ஆன்மிக உணர்வுக்கு அடித்தளமாக அமைவது குரு பக்தியாகும். யார் ஒருவர் குரு பக்தியில் சிறந்து ஓங்குகிறாரோ அவர் இடந்தேடி இறையருள் வந்தெய்தும் என்பது பரமாசார்ரியாரின் அருள் வாக்காகும். இதை, அவர் தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார். அதன்படி, தாம் மேற்கொண்ட விஜய யாத்திரையின் போது, தமக்கு முன் பதவி வகித்த பீடாதிபதிகளின் அதிஷ்டானங்களைத் தரிசிப்பதைத் தவறாது கைக்கொண்டார்.

பரமாச்சாரியார் அவர்கள், மதக் கொள்கையில் பரந்த மனப்பாங்கும் சகிப்புத் தன்மையும் உடையவராய் இருந்தார். இதனாலேயே, அந்தந்த மதத்தினர் அவரவர்

மதத்தில் இருந்து கொண்டே இறைவனை வழிபட வேண்டும் என்று உபதேசித்தார். இவற்றின் காரண மாகவே, பிற மதத்தினரும் இவரிடத்தில் அன்பையும், மரியாதையையும் செலுத்தினர்.

ஆலயங்களின் திருப்பணிகளுக்கும், கும்பாபிஷேகங் களுக்கும், நிரம்ப உதவி செய்யும் பொருட்டு 'க்ஷேத்திர பரிபாலன சபை' ஒன்றை ஏற்படுத்தினார். அதன்மூலம், வசதியற்ற கோயில்களுக்கும், இருவேளை தீபமும் ஒருவேளை நிவேதனமும் செய்யவும், ஆலயத் திருப்பணிகள் செய்யவும் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்தார்.

இனிச் சமூக உணர்வுக்கு வழிகாட்டும் அன்பு நெறியை எவ்வாறு கடைப்பிடித்தார்? உபதேசித்தார் என்பவற்றைப் பார்ப்போம்.

ஏழைகளுக்கு நம்மாலான உதவிகளை நாம் செய்ய வேண்டும். பெரும்பாலான ஏழைகள் கிராமத்தில்தான் வாழ்கிறார்கள். அவர்கள் நன்மையை மற்றவர்கள் கவனித்தால்தான் கிராமமும் கிராமத்தாரும் செழிப்படைய முடியும் என்று உபதேசித்தார்.

இதைப் பரமாசாரியாரே கடைப்பிடித்து, மக்களுக்கு வழிகாட்டினார். இதற்கு ஆதாரமாக, ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். 1924 ஆம் ஆண்டு பரமாசாரியார் திருவையாற்றில் முகாமிட்டிருந்தார். அந்தச் சமயம், காவிரியாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. அதனால் காவிரியின் கரை ஓரமாக வாழ்ந்த ஏழைகளின் குடிசைகள் நீரில் மூழ்கின. அங்கு ஏழைகள் தாம்

பெரும்பான்மையாக வாழ்ந்தனர். அவர்களின் ஆடுமாடு களும், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பாதிப் பைச் சுவாமிகள் நேரில் கண்டு, எந்தெந்த வழிகளில் உதவி செய்ய முடியுமோ அந்தந்த வழிகளில் அதை நிறைவேற்றி வைத்தார். மேலும், சுமார் 15 நாள்களுக்கு அன்னதானம் செய்வித்தமையும் சுவாமி களது சமூகப் பணியின் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

மற்றும் ஏழைகளுக்கும், பள்ளியில் பயிலும் ஏழைச் சிறுவர்களுக்கும் உதவும் பொருட்டு, பிடி அரிசித் திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார். இதன்படி, நாடோறும் உணவு சமைக்கும் போது, உபகார நோக்குடன், ஒரு பிடி அரிசி யைச் சேமித்து வைத்துக் கொண்டு, சேமித்த அரிசியைக் கோயிலில் நிவேதனமாக்கிக் கடவுளுக்குப் படைத்து, ஏழைகளுக்கும் பள்ளியில் பயிலும் ஏழைச் சிறார்களுக் கும் வழங்கப்பட வேண்டும் என்று உபதேசித்தார்.

இவ்விதம், பரமாசாரியார் ஏழைகள்பால் அன்பு நெறியைக் கடைப்பிடித்ததை,

''வறிஞர்க்கு என்றும் நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்''

என்ற அருணகிரிநாதர் வாக்குகளை ஒப்பு நோக்கலாம்.

ஒரு சமயம், ஆசையைப் பற்றி ஓர் உபதேசம் செய்தார். காமம் என்பது வெளியில் இருக்கிற ஓர் ஆசை. வெளியில் இருக்கும்படியான ஒரு பொருள் கிடைப்பதனால் தான், ஒரு சந்தோஷம் ஓர் ஆனந்தம் என்று, வெளியிலே காமத்தைக் காண்கிறவன் இருக்கிறானே, அவனுக்குச் சாந்தி என்பது என்றைக்கும் உண்டாகாது.

எப்படி எவ்வளவு மகாநதிகள் வந்தாலும், சமுத்திரம் அவற்றை எல்லாம் தன்னோடு சேர்த்துக் கொள்ளுகிறதோ அந்தச் சமுத்திரத்திலிருந்து பேரனவை தாமே அவை யெல்லாம் திரும்ப வரும்போது; அந்த மகா சமுத்திரத் தோடேயே அவை எப்படிக் கலந்து விடுகின்றனவோ, அப்படி உள்ளே இருக்கும் படியான ஆனந்தத் திவிலை கள் தாமே வெளியே இருப்பவை. அவ்வளவையும் உள்ளே இருக்கும்படியான ஆனந்தத்தோடேயே சேர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, வெளியே அது இருக்கிறதே, இது இருக்கிறதே, அது வேண்டுமே, இதுவேண்டுமே என்று துரத்திக் கொண்டு போகக் கூடாது. எல்லாம் உள்ளேதான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு விட்டானானால், அவன் தான் சாந்தி அடைகிறான்.

நம் பாரத நாடு முழுவதும் பாத யாத்திரையாகவே சென்று, ஆங்காங்கே உள்ள மக்களை நேரில் சந்தித்து, அவர்களிடையே ஆன்மிக உணர்வையும் சமூகச் சேவை உணர்வையும் ஊட்டி, அரும்பணி புரிந்த நடமாடும் தெய்வமாக, நம்மிடையே உலாவிய காஞ்சி மாமுனிவரான ஜெகத்குரு சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகளை எண்ணத்தாலும், செயலாலும் வணங்கி, அவர் உபதேசித்தவற்றைப் பின்பற்றி நடப்போமாக!

துணைநின்ற நூல்கள்:

1. நடமாடும் கடவுள், சங்கரநாராயணன், ஆர்.
2. வெள்ளிவிழா பிக்ஷாவந்தனம், சிறப்பு மலர், நெய்வேலி 1985.

ஆசிரியரைப் பற்றி...

இந்நூலின் ஆசிரியர் ப. இராமலிங்கம் அவர்கள், கல்லூரியில் வேதியல் ஆசிரியராகப் பணிபுரிந்தும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் அறிவியல் அலுவலராகப் பணிபுரிந்தும் ஓய்வு பெற்றவர். ஓய்வுக்குப் பிறகு தஞ்சைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

'வாழும் தமிழ் உலகம்', 'மங்களம்' ஆகிய இதழ்களின் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். 'கலைக்கதிர்', 'களஞ்சியம்' ஆகிய இதழ்களின் ஆசிரியர்க் குழுவில் இடம் பெற்றவர். அறிவியல் நூல்களும் ஆன்மிக நூல்களும் பல இயற்றியுள்ளார்.

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கேற்றவர். 'நெய்தற்கிழான்' எனும் புனைபெயரில் கவிதைகளையும், 'விருப்பாட்சியான்' எனும் புனை பெயரில் ஆன்மிகக் கட்டுரைகளையும் எழுதி வருபவர். நாடகத் துறையிலும் ஈடுபட்டு நாடகங்கள் பலவற்றில் நடித்துள்ளார்.